Koviloor Digital Library

ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாணம்



A.No.15611
Q:22 4/2

மைதிலி வேணுகோபால்

நர்மதா வெளியீடு

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-2

ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாணம்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 15611
a'22

மைதிலி வேணுகோபால்

சென்னை மத்திய சிறைநூலகத்திற்கு
அன்பளிப்பு

நர்மதா

நர்மதா பதிப்பகம்
நல்ல நூல் வெளியீட்டாளர்கள்
16/7, ராஜாபாதர் தெரு, பாண்டிபஜார்
தியாகராய நகர், சென்னை-600 017

Koviloor Digital Library

இந்நூலின் ஆக்கத்திற்கு பல் வகையிலும் உதவி புரிந்த ஸ்ரீவில்லிபுத்தூர் ஈஸ்வரி புத்தக நிலைய உரிமையாளரவர்கட்கு எங்களது நீங்கா நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

●●●

N 426

PRICE Rs. 17/-

● Sri Aandaal Thirukkalyanam — by Mythili Venugopal ● First Edition : December 1985 ● This Edition : May 1993 ● Published by : T.S. Ramalingam, Narmadha Pathipagam, 16/7, Rajabathar St, Pondybazaar Madras-600 017. ● Printed at : Manian Achagam, 172, Shunmugam Pillai St, Madras-600 004. ●

Koviloor Digital Library 4-2

பொருளடக்கம்

● முன்னுரை	5
● ஸ்ரீமதே ராமாநுஜாய நம :	8
● நாச்சியார் திருமொழி	13
● அவதாரமும் காலமும்	17
● நற்பலன்கள்	18
● கண்ணனுடன் கூட்டிவை	22
● சிரிதரா சிற்றிலைச் சிதையேல்	26
● கண்ணா! கூறையைக் கொடுத்திடு	32
● குயிலே கோவிந்தன் வரக்கூவு	48
● பெருமை பெற்ற கனவு	54
● மேக விடு தூது	71
● பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள்	77
● அரங்கா! அநீதி! அநீதி!	91
● கண்ணனிடம் உய்த்திடுமின்	95
● வாட்டத்தைத் தணிப்பீர்	97
● கண்டேன், களி கொண்டேன்	104
● பூஜை-பாராயணம்	116
● திருப்பாவை நாமாவளிகள்	118
● நாச்சியார் திருமொழிப் பாசுரங்கள்	122

Koviloor Digital Library

வாசித்தீர்களா?
நர்மதாவின் புதிய நூல்கள்

பரமாச்சார்யர் (காஞ்சி பெரியவர்கள் பற்றிய நூல்)	பரந்தாமன்	30-00
சுந்தரகாண்டம்	பி.எஸ். ஆச்சார்யா	12-00
உபநிஷதங்களின் சாரம்	,,	8-50
இந்து பண்டிகைகள்-வழிபாட்டு முறைகள்	சியாமளா ராகவன்	11-00
கருணை பொழியும் ஸ்ரீ சத்யசாயி	ஆச்சார்யா	15-00
இந்து தர்ம சாஸ்திரம்	,,	20-00
பிரார்த்தனைக் களஞ்சியம்		3-50
இளைஞர்களுக்கு இந்து மதம்	சின்மயானந்தர்	12-00
அநுமன் கதை	மா. சீதாராமன்	28-00
சத்திய தரிசனம்	லட்சுமி சுப்பிரமணியம்	11-00
குரு உபதேசம்	Dr. K.K.R.	10-00
இந்து சமய தத்துவங்கள் 500	பி.எஸ். ஆச்சார்யா	12-00
அம்பாள் அர்ச்சனை 1008	உமா மகேஸ்வரி	7-50
திருமலை வைபவம் வரலாறு	வெ. நாராயணஸ்வாமி	12-00
காளிதாசரின் உலக மகா காவியங்கள்		25-00
திருமலையான் திருவருள்	நாகர்கோவில் கிருஷ்ணன்	35-00
திருக்குறள்-மூலமும், உரையும் (எளிய தமிழில்)	நாராயண வேலுப்பிள்ளை	40-00
பிள்ளையார் கதைகள்	சரஸ்வதி	18-00
நல்வழி காட்டும் ராமாயணம்	என். பார்வதி	15-00
மகாகவி பாரதியின் பகவக்கீதை	பாரதியார்	20-00
ஸ்ரீ மகா பக்த விஜயம் பாகம்-I	நாகர்கோவில் கிருஷ்ணன்	70-00
ஸ்ரீ மகா பக்த விஷயம் பாகம்-II	,,	75-00
அருள் பெறற நாயன்மார்கள்	,,	70-00

நர்மதா பதிப்பகம் சென்னை-17

Koviloor Digital Library

உ

முன்னுரை

தெய்வத் திருமணங்களிலேயே, ஸ்ரீ ஆண்டாளின் திருக்கல்யாணந்தான் மிக மிகப் பெருமை வாய்ந்தது. இதில் துளியும் சந்தேகமேயில்லை. ஏனெனில், ஆண்டாள் மானிடப் பெண்ணாகப் பிறந்து, அர்ச்சா மூர்த்தியாய் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அரங்கனை, அவனின் அர்ச்சையிலே மணந்தவள். சீதை, ருக்மிணியுங்கூட இந்தப் பெருமைக்குத் தகுதி உடையவர்கள் அல்ல. சீதை, ருக்மிணிப் பிராட்டிகளின் அவதாரத்தின்போது, எம்பெருமானும் அவதாரம் செய்திருந்ததினால், இந்தத் திருமணங்களிலே ஆச்சரியம் ஏதுமில்லை.

ஆனால், ஆண்டாள் மானிடப் பெண்ணாகப் பிறந்து, மிக மிக உறுதியான பக்தியோடு, எம்பெருமானை அவனுடைய அர்ச்சை பிறவியிலே மணந்தாள் என்று கேட்கும்போது, சஞ்சலமில்லாத நிலையான பக்தியின் பெருமையைப் புரிந்து கொள்ள முடிகிறது.

இத்தகைய பக்தி இருந்தால், எதையுமே சாதித்து விடமுடியும் என்பதை ஆண்டாள், நடத்திக் காட்டி விட்டாள்.

ஆண்டாளுடைய சரிதத்தைப் படிக்கும்போது, கலங்கிய மனம் தெளிவடைகிறது. உற்சாகமும், தெம்பும் பிறக்கிறது. நம்பிக்கை துளிர் விடுகிறது.

Koviloor Digital Library

அவள் பாசுரங்களைப் பக்தியோடு படித்தால், கனவிலும் எண்ணிப் பார்க்க இயலாததைக்கூட, அலட்சியமாக செய்து முடிக்கலாம். இது, கண்கண்ட உண்மை. சொந்த அநுபவத்திலே சொல்லப்படுகின்ற வார்த்தைகள்.

பெண்மணிகளும், குழந்தைகளும், பெரியவர்களும், திருப்பாவையைப் பக்தியோடு பாராயணம் பண்ண வேண்டும். நாச்சியார் திருமொழியைத் தினமும் பாராயணம் செய்யவேண்டும்.

அர்த்தம் தெரிந்து கொண்டு படித்தால், படிப்பதற்கு ரசமாயிருக்கும். அதிகப் பலன்களும் பெறலாம். இன்னும் மேன்மேலும் படித்து இன்புறலாமே என்கிற எண்ணத்தினாலேதான், நாச்சியார் திருமொழியிலிருந்து சில பாசுரங்களை எடுத்து, அவற்றுக்கு விளக்கம் சொல்கிற முறையில், கதை போல இந்நூலை உருவாக்கி யிருக்கிறேன்.

அந்த நோக்கத்தைப் புரிந்து கொண்டு, ஆஸ்தி கர்கள் அனைவரும், எவ்வித பேதமுமின்றி, இந்நூலை வாங்கி ஆதரிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள் கிறேன்.

ஸ்ரீமான் ராமஸ்வாமி ராமானுஜம் அவர்கள், ஒரு அற்புதமான பெரியவர். உடல் நலம் மிகவும் மோசமா யிருக்கும் போதுகூட, என் மீதுள்ள மட்டற்ற அன்பினா லும், பரிவினாலும் தன்னுடைய அசௌக்கியத்தையும், உபாதையையும் மறந்து, கையெழுத்துப் பிரதியைத் திருத்திக் கொடுத்து உதவினார். இல்லையேல், இந்நூல் அச்சேறியிருக்கவே முடியாது. அவருக்கு எவ்விதமாக நன்றியும் வணக்கமும் கூறினாலும், போதவே போதாது. என் மனப்பூர்வமான நன்றியையும் வணக் கத்தையும் தெரிவித்து, தெண்டம் சமர்ப்பிக்கிறேன்.

Koviloor Digital Library

நர்மதா பதிப்பகம் திரு ஸ்ரீநிவாஸன் ராமலிங்கம் அவர்கள்தான் இந்த நூலை எழுதுவதற்கு எனக்குப் போதிய ஊக்கமும் உற்சாகமும் அளித்தார். பக்தி நூல்களையும், பயனுள்ள நல்ல நூல்களையும் வெளியிட்டு வருகின்றார். அவரது தூண்டுதல் இல்லா விடில், இந்த நூலை நான் எழுதியிருக்கவே மாட்டேன். அவருக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூலை மிக நல்ல முறையிலே, அச்சிட்டுக் கொடுத்திருக்கும் மணியன் அச்சகம் உரிமையாளர் 'தேரி' திரு. எஸ். சுப்பிரமணியன் அவர்களுக்கு என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னை அன்புடன் ஆதரித்து வருகின்ற, என் பத்திரிகை ஆசிரிய நண்பர்களுக்கு, இந்த சந்தர்ப் பத்தில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

ஸ்ரீ ஆண்டாளின் கிருபையினால், நடப்பன எல்லாமே நல்லதாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. மிக்க நன்றியுடன்,

மிக்க அன்புடன்,

சென்னை-86. **மைதிலி வேணுகோபால்**

Koviloor Digital Library

உ

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

வேயர் புகழ் வில்லிபுத்தூர் ஆடிப்பூரம்
 மேன்மேலும் மிக விளங்க, விட்டுச்சித்தன்—
தூய திருமகளாய் வந்து அரங்கனார்க்குத்
 துழாய்மாலை சூடிக் கொடுத்த மாதே
நேயமுடன் திருப்பாவை பாட்டு ஆறு ஐந்தும்
 நீ உரைத்த தையொரு திங்கட்பா மாலை
ஆயபுகழ் நூறுடன் நாற்பத்து மூன்றும்
 அன்புடனே அடியேனுக்கு அருள்செய் நீயே.

(ஸ்ரீ தேசிகபிரபந்தம்—பிரபந்தசாரம்-10)

வேயர் குடியிலே புகழ் பெற்று, ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் தலைவராய் விளங்கி வந்தார், விஷ்ணுசித்தர். ஆடிப்பூரம் வருடா வருடம் வந்து கொண்டுதான் இருக்கிறது. அது எப்போது புகழ் பெற்றது?

விஷ்ணுசித்தருக்கு ஆடிப்பூரத்திலே திருமகளாய், ஆண்டாள் அவதரித்த பின்னர்தான் அது மேன்மை பெற்றது. அரங்கனான எம்பெருமானுக்குத் தான் சூடிக் களைந்த மாலையைக் கொடுத்த மாதரசி, ஆண்டாள். திருப்பாவை முப்பதும், நாச்சியார் திருமொழி நூற்று நாற்பத்து மூன்றும் எனக்குக் கண்ட பாடமாய் அநுஸந்திக்கும்படியும், அர்த்த விசேஷங்களை நான் அறிந்து ஓதி, இன்புறும்படியும் எனக்கு அருள் புரிவாய், ஸ்ரீ ஆண்டாள் நாச்சியாரே!

Koviloor Digital Library

இன்றோ திருவாடிப்பூரம் எனக்காக
அன்றோ இங்கு ஆண்டாள் அவதரித்தாள்— குன்றாத
வாழ்வான வைகுந்தவான் போகந்தன்னை இகழ்ந்து
ஆழ்வார் திருமகளாராய்.

கோலாகலத்தையும், கொண்டாட்டத்தையும் பாருங்கள். இன்றுதான் திருவாடிப்பூரம். நமக்காகத்தான் ஆண்டாள் அவதரித்திருக்கிறாள். கிணற்றிலே விழுந்துள்ள குழந்தையை வெளியே எடுக்க,தாய், தானும் கிணற்றிலே குதிப்பது போல, இந்த ஸம்ஸாரக் கடலிலே விழுந்து விட்ட நம்மை கரையேற்ற தானும் இந்த ஸம்ஸாரத்திலே குதித்து இருக்கிறாள்! என்ன கருணை! வைகுண்டத்திலே யுள்ள சுகபோகங்களையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு, பெரியாழ்வாரின் பெண்ணாக வந்து அவதரித்துள்ள அவள் கருணையைக் கண்டு மனமுருகி, அவளைப் பின் பற்றுவோமே!

பெரியாழ்வார் பெண்பிள்ளையாய் ஆண்டாள் பிறந்த
திருஆடிப்பூரத்தின் சீர்மை— ஒரு நாளைக்
குண்டோ மனமே உணர்ந்து பார், ஆண்டாளுக்
குண்டாகில் ஒப்பு இதற்குமுண்டு.

திரு ஆடிப்பூரத்தின் பெருமை, வேறெந்த நாளுக்குமே கிடையாதே. ஒரு வருஷத்திலே, முன்னூற்று அறுபத் தைந்து நாட்கள் இருக்கின்றனவே! சிந்தித்துப் பாருங்கள்! வேறெந்த நாளாவது இவ்வளவு சிறப்புப் பெற்றதா? இல்லையே! பக்தியோடு, பூமாலையும், பாமாலையும் கொடுத்த ஆண்டாளுக்கும் ஒப்பு, உவமை உண்டா யெனில், கிடையாது— கிடையவே கிடையாது, மனமே. நன்றாகச் சிந்தித்துப் பார்— நீயே உணர்வாய்.

அஞ்சுக் குடிக்கொரு சந்ததியாய், ஆழ்வார்கள்
தற்செயலை விஞ்சிநிற்கும் தன்மையளாய்— பிஞ்சாய்
ப்பழுத்தாளை ஆண்டாளைப் பக்தியுடன் நாளும்
வழுத்தாய் மனமே மகிழ்ந்து.

Koviloor Digital Library

அஞ்சுக் குடி— பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரையும் முதலாழ்வார்கள் என்று, ஒரு குடி என்று கொள்ளவேண்டும். திருமழிசையார், நம்மாழ்வார், பெரியாழ்வார், குலசேகராழ்வார்— ஆகியோர், நான்கு குடிகள். மொத்தம் ஐந்து குடி என்று கொண்டு, இந்த ஐந்து குடிக்கும் சேர்த்து, ஒரு சந்ததி யாய் ஆண்டாள் அவதரித்தாள்.

அஞ்சுகுடி— வினைத்தொகை. அஞ்சுகின்ற குடி. பிரேமத்தின் மிகுதியாலே எம்பெருமானுக்கு என்ன வருகிறதோ என்று, அஞ்சும் குடி. செய்யாதன செய்ய, தீக்குறளைச் சென்றோத, அஞ்சும் குடி. ஆத்ம ஸ்வரூபத்துக்குச் சேராதனவற்றுக்கு, அஞ்சும் குடி. எம்பெருமானைத் தவிர, மற்ற உபாயங்களை உபாயங் களாய்க் கொள்ள, எம்பெருமானை தவிர்த்து, பிறவற்றைப் பேறுகளாக நினைக்க, அஞ்சும் குடி.

குடி–குலம்–பிரபந்த குலம்.

தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார்— இவர்கள் ஆண்டாளுக்குப் பிற் பட்டவர்களாகையால், அவர்களைச் சேர்க்கவில்லை.

ஆழ்வார்கள் செயல்களை யெல்லாம் விஞ்சி விட்டாள். இவளுக்கு மட்டுமேதான், எம்பெருமான் அர்ச்சா ஸமாதியின் விதிகளைக் கடந்து, அனுக்ரஹித் தான். தன்னுடன் சேர்த்துக் கொண்டான். ஞான பக்திகளிலே ஆழ்வார்களை விஞ்சிவிட்டாள்.

பிஞ்சாய்ப் பழுத்தாள். சிறு வயதிலேயே பழுத்தவர் கள் செய்யும் செயலைச் செய்தாள். இல்லையில்லை— சிறு வயதிலேயே, பழுத்தவர்களும் செய்ய இயலாததைச் செய்தாள் என்பதே பொருந்தும்.'

இப்படிப்பட்ட பெருமை பெற்ற ஆண்டாளை, என்னுடைய நெஞ்சே, நீ தினமும் பக்தியுடன் வணங்கு வாயாக!!

Koviloor Digital Library

உ

சூடிக்கொடுத்த நாச்சியார் அருளிச் செய்த நாச்சியார் திருமொழியின் தனியன் உரை

அல்லி நாள் தாமரை மேல் ஆரணங்கின் இன் துணைவி
மல்லி நாடாண்ட மடமயில்— மெல்லியலாள்
ஆயர்குல வேந்தன் ஆகத்தாள் தென்புதுவை
வேயர் பயந்த விளக்கு.

(தனியன்— நூலைச் சார்ந்ததாக இராமல் தனித்திருப்பது. 'அன்' —விகுதி சிறப்புக் குறிக்க வந்தது.)

அக இதழ்களையுடைய அப்போதே அலர்ந்த தாமரை மலரிலே பொருந்தியிருக்கின்ற தெய்வப் பெண்ணான பெரிய பிராட்டியார்க்குப் பிரியமான தோழியும், திருமல்லி நாட்டைத் தன் நல்ல குணங்களாலே வசப்படுத்திய அழகிய மயில் போன்றவளும், மென்மையுடையவளும், அழகிய ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் தலைவரான வேயர் குலத்தவரான பெரியாழ்வார் பெற்ற விளக்குப் போன்றவளுமான ஆண்டாள், இடைக் குலத்துத் தலைவனான கண்ணபிரானுடைய திருமேனியிலே பொருந்தியிருப்பவளாவாள்.

தாமரை அணங்கு— இது, பெரிய பிராட்டியைக் குறிக்கிறது. ஆண்டாள் எப்படிப் பெரிய பிராட்டியின் பிரிய தோழி என்றால், ஆண்டாள், பூமிப்பிராட்டியின் அம்சம் என்பதால், பெரிய பிராட்டியின் தோழியாகிறாள்.

Koviloor Digital Library

மல்லிநாடு— ஸ்ரீவில்லிபுத்தூரை உள்ளடக்கிய நாடு. 'நாடு' என்பது, தாலுக்கா போன்றது.

ஆண்ட— எல்லோரையும் தன்னுடைய மங்களமான குணங்களாலே ஆண்டாள் கவர்ந்ததால், எல்லோரையும் ஆண்டாள் என்பது பொருந்தும்.

மடமயில்— அழகிய மயில் போன்றவள். சாயலிலும், ஒயிலிலும், அழகிலும், மயிலையொத்து இருந்தாள்.

மெல்லியலாள்— மென்மையானவள். உடம்பும் மென்மை, மனமும் மென்மை. ''கொங்கை மேல் குங்கு மத்தின் குழம்பழியும் புகுந்து ஒரு நாள், தங்குமேல் என் ஆவி தங்கும்'' என்று, எம்பெருமானின் பிரிவைக் கணமும் பொறுக்க மாட்டாத மென்மையானவள்.

ஆயர்குல வேந்தன் ஆகத்தாள்–ஆயர்குல வேந்தன், கண்ணன். கண்ணனின் திருமேனியில் எப்போதும் பொருந்தியிருப்பவள்.

தென்புதுவை வேயர்—ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்த விஷ்ணுசித்தர்— பெரியாழ்வார். இவரது குலம், வேயர் குலம்.

விளக்கு— குத்துவிளக்குப் போன்ற ஆண்டாள், மங்களமானவள். விளக்கு, இருளையகற்றி, வெளிச்சத் தைத் தருவது போல, அஞ்ஞானத்தையகற்றி, ஞான தீபத்தை ஏற்றி வைத்ததால், ஆண்டாள் விளக்கு எனப்படுகிறாள்.

Koviloor Digital Library

உ

நாச்சியார் திருமொழி

''ஆண்டாள் திருக்கல்யாணம்''—என்கிற இப்புத்தகத்திலே, நாச்சியார் திருமொழி விளக்கப்பட்டிருக்கிறது. ஆண்டாள் அருளிச் செய்த பிரபந்தங்களிலே, இது இரண்டாவதாகும். ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்திலே, முறை வகுக்கப்பட்ட தமிழ் வேதம் எனப்படுகிற நாலாயிர திவ்ய பிரபந்தத்திலே, இது நான்காவதாகும்.

திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி திருப்பாவை, 'நாச்சியார் திருமொழி' என்றாகிறது.

'நாய்ச்சியார்' என்பதை 'நாச்சியார்' என்கிறோம். வடமொழியிலே தலைவனுக்கு 'நாயக' என்று பெயர். 'நாயகி' என்பது, வடமொழியிலே, தலைவியைக் குறிக்கும். அதுவே 'நாய்ச்சி' ஆயிற்று. 'ஆர்'–என்பது, உயர்வு குறித்து வந்த, பலர்பால் விகுதி.

முவுலகங்களுக்கும் தலைவி—ஜகந்நாதனுக்கு நாயகி

அவன் மீது கொண்ட பக்தியினாலும், அன்பின் உறுதியாலும், நாச்சியார் ஆகிறாள்.

நாச்சியார் திருமொழி— ஆண்டாளின் சிறந்த வார்த்தைகள். ஆண்டாள் திருவாய் மலர்ந்தருளிய திவ்விய பிரபந்தம்— மேன்மையான பாசுரங்கள்— மேன்மையான சொற்கள்.

திருப்பாவையிலே உறுதியோடு, ''உற்றோமே யாவோம்—உனக்கே நாம் ஆட்செய்வோம்—மற்றை நம்

Koviloor Digital Library

காமங்கள் மாற்று—'' என்று சொன்னவள், இப்போது தேவதாந்தரமான காமன் காலிலும், கூடலின் காலிலும், குயிலின் காலிலும் விழலாமா? மறந்தும் புறந்தொழா தல்லவோ இருக்கவேண்டும்?

உருகி உருகித் திருப்பாவை பாடினாலும், எம்பெருமான் உருகவும் இல்லை, ''அஞ்சேல்''— என்று வரவும் இல்லை. அதனால், இவள் மிகவும் தளர்ந்து, செய்யாதன செய்தாகிலும், எம்பெருமானை அடையப் பார்க்கிறாள். தேவதாந்திரத்தின் காலில் விழுமளவா ஆகிவிட்டது— என்று, எம்பெருமான், அரைகுலையத், தலை குலைய வருவான் என்று எதிர்பார்த்தே அவ்வாறு செய்தாள்—அதில் தவறில்லை.

அகப்பொருள் துறையைச் சேர்ந்த பாடல்கள்: பக்தர்கள் அகப்பொருள் துறையில் பாடலாமா என்ற கேள்வி, எப்பொழுதும் கேட்கப்பட்டு வருகின்ற ஒரு கேள்விதான். பாடப்படுபவன், பாட்டின் தலைவன் சாட்சாத் ஸர்வேஸ்வரன் என்பதால், இவை மேன்மை அடைகின்றன. திவ்வியப் பிரபந்தங்களில் வருகின்ற அகப்பொருள் துறைப் பாசுரங்களில் சொல்லப்படும் காமம், தாழ்ந்ததான உலகியல் காமமன்று. வேதாந்தங்களில் கேட்கத்தக்கது. மனனம் பண்ணத் தக்கது. தியானிக்கத் தக்கது.

இப்படிச் சிற்றின்பத்துக்கல்லாது, பேரின்பத்துக்கு வழி காட்டுவதாலே, இவ்வகப் பொருள் துறைகள் மிகச் சிறந்தவையாகும்.

அன்றியும், ஆத்மாக்களில், ஆண்—பெண் என்ற வேறுபாடுகள் இல்லை. எல்லா ஆத்மாக்களும் ஒரே தன்மை வாய்ந்தவைகள். ஞானமும், ஆனந்தமுமே வடிவானவர்கள். பரமாத்மாவுக்கு அடிமைப்பட்டவர்கள்.

Koviloor Digital Library

ஆயினும், உடலால் பெண்ணாகப் பிறந்தவர்களுக்கு இருக்கவேண்டிய பண்புகள், அனைத்து ஆத்மாக்களிலும், இயல்பாகவே அமைந்துள்ளன. பெண்ணாகப் பிறந்த ஒருத்தி, ஆண் மகன் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டே ஆகவேண்டும். கணவனுக்கே உரிமைப்பட்டிருத்தல் வேண்டும். தன் தேவைகளுக்குத் தான் முயலாமல், கணவனையே நம்பி இருத்தல் வேண்டும். கணவனால் மட்டுமே அனுபவிக்கப்படுபவளாக இருத்தல் வேண்டும். அது போல, ஆத்மாக்கள் அனைவரும், பரமபுருஷனையே உபாயமாக உடையவர்கள். பரமபுருஷனுக்கே யோக்கியமானவர்கள் அனுபவிக்கப்படத்தக்கவர்கள். எனவே, புருஷோத்தமன் ஒருவனே ஆண்மகன். ஆத்மாக்கள் அனைவரும், இயல்பாகவே பெண்கள். ஆதலினால், அகப்பொருள் பாடல்கள் இயல்பானவையே. மிகப் பொருத்தமானவை.

முமுக்ஷுக்களுக்கு, மூன்று தசைகளுண்டு. அவை, ஸ்வரூபதசை, உபாயதசை, ப்ராப்யதசை. ஸ்வரூபதசை, திருமந்திரத்தில் பிரணவார்த்தம். அதாவது இந்த ஆத்மா, நாராயணனுக்கே அடிமை. மற்றவர்க்கு உரியவனல்லன் என்னும் உணர்ச்சி உபாயதசை நமப் பதார்த்தம். அதாவது எம்பெருமானைப் பெறுவதற்கு, எம்பெருமானே உபாயம். எம்பெருமானுக்குப் பரதந்த்ரப் பட்ட இட்ட வழக்காயிருக்க வேண்டிய இவ்வாத்மா சுதந்திரமாக ஒரு உபாயத்தைச் செய்யத்தக்கவனல்லன். வான் பார்க்கும் பைங்கூழ் போல, அவன் கையையே பார்த்திருக்கவேண்டும் என்னும் துணிவு. ப்ராப்யதசை— பலதசை நாராயணாய பதார்த்தம். அதாவது, இறைவனுடைய திருமேனியழகு, கல்யாண குணங்கள் முதலியவை நெஞ்சில் ஊற்றெடுத்து, இப்பொழுதே பெறவேண்டும்— வழியில்லாத வழியிலாகிலும் பெற வேண்டும் என்னும் பதற்றம் வருகிறது.

Koviloor Digital Library

இப்படிப் பதறச் செய்வதுதான், புருஷார்த்தத்துக்கு—பேற்றுக்குச் சிறப்பு—பெருமை. இப்படிப் பதறச் செய்யவில்லையென்றால், அது சிறந்த பேறாகாதே. அதற்கொரு நமஸ்காரம் சொல்லிக் கை கழுவி விடலாமே.

ஆடவர் பெண்மையை அவாவும் தேரறினனான அவனுடைய திருமேனி ஸௌந்தர்யமும், திருக் கல்யாணக் குணங்களும் இப்படி, ஆண்டாளைக் காலில் விழவும், கூடல் இழைக்கவும், பறவைகளையிரக்கவும் பண்ணிற்று. ஆகையால் இது, அவனுடைய விக்ரஹ வைலக்ஷண்யத்தின் குற்றமேயன்றிக் கோதையின் குற்ற மன்று. (வைலக்ஷண்யம்–வேறுபட்ட அழகுச் சிறப்பு) இதனைப் பிராப்ய வைலக்ஷண்யத்தால் வந்த பிராப்யத் வரை என்பர். அதாவது, அடையப்படும் பொருளின் சிறப்பால் ஏற்பட்ட, அடைவதற்கு விரையும் தன்மை. உவை, ஸகல வேதஸாரமான எட்டெழுத்துத் திரு மந்திரத்தின் ஸாரமான அர்த்தம்.

ஆண்களாகப் பிறந்த ஆழ்வார்களே பெண்ணுடை யுடுத்தார்கள் என்றால், பெண்ணாகவே பிறந்த ஆண்டாளுக்குச் சொல்லவும் வேண்டுமோ?

ராமபிரானைக் கண்ட விரக்தர்களான, தண்ட காரண்ய ரிஷிகளும் பெண்மையடைந்தார்களே!

மானிடப் பெண்ணான பாஞ்சாலியை நீராட்டிய பணிப்பெண்கள், அவளழகில் மயங்கித் தங்களை ஆண் களாகப் பாவித்தார்கள் என்றால், மன்மதனுக்கும் மன்மதனான புருஷோத்தமனுடைய விக்ரஹ ஸௌந்தர் யத்தை அனுபவிக்க, இவர்கள் வழியில்லாத வழியிலே அவனைப் பெற முயன்றதில் வியப்பேது? தவறு தானேது? குறை சொல்ல வேண்டுமென்றால், அவ னுடைய வடிவழகைத்தான் குறை சொல்லவேண்டும்!

●●

Koviloor Digital Library

அவதாரமும்-காலமும்

கர்க்கடே பூர்வபல்குந்யாம் துளஸீ காநநோத்பவாம் |
பாண்ட்யே விஸ்வம்பராம் கோதாம் வந்தே ஸ்ரீரங்கநாயகீம் ॥

பாண்டிய தேசத்திலே, ஸ்ரீவில்லிபுத்தூரிலே, பெரியாழ்வாரின் துளஸித் தோட்டத்தில், பூமிப் பிராட்டியின் அவதாரமாய், திருவாடிப்பூரத்தே அவதரித்த, ஸ்ரீரங்கநாதனின் தேவியான கோதையை வணங்குகிறேன்.

தேவஸ்ய மஹிஷீம் திவ்யாம் ஆதௌ கோதாம் உபாஸ்மஹே |
யந்மௌலி மாலிகாம் ப்ரீத்யா ஸ்வீகரோதி ஸ்வயம் ப்ரபு: ॥

எவள் சூடிக் களைந்த மாலையை, ஸர்வேஸ்வரனே உகப்புடன் ஏற்றுக் கொண்டானோ, விஷ்ணுவின் திவ்ய மஹிஷியான அத்தகைய முதலில் உபாஸிக்கிறோம்.

ஸித்தாநாம் ரரதாம் கலாவபகமே வர்ஷே நளாக்யே ரவௌ
யாதே கர்க்கடகம் விதாவுபசிதே ஷஷ்டேபிஹரி ஸ்ரீமதி |
நக்ஷத்ரேபீர்யமதைவதே க்ஷிதிபுவோ வாரே சதுர்த்யாம் திதௌ
கோதா ப்ராதுரபூத் அசிந்த்ய மஹிமா ஸ்ரீவிஷ்ணு சித்தாத்மஜா ॥

கலியுகத்திலே, 'ஸித்த' என்னும் எழுத்துக்களால் கிடைத்த தொண்ணூற்றேழு வருடங் கழிந்த அளவிலே, நள வருஷத்தில், ஸூர்யன் கடக ராசியை அடைந்திருக்கும் ஆடி மாதத்தில், சுக்ல பக்ஷத்தில், ஆறாவது தேதியில், அர்யமாவைத் தேவதையாகக் கொண்ட பூர நன்னாளில், செவ்வாய்க்கிழமை, சதுர்த்தியில், எண்ண முடியாத பெருமைகளையுடைய ஸ்ரீ விஷ்ணு சித்தரின் பெண்ணான கோதாதேவி அவதரித்தருளினாள்.

Koviloor Digital Library

௬

நற்பலன்கள்

பொதுவாக, அருளிச் செயல்களைப் படிப்போருக்கும், கேட்போருக்கும் பலன்கள் சொல்லப்படுவதுண்டு. பலனை எதிர்பார்த்து, அனுஸந்திக்கக் கூடாதெனினும், ஸாமான்யர்களை, ஸம்ஸாரிகளைப் பகவத் விஷயத்தில் ஈடுபடுத்துவதற்காக, பலன் சொல்வர். லௌகீகத்தைக் காட்டித்தான், ஆன்மீகத்துக்கு இழுக்க முடியும்.

ஆண்டாள் அருளியுள்ள பலன்களைச் சற்றுப் பார்ப்போம்:

''காமனே! கண்ணனோடு என்னைச் சேர்த்து வை'' என்கிற பாசுரங்களைப் பக்தியோடு படிப்பவர்க்கு, எம்பெருமானிடமிருந்து பிரிந்து வாழும் அவலமும், தேவ தாந்தரங்களின் காலில் விழுகின்ற அவலமுமின்றி, எம்பெருமானோடு நித்யானுபவம் பண்ணுகிற நித்ய ஸிரிகளுக்கொப்பாக இருக்கலாம்.

இவர்களின் சிற்றிலைக் கண்ணன் வந்து சிதைக்கையிலே, இவர்கள் அவனது திருவடி ஸம்பந்தம் பெற்றதாலே, படிக்கும் நமக்கும் அந்த ஸம்பந்தம் கிடைத்ததாய்க் கொண்டு, கண்ணன் நம்மையும் தட்டாது பரமபதத்திலே சேர்த்துக் கொள்வான்.

பொய்கைக் கரையிலே, கண்ணனுக்கும் இடைச்சிகளுக்குமிடையே நிகழ்ந்த லீலைகளை அனுஸந்தித்தால் பரமபதத்துக்குப் போய் மாதவனின் பாதாரவிந்தத்துக்குக் கீழ் வாழலாம். பிராட்டியோடு இருப்பவனே,

Koviloor Digital Library

மாதவன். பிராட்டி, புருஷகாரபூதை. பிராட்டியோடிருக்கும் மாதவன், கருணைக்கடல்.

'எத்தைத் தின்றால், பித்தம் தெளியும்'— என்னுமாப் போலே, கலங்கிப் பரிதவித்து, கூடல் தெய்வத்தை அழைத்து, அதன் காலில் விழவேண்டிய நிர்ப்பந்தமில்லாது, கூடல் இழைத்துப் பார்க்கவேண்டிய தேவையேயின்றி, எப்போதும் எம்பெருமானோடு, கூடியே இருப்பார்கள்.

குயிலே! கூவு—பவளவாயன் வரக் கூவு—என்று ஏவியதை அனுஸந்தித்தால், எம்பெருமானுக்கு ஏவலாளாக, அந்தரங்க கிங்கரர்களாக ஆகலாம். ஒருவரிடம் ஒன்றையும் வேண்டாதபடி, அவன், கற்பக விருட்சமாக நமக்கு எல்லாவற்றையும் கொடுப்பான். அவனுக்கு அந்தரங்க ஏவலாளாகப் போகும் பாக்கியம் பெற்றால், அதிலே, எல்லாமே அடங்கிவிடும்.

கல்யாணம் நடப்பதாகக் கனவு கண்டாள். சாதாரணக் கனவா, அது? புகழ் பெற்ற, பெருமை பெற்ற கனவு. இந்தக் கனவுப் பாசுரங்களை ஓதுபவர்கட்கு என்ன பலன்? இது என்ன அசட்டுத்தனமான கேள்வி! கல்யாணமானதும், அடுத்தது, மக்கட்பேறுதானே! பிள்ளைகளாகுமா? வாயுநன் மக்களன்றோ, மக்கள்? அதாவது, நல்ல உத்தமமான குணங்கள் வாய்ந்த மக்களைப் பெற்று, அதனாலே மகிழ்வர்.

கர்ப்பூரம் நாறுமோ—கமலப்பூ நாறுமோ—என்று, பாஞ்ச ஜனயத்தை வினவியதாய் படித்தோமே! அவற்றைக் கற்றவர்களும், பாஞ்சஜன்யத்தைப் போல, உயர்பதவி பெறுவர்.

ஆண்டாள் மேகத்தைத் தூது விட்டது போல, இதைப் படிப்பவர்கள், எதையாவது தூது விட்டு, வருந்தவே வேண்டாம். இவள் தூதுவிட்டதைப்

Koviloor Digital Library

படிப்பதாலேயே, அவனோடு கூடும் பேற்றைப் பெறுவர் என்பது உறுதி.

எம்பெருமானின் கல்யாண குணங்களையெல்லாம் ஒன்றாகத் திரட்டி, இவள் பாடினாள். ஆனால், எம்பெருமானோ, இவளைத் துடிக்க விட்டான். பின், அவன் கல்யாண குணசாலியா? ஸம்ஸாரத் தொல்லைகளிலே வருத்தப்பட வைக்காமல், தன் திறத்தில் ஈடுபடவைத்து, வருந்தப்பட வைத்தது, கல்யாண குணந்தானே! எப்படி வேதத்தில் ஒவ்வொரு எழுத்தும் பகவந் நாமாவாக விளங்குகிறதோ, அதுபோல, இப்பாசுரங்களில் ஒவ்வொரு எழுத்துமே பகவத் குண கர்ப்பிதமாகையாலே, இவற்றைப் படிப்பவர்கள், "நாராயணனே நமக்கே பறை தருவான்"—என்றபடி, அவன் திருவடியை அடைவார்கள்.

முல்லைப் பூவையும், கார்க்கோடல் பூவையும் அழைத்துப் பேசியவனுக்குத் திடீரென்று, ஒரு ஐயம் எழுகிறது! அவனோ, பரமபுருஷன், ஜகத்ரக்ஷகன். "அவன் என்ன, அத்தனை மலிவானவனா, நாம் அழைத்தால், உடனே ஓடி வர!" என்று பலவாறாக யோசிக்கிறாள். பின், என்னதான் செய்வது? "ஆ...பாகவத ஸம்பந்தத்தான் நம்மை உய்விக்கும்" என்ற முடிவுக்கு வருகிறாள்... எந்த பாகவதரின் ஸம்பந்தத்தைப் பெறலாம்? தந்தையான பெரியாழ்வாரை விடவும், பெரிய பாகவதர் யார் உளர்?

பெரியாழ்வார் அழைத்தால், கண்ணன் வந்தே தீர வேண்டுமே! காப்பிடவும், காது குத்தவும், திருமஞ்சன மாடவும், பூச்சூட்டவும் அழைப்பாரே! அப்போது, கண்ணன் வருவான். கண்டு களிக்கலாமென்று முடிவு கட்டுகிறாள். "பாகவத ஸம்பந்தம் பெற்றால், எம்பெருமானின் தரிசனம், அருள் கிட்டும்" என்கிறாள்.

Koviloor Digital Library

''பருந்தாள் களிற்றுக்கு அருள் செய்த பரமன் தன்னைப்
பாரின் மேல்
விருந்தாவனத்தே கண்டமை விட்டுச் சித்தன் கோதை சொல்
மருந்து ஆம் என்று தம் மனத்தே வைத்துக் கொண்டு
வாழ்வார்கள்
பெருந்தாள் உடைய பிரான் அடிக்கீழ் பிரியாது என்றும்
இருப்பாரே''

முதலையின் வாயிலகப்பட்ட ஸ்ரீ கஜேந்திராழ்வானுக்கு அருள் செய்தாய்! அவனுக்கோ, ஒரு முதலைதான் தொல்லை கொடுத்தது— நமக்கு, இந்த ஸம்ஸாரமே தொல்லையாக இருக்கிறது.

ஆண்டாள், தன்னை அடிக்கடி, விஷ்ணுசித்தன் கோதை—என்று அருளுகிறாள். காரணமென்ன? அந்தப் பரமபாகவதரின் ஸம்பந்தம் பெற்றவள்— பாகவதோத்த மரின் திருமகள் என்பதை எம்பெருமானுக்கு நினைவூட்டு கிறாள். தனக்காக இல்லாவிடினும், பாகவத ஸம்பந்தம் பெற்றிருக்கிற காரணத்துக்காவாயினும், எம்பெருமான் தனக்குப் பேறு கொடுக்கட்டுமே என்று.

'பிறவி' என்னும் தீராத நோய்க்கு மருந்து, இவளது பாசுரங்கள். இவற்றை பக்தியோடு படிப்பவர்கள், எம்பெருமானின் திருவடிகளை என்றும் பிரியார்.

ஆ—2

Koviloor Digital Library

1. அனங்கதேவா! கண்ணனுடன் கூட்டி வை

திருப்பாவை பாடி முடித்தாள். கைங்கர்யம் செய்யும் பேறு அருளினானே தவிர, ஆண்டாளை அழைத்துச் செல்லவில்லை. ''மற்ற ஆயர் சிறுமியருக்குப் பேறு தரும் போது தரட்டும். நம்மை உடனே அழைத்துக் கொள்ளலாகாதா?'' என்று ஆற்றாமை மிகக் கொண்டாள்.

''இனியும் நாம் சும்மாயிருக்கக் கூடாது. அவன் வருகிறபோது வரட்டுமென்று காத்துக் கொண்டிருப் பதிலே எந்தவிதப் பிரயோஜனமும் இல்லை. நாம் ஏதாவது முயற்சிகள் செய்து பார்க்கலாம்''— என்று தீர்மானிக்கிறாள்.

காதலர்களைச் சேர்த்து வைப்பவன் மன்மதன் என்பதனாலே, மன்மதனுக்கு விசேஷ ஆராதனைகள் செய்ய, ஏற்பாடுகள் செய்கிறாள்.

வெற்றிலை, பழங்கள், கரும்புக் கட்டுகள்,செம்மண், மாவிலைகள், பாக்கு மரங்கள் போன்ற மங்கலப் பொருள்கள் வேண்டிய மட்டும் தருவித்தாள். வெள்ளை நுண்மணலைத் தெரு முழுதும் பரப்பி வைத்தாள். செம்மணிட்டு கோலம் போட்டு முடித்தாள். பாக்கு மரங்கள், மாவிலைகளை அழகிய தோரணங்களாக்கி, வளைத்துக் கட்டினாள்.

பஞ்சுத்திரி போட்டு, உருக்கிய பசு நெய் ஊற்றி, குத்துவிளக்குகளை ஏற்றினாள். சாம்பிராணி, அகில் தூபங்கள் போட்டாள்.

Koviloor Digital Library

கண்மூடிக் கையைக் கூப்பிக்கொண்டு பாடுகிறாள், கல்லும் உருகுமாறு.

"காமதேவனே! தை மாதமும், மாசி மாதமும், மண்டல பூஜைக்காக நீ எழுந்தருளும் இடத்தை அழகிய மணல்களால், நன்றாய் அலங்கரித்துள்ளேன். உன்னையும் உன் தம்பியான சாமனையும் வணங்குகிறேன். நெருப்புப் போல் ஜொலிக்கின்ற திருவாழியைக் கையிலேந்தியுள்ள திருவேங்கடமுடையானான எம்பெருமானுக்கு எப்போதும் கைங்கர்யம் செய்யுமாறு அருள் புரிவாயாக!"

நுண்மணலைக் கொண்டு எதற்காகத் தெரு முழுதும் பரப்பினாள்? பூஜைக்காக, ஆண்டாளின் இருப்பிடத்துக்கு மன்மதன் எழுந்தருளுகையில், அவன் கால்களில், கல்லும் முள்ளும் பெருமணல்களும் உறுத்தக் கூடாது என்றுதான்.

அனங்கதேவா! நீ உன் உடம்பை இழந்து விட்டாய். ஆனாலும், பிரிந்தவரைக் கூட்டிவைக்க, உன்னால்தான் இயலும்.

ராமனைத் தொழுகையில், தம்பி லக்ஷ்மணனையும் தொழுவதே போன்று, உன் தம்பியையும் சேர்த்துத் தொழுகின்றேன்.

அடியார்களின் விரோதிகளை ஒழிக்கும் திருவாழியையுடைய, திருவேங்கடத்தானாகிய எம்பெருமானிடம் என்னைத் தட்டாது சேர்த்துவிடு.

காமதேவனே! அரவிந்தம், அசோகம், மா, நவமல்லிகை, கருநெய்தல் ஆகிய ஐந்து மலர்களும் உனக்கு அம்புகள். "ஆண்டாள் என்னும் அறியாச்சிறுமி, உன் நினைவாகவே இருக்கிறாள்"— என்று, அந்த அம்புகளிலே எழுதி, கடல்வண்ணனிடம் நான் சென்று சேரும்படி செய்யவேண்டும். இந்த உடலும், அதைச்

 Koviloor Digital Library

சார்ந்த உயிரும் துவாரகைக்குத் தலைவனான கண்ண பிரானுக்கே உரியவை. ஆதலால், என்னைக் கண்ண னிடம் சேர்த்து விடு. தேவர்களுக்கு என்று வைக்கப் பட்டிருக்கும் அவிஸ்ஸை, நாயும் நரியும் மோந்து பார்த்தும், உண்டு விட்டும் சென்றால், தேவர்களுக்குப் பயன்படாதன்றோ? அவிஸ்ஸின் நோக்கமும், பயனுமே வீணாகிவிடுமே! அது போல, மானிடர்க்கு என்று பேச்சு வந்தால், நான் உயிர் தரியேன், இதை நன்றாக நினைவில் இருத்திக் கொள். மன்மதனே! பால் மாறாத பசுங்காய் நெல்லும், கரும்பும், வெல்லமும், பச்சரிசி, அவல்– என்று, இத்தனையும் உனக்குப் படைத் துள்ளேன்.

இத்தனையும் செய்து, உன்னடி பணிந்தும், என்னைக் கண்ணனோடு சேர்ப்பித்து விடு— என்று பிரார்த்திக்கிறேன். இல்லையேல், என் துக்கம் தாங்க முடியாது போய்விடும். எனக்குப் பலனைத் தரவில்லை யெனில், அது, உனக்குத்தான் அவமானம். தன் ஜீவனத்துக்காக எருதிடம் மிகக் கடுமையாக வேலையை மட்டும் வாங்கிக் கொண்டு, அதற்குத் தீனி இடாது, நுகத் தடியாலே அடித்துத் தள்ளிவிடலாமா? அதைப் போல, என்னை விட்டுவிடாதே.''

மானிடனோடு என்னைச் சேர்த்து விடாதே—என்று, மன்மதனைப் பிரார்த்திக்கிறாள். ஆண்டாளோ, சிறந்த ஸ்ரீகிருஷ்ண பக்தை. மறந்தும் புறந்தொழக் கூடாதே. பின், ஏன் அவள் மன்மதன் காலிலே விழவேண்டும்? கண்ணனின் கால்களிலேயே விழலாமே! ஏற்கெனவே, திருப்பாவை வேறு பாடியாயிற்று. கண்ணனும், கைங் கர்யப் பேற்றினைக் கட்டாயமாய் அளிப்பதாக உறுதி கூறியிருக்கிறான்! அதுவரை, காத்திருக்க வேண்டும். தாங்க முடியாவிடில், கண்ணன் கால்களிலேதானே விழ வேண்டும்!

Koviloor Digital Library

இந்தக் கேள்வி, மிகச் சரியான கேள்வி. ஆண்டாளைப் போன்ற, உத்தம பக்த சிகாமணிகள், சாதாரணமாக இவ்வாறு செய்யமாட்டார்கள். கலக்கத்தின் எல்லையிலே இருந்த ஆண்டாள், கண்ணனைப் பெறுகைக்காகத்தான், காமனின் காலில் விழுந்தாள்.

அயோத்தியாவாசிகள், சிறந்த ஸ்ரீராம பக்தர்கள். ஸ்ரீராமபிரானையன்றி, வேறு யாரையும், வேறு எதையும் அறியாதவர்கள். ஸ்ரீராமனின் நன்மையை விரும்பி, ஸகல தேவதைகளின் கால்களிலும் விழுந்தனர் என்கிறது ஸ்ரீராமாயணம். கடலைக் கடக்கும்போது, அனுமனும், ''நமோஸ்து வாசஸ்பதயே'' – என்றாராம். எல்லையற்ற கலக்கத்திலே, பக்தர்கள் இவ்வாறு செய்வது வழக்கந்தான். அளவு கடந்த பக்தியுடையவர்கட்கு, சாஸ்திர வரம்பும், மரபு முறைகளும் கிடையாது.

''எனக்காக, என்னைப் பெறுகைக்காக, ஆண்டாள் இத்தனைத் துன்பப்படுகிறாளா? நாராயணனே நமக்கே பறை தருவான்—என்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உற்றோமேயாவோம்—உமக்கே நாம் ஆட்செய்வோம்—மற்றை நம் காமங்கள் மாற்று''—என்றெல்லாம் சரணாகதி பண்ணியவள், இன்று, காமன் காலில் விழுமளவு, நம் பிரிவால் கலக்கமுற்றிருக்கிறாளா? பரிதாபமாக வன்றோ இருக்கிறது! தாமதியாது, அவளை அழைத்துக் கொள்ள வேண்டும்!—என்றெண்ணிக் கண்ணன் துரிதமாய் தன்னிடம் வந்து சேருவான் என்று ஒரே எண்ணத்திலே, செய்யப்பட்டது, இது. அல்ப விஷயங்களுக்காக இன்றி, கண்ணனையடைய, காமன் காலில், கலக்கத்திலே போய் விழுந்ததினால், கண்ணன் இரக்கப்பட்டு, சீக்கிரமாய் வருவான்—என்பது ஆண்டாளின் எண்ணம். அதனால், இதில் ஒரு சிறிதும் தவறில்லை.

Koviloor Digital Library

2. சிரீதரா! சிற்றிலைச் சிதையேல்!

ஆண்டாளும் தோழிகளும் சிற்றில்கள் இழைத்துக் கொண்டிருக்கின்றனர். கண்ணனையும், அவனது குறும்புகளையும் பற்றிப் பேசியவாறு எப்போதும் கண்ணனின் பேச்சுத்தான். விளையாடிக் கொண்டி ருக்கையிலே, அவர்களுக்கு ஒரு இனிய அதிர்ச்சி. சாட்சாத் கண்ணன்தான் ஓசைப்படுத்தாது வந்து நின்று கொண்டு, இவர்கள் விளையாடுவதை வேடிக்கை பார்த் துக் கொண்டிருந்தான். ஏதாகிலும் வம்புசெய்ய எண்ணி, அவர்களருகே வந்தான். கண்ணனின் ஒவ்வொரு நாடி நரம்பையும், அசைவையும்தான், இவர்கள், வெகு துல்ய மாய் எடைபோட்டு வைத்திருக்கிறார்களே!

சிற்றில்களை சிதைத்துக் கலைக்கத்தான் கண்ணன் வந்திருக்கிறான் எனப் புரிந்து கொண்டு, பலவிதமாய் பிரார்த்திக்கின்றனர்.

"ஸஹஸ்ரநாமம் சொல்லி, நித்தியஸீரிகள் துதிக்கும் படியான நாராயணனே! நீ ஏற்கெனவே குறும்பன், தீம்பன். மாமி உன்னை அடக்கி வளர்த்திருந்தால், இப்படிக் குறும்பு செய்யமாட்டாய். எங்களுக்குத் தொல்லையில்லை. உன்னைக் கணவனாக வேறு அடைந்திட்டோமாயின் பின் கேட்கவும் வேண்டுமோ? மன்மதன் பவனி வருகின்ற காலமாதலால், அலங்கரித்து அழகுபடுத்தியிருக்கிறோம் குறும்புக் கண்ணனே! எங்கள் சிற்றிலை வந்து சிதைக்காதே."

Koviloor Digital Library

"பெண்களே! நானா குறும்புக்காரன். யோசித்துப் பேசுங்கள். நான் பாட்டுக்கு இருக்கையிலே, என்னை எதிர்பார்த்து ஏன் சிற்றில் இழைத்திருக்கிறீர்கள்? வலுவிலே வம்புக்கு அழைத்தது, நானா நீங்களா?"

"ஆமாம்! உன்னை எதிர்பார்த்துத்தான் சிற்றில் இழைத்திருக்கிறோமா என்ன? மன்மதன் பவனி வரும் காலமென்று, அலங்கரிக்கிறோம், அழகு படுத்துகிறோம். உன்னை எதிர்பார்த்து ஒன்றும் நாங்கள் ஏதும் செய்யவில்லை."

"அப்படியா?"—என்று சொல்லிக்கொண்டே, கண்ணன், அவர்கள் இழைத்த சிற்றில்களைக் காலால் உழைத்து அழிக்கிறான்.

"கண்ணா! நீ ஸர்வசக்தி படைத்தவன். அரிய பெரிய காரியங்களைக்கூட, ஸங்கல்ப மாத்திரத் தினாலேயே செய்துவிடுவாய். நாங்களோ, அறிவொன்று மில்லாத ஆயர் சிறுமியர். நீ, உன்னுடைய அழகிய கண் களை வைத்து, எங்கள் சிற்றில்களைக் கடாட்சித்தால், எங்களுக்கு ஸந்தோஷமாயிருக்கும். அதைவிட்டு விட்டு, இன்று முழுதும் முதுகு நோகக் கட்டிருக்கும் இச்சிற்றில் களை அழிக்காதே."

"முதுகு நோக இழைத்திருக்கிறீர்களா? நான் வேண்டுமானால், நோவு தீர, முதுகைப் பிடித்து விடட்டுமா? வாருங்கள்."

"போதும், போதும். அருளாளன் எனப்பெற்ற நீ, எங்கள் மீது சிறிதும் அருள் காட்டாதது, எங்கள் பாவந்தான்!"

"அடாடா! என்ன அற்புதம்! என்ன அற்புதம்! என் பாவந்தான் ஸ்ரீராமனை வனவாசம் போகச் செய்தது என்று, பரதன் கதறியழுதது போலேயன்றா அழுகிறீர் கள்." என்று, எள்ளி நகையாடினான்.

Koviloor Digital Library

"கண்ணா! பரிஹாஸம் பண்ணுகிறாய். நாங்களும் பொறுத்துக் கொள்கிறோம். ஏன்? உன் திருமுக மண்டலத்தின் அழகுக்கு வசப்பட்டு நிற்கிறோம். என்ன தான் சொக்குப்பொடி போடுகிறாயோ?"

கண்ணன் மெலிதாக நகைத்துக்கொண்டே, பெண்களைத் தொட்டிழுத்துக் குறும்புகள் செய்தான்.

"கண்ணா! உன் குறும்புகளுக்குப் பொருள் கண்டறிவது மிகக் கடினம். ஒரு பெண்ணுக்காக, உன் பெண்டாட்டிக்காக வானரப்படையைத் திரட்டிக் கொண்டு, கடலிலே அணையும் கட்டி, வளைத்தாய். நாங்களும் அதே பெண்ணினந்தானே! எங்கள் மீது ஏன் தான் இரக்கமில்லையோ?"

"அறிவொன்றுமிலாத ஆயர்சிறுமியரோம்"— என்பதில் ஒன்றும் குறைச்சலில்லை. என்னவெல்லாம் பேசுகிறீர்கள்! கொஞ்சம் அசந்தால், என்னையே விற்று விடுவீர்களே!" என்று, மறுபடியும் சிற்றில்களைக் கலைக்கிறான்.

"உன் பெண்டாட்டிகளின் மீது ஆணை! இவற்றைக் கலைக்காதே!"

"என்ன சொன்னீர்கள்! இந்த இடக்குத்தானே வேண்டாமென்கிறது!"

"பின்னே என்ன! பானை முறம் என்று ஏதோ வைத்துக் கொண்டு விளையாடினால், அதை நீ ஏன் கையாலும் காலாலும் கலைக்கிறாய்?"

"நன்றாய்ச் சொன்னீர்கள்? போயும் போயும், என் கைகளால் இந்தச் சிற்றில்களையா கலைப்பது! உங்களைத்தான் ஏதேனும் செய்யவேணும்!" என்றவாறே அவர்கள் கன்னத்தைக் கிள்ளி, பின்னலைப் பிடித்திழுத்துக் குறும்பு செய்தான்.

Koviloor Digital Library

''கண்ணா! முதுகு நோக, சிற்றில்கள் இழைத்திருக்கிறோம். நீ ஸர்வசக்தி படைத்தவன். எதையும் செய்வாய்!''

''ஸர்வசக்தி படைத்து, அப்படி என்ன முடியாத காரியத்தைச் செய்தேனாம்! சொல்லுங்களேன், பார்க்கலாம்.''

''மஹாப்பிரளயம் வந்தபோது, உலகத்துயிர்கள் அனைத்தின் மீதும் கருணை கொண்டு, உலகத்தையுண்டு, வயிற்றிலே அடக்கி வைத்துக் கொண்டாயே! அந்தக் கருணை இப்போது எங்கே போயிற்று?''

''எனக்கே தெரியாதே விஷயங்களென்று,'என்னைப் பற்றி ஏதேதோ சொல்கிறீர்களே! மஹாப்பிரளயமாம், உலகத்தை உண்டேனாம். சும்மா ஏதாவது சொல்லி, என்னை மயக்காதீர்கள்.''

''கண்ணா! மயக்குவது யார்? நீதான். நீ இந்தச் சிற்றில்களைச் கடாட்சிக்க வேணுமே தவிர, இன்று முழுக்க முதுகு நோகும்படி உட்கார்ந்து இழைத்த இச்சிற்றில்களைக் கலைக்கலாமா?''

''முதுகு வலி தீரப் பிடித்து விடுகிறேன் என்றாலும் வேண்டாமென்கிறீர்களே!''

''வேண்டாம், வேண்டாம். எங்கள் மீது இரக்கம் காட்டிச் சற்றுப் பேசாமலிரு, போதும். ஏழை எளியவர்களுக்கு இரக்கம் காட்டுவாயென்றுதான் இதுவரை எண்ணியிருந்தோம். எல்லாமே வேஷம்.''

கண்ணனுக்குத் தெரியாமல் எங்காவது போய் விளையாடலாமென்றாலும், இவர்களுக்கு முன்னே, அவன் அங்கே போய் நிற்கிறான். என்ன செய்வார்கள், பாவம்!

Koviloor Digital Library

ஒவ்வொருத்தியிடமும் தனித்தனியாகக் குறும்புகள் செய்துவிட்டு வந்தான். கண்ணனிடம் தோற்றனர்—அவனது கண்ணழகுக்குத் தோற்றனர்—அவனது கருமை நிறத்துக்குத் தோற்றனர்— பவளச் செவ்வாய்க்குத் தோன்றனர்— அவனது எளிமைக்குத் தோற்றனர். தோற்றுப்போய், வெட்கமடைந்து தலை குனிய, கண்ணன், தன்னுடைய வழக்கமான குறும்புப் புன்னகையைக் காட்டினான்.

"சிற்றிலோடு எங்கள் சிந்தையையும் சிதைக்கக் கடவையோ, கோவிந்தா!"

"கோவிந்தன் என்றால், பசுக்களை ரக்ஷிப்பவன். பசுக்களை மேய்ப்பதுதான் உன் தொழில். பெண் களிழைக்கும் சிற்றில்களைச் சிதைப்பதுகூட, உன் தொழிலா? சிற்றிலைத்தான் சிதைக்கிறாய். அந்தோடு கூட, எங்கள் சிந்தையையுமல்லவா சிதைத்து, எங்களை ஒன்றுமில்லாது செய்து விடுகிறாய்!"

கண்ணன் மேலும் பலவாறாகக் குறும்புகள் செய்ய, விலகி ஓடுகின்றனர்.

"என்னோடு விளையாடுவதும், கூடுவதும் உங்களுக்கு அத்தனை அஸஹ்யமாயிருக்கிறதோ! யோகிகளும் கூட, என் உடம்போடு அணைவதற்கன்றோ ஆசைப் படுகின்றனர். உங்களுக்கு இத்தனை மலிந்து விட்டேனா?"

"இல்லையில்லை, கண்ணா! ஊருக்குப் பயப்பட வேணுமே! ஊர் வாயை மூட முடியுமா?"

"அதுதானே பார்த்தேன். என்னை எதிர்பார்த்திருக்கும் ஆசையில் ஒன்றும் குறைவில்லை. விலகி ஓடுவது போலப் பேச்சு வேறு.

Koviloor Digital Library

"எத்தனையெத்தனை பெண்களோடு கலந்து வந்திருக்கிறாயோ! எங்களைத் தொடாதே."

"என்ன! நான்தான் ஸர்வேஸ்வரன் என்கிறீர்கள். என் ஸ்பர்சம் என்ன எளிதில் கிட்டக் கூடியதா?"

"நீ ஸர்வேஸ்வரனா? எங்களுக்குத் தெரியாதே! அப்படியா?" என்று, வேண்டுமென்றே வியப்போடு கேட்டனர்.

"இதோ பாருங்கள்!" என்று, சங்கு சக்ரதாரியாய் தரிசனமளித்தான். ஆஹா என்ன அற்புதமான காட்சி!

மெய்ம்மறந்து அவர்கள் நிற்கையிலேயே, சட்டென்று மறைந்தான் கண்ணன்.

Koviloor Digital Library

3. கண்ணா! கூறையைக் கொடுத்திடு

மறைந்த கண்ணன், இவர்களுக்கு முகம் காட்டவேயில்லை. கண்ணன் பிரிவினால், ஆயர் சிறுமியர் வருந்தினர். பிரிவு, மிகக் கொடுமையாக இருந்தது. கண்ணனுக்கும் இவர்கள் பிரிவு ஆற்றொணாதாக இருந்தது.

பனிநீராடப் போகலாமெனச் சிறுமிகள் தீர்மானிக்கின்றனர். பனி நீராடுவதாவது, விடியற்காலையிலேயே எழுந்துபோய், குளிர்ந்த நீரிலே ஸ்நானம் செய்து வருவது. கண்ணன், இதை அறிந்து கொண்டு விடுகிறான். அவர்கள் போகையிலே, அவர்கள் பின்னாலேயே, நிழலைப்போலத் தொடர்ந்து சென்றான். இவன், இருளன்ன மேனியனாகையாலே, இவன் வருவதை யாருமே அறியவில்லை. பொய்கைக் கரைக்குச் சென்று, அங்கிருந்த ஒரு குருந்தமரத்தின் மீதேறி மறைந்து உட்கார்ந்து கொண்டான்.

சிறுமியர், ஆடைகளைக் களைந்து, மரத்தின் தாழ்ந்த கிளைகளில், தம் கைகளுக்கு எட்டும்படியாக, தொங்கவிட்டு விட்டு, நிச்சிந்தையாகப், பொய்கையில் இறங்கினார்கள், இப்பெண்கள்.

எல்லோரும் நீரிலே இறங்கிவிட்டனர் என்று நிச்சயமாகத் தெரிந்து கொண்டு, கண்ணன், மெதுவே இறங்கி வந்து, ஆடையணிகளைக் கவர்ந்து கொண்டு, மேலே ஏறி, நன்றாக உட்கார்ந்து கொண்டான்.

Koviloor Digital Library

குள்ளக் குளிர நீராடினார்கள்—பொய்கையை உண்டு இல்லை என்று பண்ணிவிட்டார்கள். மனசில்லாது, கரையேற எண்ணி, கைகளை நீட்டி, ஆடைகளை எடுத்துக் கொள்ள முயன்றனர். துழாவத் துழாவ துணிமணிகள் அகப்படவேயில்லை. நன்றாக உற்றுப் பார்க்கின்றனர். துணிகளைக் காணோம். 'திக்'கென்றது.

"இங்கேதானே போட்டோம்! எங்கே போய் விடும்?"

"யார்தான் எடுத்திருக்க முடியும்? யார் வந்தார்கள்? வேற்று மனிதர்கள் யாருமே இங்கில்லையே!" என்று அங்குமிங்கும் கண்களாலேயே தேடுகின்றனர்.

கண்ணனைக் கண்டனர், கடைசியில்.

"ஒன்றுமறியாதப் பேதைப் பெண்களை இப்படியா துன்புறுத்துவது? கண்ணா! இது நீதியா, தருமமா? துணிகளை உடனே கொடுத்துவிடு."

"துணிகளா? எனக்கொன்றும் தெரியாதே!"

"கண்ணா! அப்படிச் சொல்லிவிட்டால், என்ன செய்வது? உன் தலை மீதும், தோள்கள் மீதும் சார்த்திக் கொண்டிருக்கிறாயே, அவையெல்லாம் எங்களுடையது தான்."

"இதெல்லாம் உங்களதோ?"

"ஆமாம். எங்களதுதான்."

"வெகு நன்றாயிருக்கிறது. என்னுடைய பட்டுப் பீதாம்பரங்கள்." என்று சொல்லிவிட்டு, தான் சொன்னதை உறுதியாக ஸ்தாபிக்க, இன்னும் நன்றாக சார்த்திக் கொண்டான்.

Koviloor Digital Library

"உனக்கு தெரியக்கூடாதென்றுதான், பொழுது விடியுமுன் பொய்கைக்கு வந்தோம். அப்படியும் பலனில்லை. கண்ணா! தயவு பண்ணு."

"சூரியன் உதித்து விட்டான். அரவணைமேல் பள்ளிகொண்டவனே! பொய்கைக்கு நாங்கள் வருவது, இன்றே கடைசிநாள். இனி, என்றும், பொய்கைக்கே வரமாட்டோம்."

"என்னை என்னவெல்லாம் சொன்னீர்கள்? ஒரு அஞ்ஜலி பண்ணுங்கள்."

"சரி"யென்றவாறே, கழுத்தளவு நீரிலே நின்று கொண்டு, அஞ்ஜலி செய்தனர்.

"இப்படியெல்லாம் செய்தால், போதாது. வெளியே வந்து செய்யுங்கள்."

"கண்ணா! வெட்கமாக இருக்கிறது. பெரிய மனது பண்ணி, ஆடைகளைக் கொடுத்திடு. உடுத்திக் கொண்டு, எத்தனை முறை வேண்டுமானாலும் அஞ்ஜலி பண்ணுகிறோம்."

"வெட்கமா! உங்களுக்கா" என்று கடகடவென்று சிரித்தான். "என்னவோ புதுசாக ஏதேதோ சொல்கிறீர்களே!... சீக்கிரம்... ஆகட்டும்... எனக்கு ஊர்ப் பட்ட வேலைகள் இருக்கின்றன."

"கண்ணா! சுற்றத்தார் பார்த்தால் நன்றாகவா இருக்கும்!"

"உங்களுக்கு மட்டுந்தான் சுற்றத்தாரோ! எனக்கும் இல்லையா, என்ன? தாய் தந்தை, மாமன், மாமி என்று, எனக்கும்தான் எத்தனையோ பேர்!"

"நாங்களும் நீயும் ஒன்றா? நாங்களோ ஆயர் சிறுமியர். நீயோ, ஆயர் தலைவன். தவிர, நாங்கள் பழிபாவத்துக்கு அஞ்சுவோம். பழி பாவமென்றால்,

Koviloor Digital Library

உனக்குக் கரும்பு. ஒரு பெண்ணின் பொருட்டு, ஸமுத்திரத்திலே அணைகட்டி...எத்தனை செய்தாய்? எங்கள் மீது மட்டும் ஏன் அருளில்லாது போயிற்று?''

''பிராட்டிக்காகப் பாடுபட்டேனென்றால், வெறுமே படுவேனா? என் கருத்துக்குச் சற்றும் மாறாது உடன் பட்டிருந்தாளே! எனக்கு இசைவாக நீங்களும் இருந்தால் தானே, நானும் அருள் புரியமுடியும்?''

''நீ வேண்டுவதெல்லாம் தருவோம். உன் இச்சைப் படியே நடப்போம்'' என்றார்களேயொழிய, அப்படியே நின்று கொண்டேயிருந்தார்கள்.

இதைக் கண்ட கண்ணன், துணிகளை எடுத்துக் கொண்டு, இன்னும் சற்று மேலே உயரமான கிளையில் போய் உட்கார்ந்து கொண்டான்.

''குரங்குகளுக்குத் தலைவன் போல, அனாயாசமாக, மரத்தில், கிளைக்குக் கிளை தாவுகிறாயே!'' என்று சிரித்தார்கள்.

இத்தனை நாழிகை துகிலைக் கொடு, துகிலைக் கொடு—என்று அழுததென்ன, இப்போது பரிஹாஸம் செய்வதென்ன!

''என்னையா குரங்கு என்கிறீர்கள்!'' என்று, தலையில் முண்டாசு போல, சிலவற்றை சுற்றிக் கொண்டான். பெரிய ராஜாவைப் போல, முன்னும் பின்னும், சிலவற்றைப் போர்த்திக் கொண்டான்.

வேண்டுமென்றே, சற்று எம்பி, வெளியே எட்டிப் பார்த்தான். ''யார் யாரோ கூட்டமாய் வருகிறார்கள் போலிருக்கே'' என்று உரக்க முணுமுணுத்தான், பெண் களின் காதுகள் கேட்கும்படியாக.

''ஐயையோ! நம் பெற்றோர், அண்ணன்மார்களாகத் தானிருக்கும். கண்ணா! தயை செய்ய மாட்டாயா?

Koviloor Digital Library

அவர்கள் வருவதற்குள் சுற்றிக் கொண்டாவது நிற்கிறோம்!'' என்று பயத்தில் சிலர் அழத்தொடங்கி விட்டனர்.

சிலர், மிகக் கடுமையாகக் கோபம் கொண்டனர். ''இரு, இரு, அவர்கள் வந்து, உன் யோக்கியதையைக் கண்டு, உன் மீது சிற்றங்கொண்டு, உன்னை என்ன தான் செய்யமாட்டார்கள்?''

''கண்ணா! மீன்கள் காலைக் கடிக்கின்றன. எத்தனை நேரமாக இப்படியே நின்று கொண்டிருப்பது? கண்ணா!''

''குனிந்து உங்கள் அழகிய கண்களால், மீன்களை நன்றாக உற்றுப் பாருங்கள். உங்கள் கண்ணழகிலே சொக்கியே போய்விடும்.''

''கண்ணா! விளையாட இதுவா நேரம்? எங்களை வாழ்விப்பதற்காகத்தான், நீ கம்ஸனிடமிருந்து தப்பிப் பிழைத்தாய் என்று எண்ணினோமே! இப்படி நீ செய்வதைப் பார்த்தால், அந்தக் கம்ஸனே தேவலை போலிருக்கிறதே! அஞ்ஜலி செய்கிறோம். உடைகளைக் கொடுத்துவிடு.''

கண்ணன் கேட்டுக் கொண்டபடியே, பெண்கள் கூச்சம் வெட்கம் இவற்றை முற்றுலுமாகத் துறந்து, நீருக்கு வெளியே வந்து நின்று கொண்டு, கையை உயரே தூக்கிக் கூப்பிட்டபடியே, வேண்டினார்கள்.

கண்ணனும் ஆடைகளைக் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டான்.

Koviloor Digital Library

4. எத்தைத் தின்றால், பித்தம் தெளியும்?

கண்ணன் தங்களோடு இருந்தவரை, அவனை வைது தீர்த்தவர்கள், அவன் சென்றதும், பிரிவாற்றாது கலங்கினார்கள். கண்ணன் வரும் வழியைப் பார்த்துப் பார்த்து கண்கள் பூத்துப் போய்விட்டன. பாவம்! என்ன செய்வதென்று தெரியாமல் கலங்கினார்கள். குறிபார்த்தல், கூடலிழைத்தல் என்றெல்லாம் உண்டே! நாமும் ஏதாவது செய்து பார்க்கலாமென்று, பேசிக்கொள்கின்றனர்.

கடைசியில், கூடலிழைத்துப் பார்க்கலாமென முடிவு செய்து, கூடல் பலகையை எடுத்து வந்து, கூடலிழைக்க ஆயத்தம் செய்கின்றனர்.

முதலில் எம்பெருமானைத் தியானித்துக் கொண்டு, பலகையின் நடுவே, ஒரு பெரிய வட்டம் வரைய வேண்டும். வட்டத்திற்கு வெளியே, வட்டத்தைச் சுற்றி, சுழிசுழியாச் சின்னச் சின்ன வட்டங்களை கையை எடுக்காமலும், எண்ணாமலும் வரைய வேண்டும். சிறிய சுழிகளை எண்ணிப் பார்த்தால், இரட்டைப் படையாக இருந்தால், நினைத்த காரியம் கைகூடுமென்றும், ஒற்றைப்படையாக இருந்தால், காரியம் தாமதமாகும் என்று சொல்வார்கள்.

நாயகனைப் பிரிந்துள்ள நாயகி, பிரிவாற்றாது, கூடலிழைத்துப் பார்ப்பது வழக்கந்தான்.

Koviloor Digital Library

திருமழிசையாரும், நான்முகன் திருவந்தாதியில், "அழைப்பன் திருவேங்கடத்தானைக்காண, இழைப்பன் திருக்கூடல் கூட" என்றருளிச் செய்துள்ளதைப் பார்க்கலாம்,

இந்தச் சிறுமிகள், கூடல் தெய்வத்துக்கு முறைப்படிச் செய்வதைச் செய்து, பின் கூடலிழைத்துப் பார்க்கின்றனர்.

"கூடல் தெய்வமே! தெளிவுடைய பக்தர்கள் பலரால் கைகளாரத் தொழப் பெற்ற தேவனாக, வள்ளலாகத் திருமாலிருஞ்சோலையிலே எழுந்தருளி யிருக்கின்றவரான, அந்தப் பரமபுருஷன் பள்ளி கொண்டருளும் இடத்திலே, அவன் திருவடிகளை நான் பிடிக்கும் பேரதிர்ஷ்டம் எனக்குக் கிட்டுமாகில், நீ கூட வேண்டும்."

தெளிவுடைய பக்தர்கள் என்றால், தெளிவான அறிவுடைய பக்தர்கள். எதைப் பற்றித் தெளிவான அறிவு என்றால், எம்பெருமானைப் பற்றித் தெளிவான அறிவு. உபாய, உபேயங்கள் இரண்டும் எம்பெருமானே என்கிற தெளிவான அறிவுடைய பக்தர்கள். அந்த எம்பெருமான், வள்ளல்—கருணையை வாரிவாரி வழங்குபவர். அந்த வள்ளல் யார்? திருமாலிருஞ்சோலை யிலே வந்து உறைகின்ற அழகர். ஸ்ரீ வைகுந்தத்திலே, அதாவது, பரம பதத்திலே விரக்தியடைந்து, ஸம்ஸாரிகளைக் காப்பதற்கென்றே, மாலிருஞ்சோலை யிலே உறைகின்றார். எத்தகைய உதார குணம்! அந்த மணமாப்பிளைப் பள்ளி கொள்ளும் இடமெல்லாமே கோவில்தானே! அன்று உலகளந்த திருவடிகளையும், நடந்து நடந்து நொந்திருக்கும் திருவடிகளையும் பிடித்துவிட வேணுமென்ற பரிவு தோன்றுகிறது.

Koviloor Digital Library

"கேசவநம்பியின் கால்பிடிக்கும் பாக்கியம் தா"— என்று, முன்பு பாடியதை அடியொற்றியே, இப்போதும் பாடுகிறாள், ஆண்டாள்.

அவனாலேயே பேறு பெற வேண்டியதிருக்க, இவ்வாறு கூடலின் காலிலே விழுகிறாள் என்றால், எத்தனை பரிதவிப்பு இருக்கிறதெனப் புரிந்து கொள்ளலாம்.

"காட்டிலேயுள்ள திருவேங்கட மலையிலும், நகரமாகிய திருக்கண்ணபுரத்திலும், மனக் குறையேதுமின்றித் திருவுள்ளம் உகந்து, நித்தியவாஸம் செய்கிற, வாமனாவதாரம் செய்தருளிய பெருமான், ஓடிவந்து, என் கையைப் பிடித்துத் தன்னோடு அணைத்துக் கொள்வானாகில், நீயும் கூடிடு, கூடல் தெய்வமே!"

ஆண்டாளுக்கும், தோழிகளாகிய ஆய்ச்சிகளுக்கும் எம்பெருமானோடு கூடவேண்டும் என்ற தவிப்பு ஒரு பக்கமிருக்க, இவர்களோடு கூடவேண்டுமென்கிற தவிப்பு, எம்பெருமானுக்கே அதிகமாய் இருக்கிறது. இல்லாவிடில், திருவேங்கடத்திலும், கண்ணபுரத்திலும் வந்து உறைவானேன்!

காட்டில் வேங்கடம் என்கிறாள், ஆண்டாள். இதற்குப் பெரியவர்களிடம் அர்த்தம் கேட்பது, பரம ரஸமாயிருக்கும். வேங்கடம் என்னாது, காட்டில் வேங்கடம் என்று ஏன் சொல்கிறாள்? தண்டகாரண்யத்திலே, ரிஷிகளோடு கூட, வனவாஸம் செய்ததற்கு ஒப்பாகும், திருமலையில் வாழ்ச்சி. திருமலையில் உள்ள பக்தர்கள், ரிஷிகளுக்கு ஒப்பாவர்.

கண்ணபுரநகர்—அயோத்தி நகரத்திலே, ஆநந்தமாக வாழ்ந்ததற்கு ஒப்பாக, இப்போது கண்ணபுரத்திலே உறைகிறான். திருமலையை பிருந்தாவனமென்றும், கண்ணபுரத்தை ஆயர்பாடியென்றும் கூறுவதுண்டு.

Koviloor Digital Library

வனவாஸம்—நகரவாஸம், இரண்டிலுமே, பக்தர்களுக்காகட்டும், எம்பெருமானுக்காகட்டும் மட்டற்ற மகிழ்ச்சியே வனவாஸத்திலே, ரிஷிகள் ஸ்ரீராமனோடு இருக்கும் பேற்றைப் பெற்றதால் ஸந்தோஷமடைந்தனர். நகரவாஸத்தின் போது, பொது மக்கள் மகிழ்ந்தனர். இதனாலே, ஸ்ரீராமன் மகிழ்ந்தான். விபவாதாரத்துக்கும், அர்ச்சாவதாரத்துக்குமுள்ள ஒற்றுமையைக் காட்டியருளுகிறாள்.

வாட்டமின்றி மகிழ்ந்துறைகிறான், எம்பெருமான். நித்தியஸூரிகளின் திரளின் நடுவேயும் ஆநந்தந்தான். ஸம்ஸாரத்திலே—வானரர், ராக்ஷஸர், வேட்டுவர்–என்று, வேறுபாடின்றிக் கலந்த போதும் ஆநந்தந்தான்.

ஸ்ரீராம, கிருஷ்ணாவதாரங்கள், அந்தந்த காலங்களில், அந்தந்த காலத்து மக்களுக்கு மட்டுமே. அப்படியின்றி, அர்ச்சையிலே நமக்கு எப்போதும் ஸேவை கிடைக்குமே! இதுதானே அர்ச்சையின் விசேஷம்!

எம்பெருமானையடைய வேண்டுமெனில், நாம்தான் அவனைத் தேடிப் போக வேணும். அவன், நமது இருப்பிடத்தைத் தேடி வரும்படியான நிர்ப்பந்தம் என்ன? இதை விளக்கமாய் எடுத்துக்காட்டவே, வாமநவதாரத்தை காட்டுகிறாள்.

வாமனன் ஒட்டமாய் ஓடி வருவது வெகு நியாயம். மூன்றடி மண்ணுக்குப் பதறி ஓடி வந்தவன், பெரியாழ்வார் பெற்ற பெண்பிள்ளையான இவளைப் பெற ஓடிவர மாட்டானா என்ன? ஓடியோடி வரவேண்டுமென விரும்புகிறாள். இவள் மீதுள்ள காதலாலே, எம்பெருமான் ஓடி வருகின்ற ஓட்டத்தைக் கண்டு ரஸிக்க, ஆசைப்படுகிறாள்.

இனிமேல், எம்பெருமான் வரவே மாட்டானோ என்று, துவண்டுபோய் விழும்போது, பதறி ஓடிவந்து

Koviloor Digital Library

கையைப் பற்றினால், மறுபடியும் நம்பிக்கையும் வரும். உயிரும் வருமே!

ஆவலும் அன்பும் உடையவர்கள் நெஞ்சு தவிர, வேறெங்கும் பொருந்தாதவனும், துவாரகை எனும் அழகிய நகரத்துக்கு அரசனும், கன்றுகளை மேய்த்து விளையாடும் கண்ணன் வருவானெனில்,கூடிடு கூடலே!

ஆவல் வேறு, அன்பு வேறா? மேலாகப் பார்த்தால், எல்லாமே ஒன்று போலத்தான் தோன்றும். ஆனால், அதில் சிறிதும் ரஸமில்லையே! ஆராய்ந்து பார்த்தால், அதிக அழகுகள் புலப்படும்.

எம்பெருமான் எப்போது வருவான் என்று ஆவலோடு காத்துக் கொண்டிருந்தனர். வரவும் இல்லை- வருவதற்கான அறிகுறிகளும் இல்லை. நோன்பு நோற்பது, காமனை வணங்குவது, தூது விடுவது-என் றெல்லாம் என்னென்னவோ செய்துகொண்டு, கண்ணன் வரும் வழியையும் பார்த்துக் கொண்டிருந்தனர். இது ஆவல்.

அன்புடையார் யார்? பெருமானின் பேரெழிலை எல்லோருந்தான் பருகின்றனர். கஸ்தூரித் திலகமணிந்த நெற்றியும், பிராட்டியின் ஆலிங்கனத்தால் மலர்ந்த மார்பும், பராக்கிரமம் பொருந்திய தோள்களும், யாரைத் தான் விட்டுவைத்தன? அவர்கள் எல்லோருமே அந்தத் திருமேனியெழிலைப் பருகியதோடு சரி, பெரியாழ்வார் மட்டும் என்ன செய்தார்? அந்தத் திருமேனி எழிலுக்கு என்ன தீங்கு நேரிடுமோ என்று, பதறித் துடித்து, ரக்ஷைகட்டும் முகமாய், பல்லாண்டு பாடினார். இதுவே அன்பு.

ஆண்டாளுக்குப் பெருமான் பேரில்—ஆவல்

ஆழ்வாருக்குப் பெருமான் பேரில்—அன்பு

Koviloor Digital Library

ஆண்டாளின் ஆவல்—நோன்பு நோற்று, காமன் காலிலே விழவைத்தது. ஆழ்வாரின் அன்பு—திருமேனிய யழகுக்குத் தீங்கு நேராது, பல்லாண்டிசைத்தது. ஆண்டாளைப் போல ஆவலுடையவர்கள் நெஞ்சிலே எம்பெருமான் உறைவான். ஆழ்வாரைப் போல அன்பு உடையவர்கள் நெஞ்சிலே எம்பெருமான் உறைவான்.

ஆவல், அன்பு உடையவர்கள் நெஞ்சங்களிலே மட்டும் எம்பெருமான் உறைவான். இவ்விரண்டுமில்லா தார் நெஞ்சங்களிலே, உறையான்.

நல்ல நறுமணங்கள் கமழும் துவாரகை அதிபதி கண்ணன் வந்துகூட வேண்டும். கண்ணுக்குக் கஸ்தூரி திலகம், சந்தனம் என்று ஆடம்பரங்கள் அதிகம். ஒரு வேளை, இவற்றை மனத்தில் வைத்துக் கொண்டுதான், நறுமணங்கள் கமழும் துவாரகை என்று ஆண்டாள் பாடுகிறாளோ?...இல்லையில்லை.

ஸமுத்திரத்தின் நடுவே, துவாரகை நகரைக் கண்ணன் நிர்மாணித்தான். தன் தேவி, ஸத்யபாமாவின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இந்திரனுடன், போரிட்டான். தேவலோகத்திலிருந்து, பாரிஜாதத்தை எடுத்துவந்து, பாமாவின் திருமாளிகையிலே, நட்டு வைத்தானல்லவா? பாரிஜாதம் மலர்ந்து, எங்கும் மணத்தைப் பரப்பிக்கொண்டு, கண்ணனின் பெருமை யைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. இந்த மலர்கள், கண்ணன் திருவாராதனைக்கென்றே மலர்கின்றன. கண்ணனின் காலடியிலே சென்று சேர்கின்றன. மலர்ந்த பயனையும் பெறுகின்றன. இந்தப் புஷ்பங்கள் பரப்பு கின்ற நறுமணத்தைத்தான், ஆண்டாள் பாடுகிறாள்.

ஸத்யபாமை என்னும் பெண்ணுக்காக, இந்திரனுடன் போர்புரிந்து, மரத்தையே பெயர்த்து எடுத்து வந்தவன், ஆண்டாளான எனக்காகவும், ஆய்ச்சியர்களுக்காகவும், கொஞ்சமேனும் சிரமப்படக்கூடாதா?

Koviloor Digital Library

துவாரபதிக்குக் காவலன்
கன்று மேய்க்கும் கோவலன்

அவனே காவலன், அவனே கோவலன். ஆஹா! ஒரே சமயத்தில் அவனுடைய மிகப்பெருமை வாய்ந்த அந்தஸ்தையும், மிகவும் சுலபமாய்க் கிட்டக்கூடிய எளிமையையும் சேர்த்துப் பாடுகிறாள்.

துவாரகைக்குக் காவலன் என்பதாலே, மிடுக்கும் ஆடம்பரமும், ஜபர்தஸ்தும் தடபுடல்படும்.

கன்று மேய்க்கும் கோவலன் என்பதாலே, சுலபனா யும், எளியனாயும், தடபுடல் ஏதுமின்றியும் இருக்கிறான். ஒரே சமயத்தில், அவனது பரத்வத்தையும், ஸௌலப் யத்தையும் பாடி மகிழ்கிறாள்.

நான்முகனும், நித்தியஸிரிகளும் போற்றும்படி அங்கே எழுந்தருளியிருந்து, பின்பு, தேவர்களின் வேண்டுகோளுக்கிரங்கி, வடமதுரையில், வசுதேவர் தேவகிக்கு மகனாக அவதரித்தருளிய கண்ணன், இன்று என் துயர்தீர இங்கே எழுந்தருளுவாரோ?

பூ மகன் என்று அவன் பாடுவது, உபலக்ஷணமாகி, லீலாவிபூதியாகிற இந்த விபூதியைக் குறிக்கும். வானவர் என்பது, நித்தியவிபூதியாகிற பரமபதத்தைக் குறிக்கும்.

எம்பெருமானின் கடாட்சம் நித்தியவிபூதியிலுள்ளோ ருக்கும் வேண்டும், அதே போல, லீலாவிபூதினரான நமக்கும் அவசியம் வேண்டும்.

ஒரு ஆற்றிலே ஓடம் சென்று கொண்டிருக்கையிலே, இரு பக்கக் கரையிலும் இருப்பவர்கள் ஓடத்தை அழைப்பது போல, எம்பெருமான் இருவிபூதியின ருக்குமே மிகமிக வேண்டியவன்.

ஸர்வேஸ்வரனே வந்து பிள்ளையாகப் பிறந்ததால், ஸந்தோஷம் மீறிப்போய், தேவகியின் முகம் ஒளி

Koviloor Digital Library

பெற்றது. தேவகியின் மாமகன்– பெருமை பெற்ற மகன், புகழ் மிக்க கண்ணன்.

மிக்க நற்குணங்களையுடைய வசுதேவருடைய பெருமை பொருந்திய, அரசிளங்குமரன், கண்ணபிரான். வசுதேவரையும் நியமிக்கும் கோமகன்.

கம்ஸனால், கண்ணனுக்கு எந்த நேரம் என்ன ஆபத்து வருமோ என பீதி கொண்டிருக்கும் வசுதேவரின் பீதியைப் போக்கி, அவரை ஆசுவாசப்படுத்தும் கண்ணன்.

இப்படிப்பட்ட பெருமைகள் வாய்ந்த கண்ணன், என்னிடம் வரும்படியான பேறு வாய்க்கவேணும். கண்ணன் நடந்து வருகையிலே, நடையழகைக் கண்டு களிக்கலாம். நீயும் கூடி, எங்களையும் கூட்டிவை.

யமுனை மடுவை விஷமாக்கி, மடுவின் மேலே பறந்து செல்லும் பட்சிகளையும், விஷத்தாலே முடித்துக் கொண்டிருந்த காளியனைக் கண்ணன் அடக்கினான்.

கடம்பமரத்தின் மீது ஏறி நின்று, கொடிய காளியன் தலைமீது குதித்து, நடனமாடினாய். கடம்பமரமும், காளியனும் என்ன தவம் செய்தனரோ? உன் திருவடிகளின் ஸ்பர்சம் பெற, கடம்பமரமாகவாயினும், காளியனாகவாயினும் ஜென்மம் எடுத்திருக்கலாமே!

காளியன் மீது நடனமாடிய சிரமம் தீர, என்னை வந்து அணைத்துக் கொள்ளலாகாதா?

தர்மயுந்தர்தான் செய்ய வேண்டுமென்று கண்ணனைப் போலவே, கம்ஸனும் எண்ணியிருந்தால், அவன் வஞ்சனம் தலைக்கட்டும். அவன் எண்ணியிருந்த வஞ்சத்தை அவனோடேயே போகும்படி அழித்து விட்டான், கண்ணன்.

மாமனாகிய கம்ஸனை முடித்த பின்பு, பாட்டனாராகிய உக்கிரஸேனரை அரசனாக்கி விடுகிறான்

Koviloor Digital Library

கண்ணன். பாட்டனாரின் ராஜ்யத்தைக் கண்ணன் மீதேற்றி, கண்ணனையே மதுரைப் பதிக்கொற்றவன் என்கிறாள், ஆண்டாள், "வாசுதேவன், மதுரை மன்னன்"— என்கிற பெரியாழ்வாரின் கூற்றை வலியுறுத்தி.

சிசுபாலவதம், இரட்டை மருதங்களை முறித்தது, ஏழு ரிஷபங்களை வென்று, நப்பின்னைப் பிராட்டியை மணந்தது, பகாசுரவதம், கம்ஸவதம்,— என்று, கண்ணனின் வெற்றிகளைப் பேசுகிறாள் ஆண்டாள்.

இனியவை அல்லாத மொழிகள் எல்லாம், வசவுகள், அனைவராலும் இகழத்தக்க வார்த்தைகள் "பலப்பல நாழச் சொல்லிப் பழித்த சிசுபாலன்," "கேட்போர் செவிசுடு கீழ்மையான வசவுகளே வையும் சிசுபாலன்."

"இத்தகைய சிசுபாலனை வென்றது போன்ற பலப் பல வெற்றிகளைக் குவித்திருக்கும் கண்ணன், என் னுடன் கூடும்படியாக, நீ கூடிடு கூடலே."

வாமன, திரிவிக்கிரம அவதாரங்களில் ஈடுபட்டுப் பாடுகிறாள். பெருமாள், ஏற்கெனவே அழகு. அதற்கு மேலே குடையும், கமண்டலமும் தரித்து, முப்பரி நூலணிந்து, மாவலி பக்கம் சென்று, தன் நிலைக்கும் பெருமைக்கும் சற்றும் பொருத்தமில்லாது, தன்னைத் தாழ்த்திக்கொண்டு, தேவர்களுக்காக, மாவலியிடம் மூன்றடிநிலம் இரந்து கேட்ட எளிமையில், ஈடுபட்டுப் பேசுகிறாள்.

'அடியொன்றினால்' என்று பாட்டிலே வந்தாலும், அடி ஒவ்வொன்றையும் எண்ணியெண்ணி மனம் உருகுகிறாள்.

கஜேந்திரனுக்கு அருளியதை எண்ணி வியக்கிறாள். மடுக்கரையிலே நின்று கொண்டு, கஜேந்திரன் கூக்குர லிட்டபோது, அமைகுலையத் தலைகுலைய எம்

Koviloor Digital Library

பெருமான் ஆடையாபரணங்கள் நிலைகுலைய ஓடி வந்தருளிய அழகு, ஆண்டாளின் நெஞ்சத்தை ஈர்த்து விட்டது.

ஒரே உறுதியோடு, கண்ணனையே அடைவோம் என்றிருக்கிற ஆய்ச்சியர்கட்கு முகங்காட்டாவிடில், அவர்கள் மனம் நொந்து, கண்ணன் மீது கடுங்கோபம் கொண்டு, ஊடலும் கொண்டு, கண்ணன் வருகையில், அவனுக்கு முகங்கொடுக்காமலிருக்கையிலும் அதையும் மறந்து, அவர்கள் தம்மிது பித்தாகும்படி செய்கிறான் கண்ணன்.

கண்ணனோடு ஊடல் கொள்வதும், குறைகளை உணர்த்துவதும், பின்பு கூடுவதும் செய்கின்ற நிறைந்த புகழையுடைய ஆய்ச்சியர்கள் இழைத்துப் பார்த்த கூடலைப் பற்றி, அழகிய மயிர்க்கற்றையையுடைய ஆண்டாள் அருளிச் செய்த இத்திருமொழிகளைக் கற்ற வர்களுக்கு, எம்பெருமானைப் பிரிந்து, கூடலிழைத்துப் பார்த்து வருந்தும்படியான பாவங்களே வராது என்று, பலன் சொல்லப்பட்டிருக்கிறது.

அன்பினாலே ஒன்றுபட்டிருக்கையிலே, நாயகி, திடீரென்று, காரணமின்றியோ அல்லது அல்ப காரணத் துக்காகவோ, நாயகன் மீது கோபங்கொண்டு விடுவாள். நாயகன், பலவிதமாய்க் கெஞ்சியும், கொஞ்சியும், அவளை சமாதானப்படுத்துவான். இதைத்தான், ஊடல் என்பார்கள்.

எம்பெருமானைப் பிரிந்து, தாங்கள் வாடுவதை, தூது விட்டும், இன்னும் பலவிதமாயும் அவனுக்கு உணர்த்து வார்கள்.

இவர்களது துடிப்பை எம்பெருமான் புரிந்துகொண்டு இவர்களோடு கூடுவான்.

Koviloor Digital Library

இவ்வாறாக, அவன் மீது கோபங்கொண்டு, அவன் கெஞ்சும்படியாகப் பண்ணுவதும், அவன் சற்றுப் பிரிந்து சென்றாலும், தாங்காது. அவனுக்கு எப்படியாவது தெரிவிப்பதும், அவன் வருகையில், இஷ்டப்படி ஸந்தோஷமாய் அவனோடு கலந்து பரிமாறுவதுமாக, எப்போதும் எம்பெருமானையே எண்ணிக்கொண் டிருப்பார்கள்.

ஆய்ச்சியருக்கு நிறை புகழ் எப்படி வந்தது? ஸம்ஸாரத்திலே உழன்று கொண்டிராது, எப்போதும் எம்பெருமானையே எண்ணிக் கொண்டும், அவனைப் பற்றியே பேசியும், பாடியும், ஆடியும் கொண்டிருப்ப தாலும், இவர்களுக்கு நிறை புகழ் வந்திருக்கலாம். ஆனால்,இன்னொரு விசேஷமான பொருள் உண்டு.

கண்ணன் ஒரு ஆய்ச்சியை நாடி வருகையிலே, அவள் கோபித்துக் கொண்டு, "இதுவரை எங்கே சென்றிருந்தாய்? என்ன செய்து கொண்டிருந்தாய்?"— என்று, கண்ணனை வெளியே தள்ளிக் கதவையும் அடைத்து விடுவாள். கண்ணனோ, அவள் மீதுள்ள காதலால், வெளியே, திண்ணையிலேயே உட்கார்ந்து கொண்டு, "எப்போது கதவு திறக்குமோ?" —என்று வெகு ஆவலாகக் காத்துக் கொண்டிருப்பான். ஒருநாள், இரண்டு நாள், நான்கு நாள் என்று, போய்க்கொண்டே இருந்தாலும், கண்ணன் காத்துக் கொண்டேயிருப்பான்.

கண்ணனை, ஒரு நாள் பட்டினி போட்டவள், நாலு நாள் பட்டினி போட்டவள் என்று, இந்த ஆய்ச்சியர் களுக்குப் புகழ் சேரும்.

இப்படிப் பலப்படியாய் கூடலிழைத்து வேண்டியும், கூடல் மறுமொழி கூறாததால், அடுத்து என்ன செய்ய லாம் என்று, ஆண்டாள் யோஜிக்கிறாள்.

ஏதாவது செய்துதானாக வேண்டும் — என்று உறுதி கொள்கிறாள்.

Koviloor Digital Library

5. குயிலே!
கோவிந்தன் வரக் கூவு!

யோஜித்தபடியே, தன்னுடைய நந்தவனத்தில், கனத்த இதயத்தோடு உலாவிக் கொண்டிருக்கிறாள். வீசுகின்ற தென்றல்கூட உரைக்கவில்லை. மயில்களும், கிளிகளும், குயில்களும் மகிழ்ச்சியாகக் 'கிச் கீச்'சென்று ஏதோ, தம் பாஷையில் பேசிக் கொண்டிருக்கின்றன. குயிலைக் கூவச் சொல்லலாமே என்று தோன்றுகிறது.

குயிலைக் கூப்பிடுகிறாள். ` அது அருகிலே வந்து உட்காருகிறது.

"குயிலே! மென்னடை அன்னங்கள் விளையாடு கின்ற ஸ்ரீவில்லிபுத்தூரிலே, எழுந்தருளியுள்ள எம்பெரு மானுடைய அழகிய திருவடிகளைக் காணவேண்டு மென்று ஆசைப்பட்டு, சண்டையிடுகின்ற கெண்டை போன்ற என் இரு கண்கள் உறங்குவதேயில்லை. வாமனனாய் வந்து, திரிவிக்கிரமனாய் வளர்த்த என் கிளியை, உனக்குத் தோழமையாக்கி வைப்பேன். கோவிந்தன் இங்கே எழுந்தருளும்படிக் கூவு."

பரமபதத்திலே நித்யஸூரிகளோடு இருக்கவேண்டிய எம்பெருமான், ஏன், ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வந்து, அங்கே உறைந்திருக்கிறான்?

பரமபக்தையான ஆண்டாளைப் பார்க்கத்தான்.

அன்னப்பறவைகள், மென்னடையை யாரிடமிருந்து கற்றன? ஆண்டாளிடமிருந்துதான். அந்த அன்னங்

Koviloor Digital Library

களின் மென்னடையைக் கண்டால், ஆண்டாளின், நடையைக் கண்டது போலவே, எம்பெருமானுக்குச் சற்று ஆறுதலாயிருக்கிறது. ஆண்டாளை நேரே காணாவிடினும், சற்று, மனந்தேறியிருக்க முடிகிறது.

ஆண்டாளுக்கு சாட்சாத்தாக, எம்பெருமானின் திருவடிகளை ஸேவிக்கவேண்டும் போலிருக்கிறது. அதனால், அவள் கண்கள் உறங்குவதேயில்லை.

சரி. வில்லிபுத்தூர் உறைவான் பொன்னடிகளை ஸேவித்துவிட வேண்டியதுதானே! அதில் என்ன கஷ்டம்? அதற்காக, உண்ணாது, உறங்காது, ஏன் தவிக்க வேண்டும்? வடபத்திரசாயி கோயில், இவளது திருமாளிகையிலிருந்து நாலடிதான். வண்டி கட்டிக் கொண்டு போகவேண்டுமா, இல்லை, துணைதான் வேண்டுமா? ஒன்றுமில்லை.

கோயிலுக்குப் போகட்டும். நினைத்தபோதெல்லாம் போகட்டும். யார் தடுக்கிறார்கள்? ஆனால், ஏதோ போனோம் வந்தோம் என்றிருந்தால், கவலையில்லை. சித்த விகாரப்படாமல், போனபடிக்கே திரும்பினால், யார் கேட்கப் போகிறார்கள்? கண்ணழகு, திருமார்பினழகு, திருத்தோள்கழகிலே ஈடுபட்டு, எப்போதும், அவற்றைப் பற்றியே பேசிக்கொண்டு,பின்பு அவனையே எண்ணியெண்ணி, ஏங்கி, இளைத்துபோவாளேயென்று, இவளை யாருமே கோவில் பக்கம் விடுவதில்லை.

"குழையும் வான்முகத்து ஏழையைத் தொலை வில்லிமங்கலம் கொண்டு புக்கு, இழைகொள் சோதிச் செந்தாமரைக் கண்பிரான் இருந்தமை காட்டினீர்—" என்பது போலே, அழைத்துக்கொண்டு போவானேன்,— எம்பெருமான் இப்படி, தன் வலையிலே அகப்படுத்திக் கொண்டு விட்டானே— என அங்கலாய்ப்பானேன்... என்றுதான், இவளைக் கோவிலுக்குப் போகவொட்டாது தடுத்து வைத்திருக்கின்றனர்.

Koviloor Digital Library

அதனால்தான், வில்லிபுத்தூர் உறைவானைக் காண இயலவில்லை.

பரமபதநாதன், பாற்கடல் பள்ளியான் என்றாலும், அவை எட்டாத தூரமென்று ஒருவாறு மனந்தேறலாம். நாலடியிலே இருக்கிற கோவிலுக்குக் கூடப் போக முடியாமையை எண்ணி வருந்துகிறாள்.

"ந் சோ! த் சோ" என்ற குயில் "எல்லே பாவம்!" என்று பரிதாபப்பட்டுக் கேட்டது.

"அம்மா! கோதை! உன்னோடு எத்தனையோ நாட்கள் பழகியிருப்பதால் கேட்கிறேன். நான் கூவினால், அவன் வருவானா? மறைகளுக்கும், மறையவர்களுக்கும் கூட எட்டாதவன் அவன். அவனைக் காணவேண்டு மென்பதும் எளிதான காரியமா என்ன?" என்றது.

"அவன்தான் உலகளந்தவனாயிற்றே! திரிவிக் கிரமனாய் வந்தபோது, எந்தவித வித்தியாசமின்றி எல்லோர்க்கும் சுலபனாக இருந்ததை யெண்ணித்தானே, நானும் அவனையடைய ஆசைப்படுகிறேன்! அவன், பக்தர்களுக்கு எளியவன்தான். நீ கூவி."

குயில் எதற்காகவோ தயங்குவது போலிருக்கவே, ஆண்டாள் தொடர்கிறாள்.

"குயிலே! எந்த உபகாரத்துக்கும், பிரதியுபகாரம் செய்வதுண்டு. எம்பெருமான் வரும்படியாய் நீ கூவினால், என்னுடைய கிளியை உனக்கு ஸ்நேகமாக்கித் தருவேன். என் கிளியை, சாமானியமாய் எண்ணிவிடாதே. அது, சாட்சாத் இளையபெருமானான லக்ஷ்மணனுக்கு ஒப்பானது. குஹப்பெருமாளுக்கு ஒப்பான உனக்கு, லக்ஷ்மணனுக்கு ஒப்பான என் கிளியின் தோழமை, மிகவும் ஏற்றத்தைத் தருமன்றோ?"

முகம் பிரகாசிக்கிறது, குயிலுக்குத் தன்னைப் பரமபக்தனான குஹனோடு ஒப்பிட்டுச் சொல்கிறாளே யென்று.

Koviloor Digital Library

"அவர் பேசுவது நன்றாக இருக்கிறது, குயிலே! பிறர் துயரத்தை அழித்தல்தான் எல்லா தர்மங்களிலும் சிறந்தது என்றவரா, இன்னும் என் துயரைப் போக்காது வாளாயிருக்கிறார்? குயிலே நீ கூவு. எம்பெருமான் நிச்சயமாய் வருவார். இனிமையான பழங்களையுடைய மாந்தோப்பிலே, சிவந்த தளிர்களைக் கொத்தித் தின்கிற குயிலே! தனது சார்ங்க வில்லை வளைத்து வலிக்கும் சக்தியுடைய பெரிய திருக்கைகளை உடையவனாய், ஸகலவித சாமர்த்தியமும் உடைய எம்பெருமான், பரணய ரீதியிலும் வல்லமை பெற்றவன். எங்களிடையே யுள்ள ஸங்கேத மொழிகளை வேறு யாரும் அறியார். தூரத்தே இருக்கின்ற எம்பெருமான் வரும்படி கூவுவாய். அவன் இங்கு வந்த பின், நான் அவனிடம் காட்டப் போகிற மிடுக்கைக் காணத்தான் போகிறாய்.

எம்பெருமான், மிகப்பெரிய வீரன். எப்பேர்பட்ட எதிரியையும் முறியடித்துவிடக் கூடியவன், ஸ்ரீ சார்ங்கத்தின் டங்காரத்வனியைக் கேட்டே, எதிரிகள் புறமுதுகிடுவர்.

எப்பேர்ப்பட்ட வீரனுக்கும், பிரேமையுண்டே! சிருங்காரரஸம் கொண்டாடுகைக்கு பாங்காகப் பிரணயித்வமுடையவன்.

என்னைக் காணப் புறப்பட்டு வருகையிலே, இடையிலே எத்தனையோ இடையூறுகள். அவற்றைத் தகர்த்தெறிந்துவிட்டு வருவான். மேலும், அவன் ஜகத்ரக்ஷகன். மூவுலகத்தையுமே ரக்ஷிக்க வேண்டியிருப்பதால்தான், இந்தத் தாமதம்.

அவனுக்கும், எனக்குமிடையே ஸங்கேதப் பேச்சுகள் நிறைய உண்டு.

"என்னைப் பிரியேல் – பிரிவில், ஒரு பகல் ஆயிரம் ஊழியாவோ!" என்றேன்.

Koviloor Digital Library

"உன்னைப் பிரியேன். பிரிவில், தரியேன். உன்னைப் பிரிந்து, அரைக்கணம் உயிர் வாழேன்—" என்றான். 'அப்படிச் சொன்ன எம்பெருமான், இப்போது வாரா திருக்கின்றான். அவன் இங்கே வருமாறு கூவுவாய்!"

தேங்கனி மாம்பொழில் செந்தளிர் கோதும் சிறு குயிலே! "இனிய மாம்பழங்களையும் தளிர்களையும், உண்பதுதான் பிறவியெடுத்ததின் பயனா? இதை எப்போது வேண்டுமானாலும் உண்ணலாமே! அதை விட, என் பிரிவுத் துன்பத்தைப் போக்க, நீ ஏதாகிலும் உபகாரம் செய்யலாகாதா? இதுவன்றோ முக்கியம்! நீ கூவியதால், எம்பெருமான் விரைந்து எழுந்தருளினால், அதில், உனக்கும் பெருமைதானே!"

"அது சரி..." என்று இழுத்த குயில் நிறுத்திவிட்டது. அதனால், எனக்கு என்ன பலன் என்று கேட்கத்தான் என்பதைப் புரிந்துகொண்ட ஆண்டாள், சிரித்துக் கொண்டாள்.

"குயிலே! அவனை நான் செய்வது காணே!"

"புரியும்படியாய்ச் சொல்லம்மா!"

"எம்பெருமான் எழுந்தருளினால், அவனை நான் என்ன செய்யப்போகிறேன் என்பதை நீயே உன் கண்களாலேயே பாரேன்!"

"என்ன செய்யப் போகிறாய்? உன்னை மாதிரி எத்தனை பேரைப் பார்த்திருக்கிறேன்! எம்பெருமான் வந்ததும், என்னை மறந்தே விடுவாய்! அவனுக்கு உபசாரங்கள் தடபுடல்படும். பாலென்ன, பழங்க ளென்ன, பஞ்சு மெத்தையென்ன! என்னையா நினைக்கத் தோன்றும்! யார் நீ என்று கேட்பாய்!" குயில் அவளைச் சீண்டியது. "பிரிந்தவர் கூடினால், பேசவும் வேண்டுமோ?" என்று, பெருங்குரலில், ராகமாய் இழுத்தது.

Koviloor Digital Library

"சீ! சீ! என்ன அப்படிக் கூறிவிட்டாய்! எம்பெருமானை நான் திரும்பியும் பார்க்கமாட்டேன். முகத்தைத் திருப்பிக் கொள்வேன். எம்பெருமான் எப்படிக் கெஞ்சினாலும், மசிய மாட்டேன். ஏறிட்டும் பார்க்காது, தண்டனையளிப்பேன். இதைக்காணத்தான் போகிறாய். சீக்கிரம் கூவு!"

அதாவது, இவர்களின் ஊடலைக் காண்பதே, குயிலின் பிறவிப்பயன் என்கிறாள். ஏனெனில் சாமானிய மனிதர்களின் ஊடலல்லவே அது! எம்பெருமானோடு, ஆண்டாள் கூடியிருப்பதைக் காணாத கண் என்ன கண்ணே!

அந்தப் பரமபதநாதன், இவள் தாடையைப் பிடித்தும், கையைப் பிடித்தும், பலவிதமான அன்புமொழிகளும் கூறிக்கொண்டு, கெஞ்சோ கெஞ்சு என்று கெஞ்ச, இவள் முகத்தைத் திருப்பிக் கொள்ள, கடைசியாக வேறு வழியின்றி, எம்பெருமான், இவள் காலையே பிடித்துக் கொண்டு கெஞ்சத்தானே போகிறார்! ஆஹா... கற்பனையில் கண்டாலே உடல் சிலிர்க்கிறது. உயிர் சிலிர்க்கிறது. நேரிலேயே காணப்போகிற இக்குயிலின் பாக்கியந்தான், என்னே, என்னே! உற்சாகத்தோடு குயில் கூவியது.

Koviloor Digital Library

6. பெருமை பெற்ற கனவு

குயில் கூவியும் எம்பெருமான் வரவேயில்லை. அந்தக் கவலையிலேயே ஆண்டாள் மனம் வருந்தி னாள். குளிர் தென்றலும் நெருப்பாய்ச் சுட்டது. கோலக் கிள்ளை மொழியும் செவியில் குத்தலெடுத்தது. பாலும் கசந்தது— படுக்கையும் நொந்தது. புரண்டு புரண்டு படுத்தாள். கண்ணீர் பெருகியது. அழுது கொண்டே, தன்னையுமறியாது உறங்கிவிட்டாள் போலும், திடுக் கிட்டு விழித்துக் கொண்டாள்.

மேனி புல்லரித்தது, புதுசோபை பெற்றது போலி ருந்தது. சாளரத்தை ஓடிப்போய்த் திறந்து பார்த்தாள். ஆனைச்சாத்தான் பட்சிகள் 'கீசுகீசு' என்று சிறகடித்து பறந்தோடின. கோழிகள் கூவின. ஓஹோ! விடியற் காலை. அதுவும் சிற்றஞ்சிறு காலை. ஸந்தோஷம் பொங்கியது.

வருத்தத்தோடு படுத்தவள், மகிழ்ச்சியோடு எழுந் தாள் என்றால், என்ன பொருள்?

அவள் எம்பெருமானைக் கண்டாள். நேரிலா கண்டாள்? இல்லை. கனவிலே கண்ணனைக் கண்டாள்.

விடியற்காலையிலே கனவு கண்டால், நிச்சயமாய், அது கூடிய சீக்கிரமே பலிக்கும் என்பார்கள். நம்முடைய எண்ணங்களின் பிரதிபலிப்புதான் கனவாக வருகின்றது. நம்முடைய ஏக்கங்கள், அந்தரங்க விருப்பங்களையே திரும்பத் திரும்ப நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம்.

Koviloor Digital Library

அவை, உள்மனத்திலே, நன்றாக, ஆழமாகப் பதிந்து விடுகின்றன. உறக்கத்தின்போது, அவையே படக் காட்சி போல் விரிகின்றன.

எல்லாக் கனவுகளும் கனவாகா. விடியற்காலையில் காணும் கனவுகள் மட்டுமே பலிக்கும். பகலில் காணும் கனவுகள், வீண்தான்.

காவியங்களிலே எத்தனையோ கனவுகள் பற்றிப் படித்திருக்கிறோம். நாயகனைப் பிரிந்த நாயகி, கனவிலே அவனைக் கண்டு மகிழ்கிறாள்.

பெருமையும் புகழும் பெற்ற கனவைக் கண்டது, ஆண்டாள்தான்... எத்தனை கதறியும் கண்ணன் வந்தானில்லை. தன் உயிரே பாரமாகிவிட்டது போல, ஆண்டாள் உணர்ந்தாள். அவள் முடிந்து விடக்கூடாது. இன்னும், பக்தியோடு, அவள், மேலும்மேலும் பல பாசுரங்களை அருளவேண்டும். தான் கேட்டு மகிழ வேண்டுமென்று எண்ணிய கண்ணனோ, நேரிலே போகாவிடினும், கனவிலாவது சற்று முகங்காட்டலா மென்று, அவளுக்குக் கனவிலே வந்து காட்சியளித்தான். இந்தக் கனவைக் கண்டபின்னரே, ஆண்டாள், சற்று மனந்தேறி உயிர்தரித்திருந்தாள். விவாஹ மஹோத் ஸவத்தையே முழுதும் கனவாய்க் கண்டாள். வழக்கம் போல, அவளது தோழிமார்கள் வந்தனர்.

''ஆண்டாள்! நேற்று இரவு நீ இருந்த இருப்புக்கும், இப்போதைக்கும் நிறைய வித்தியாசங்கள் இருக் கின்றனவே! இரவு, முகம் வாடிக் கூம்பியிருந்ததென்ன, இப்போதலர்ந்த தாமரைப்போல, விகசிப்பதென்ன? என்ன விஷயம்? எங்களிடம் சொல்லக்கூடாதா?''

எல்லோரையும் அழைத்துக்கொண்டு, நந்தவனத் துக்குப் போகிறாள். தலையைக் குனிந்துகொண்டு, கால் விரலால் தரையில், கோலம் போட்டுக் கொண்டிருக் கிறாளேயொழிய, எதுவும் பேசவேயில்லை.

Koviloor Digital Library

"ஏதோ சொல்லப்போகிறாய் என்று எண்ணி னோம்..." என்று ஆரம்பித்தாள் ரோஹிணி.

"மணமகன் ஸ்ரீமந் நாராயணன் என்னை மணக்க நிச்சயித்து, ஆயிரக்கணக்கான யானைகளுடன் திருவீதிப் பிரதக்ஷிணமாய் எழுந்தருளுகிறார். பெரிய வர்கள் எழுந்தருளும் போது, பூர்ணகும்பங்கள் வைப்பதும், தோரணங்கள் நாட்டுவதும் சாஸ்திரத்தை யொட்டிய ஸம்பிரதாயமாகையால், ஊரே அலங்கரிக்கப் படுகிறது" என்கிறாள், கண்களை அகல விரித்துக் கொண்டு.

"அதுசரி. ஆநிரை மேய்க்கப்பிறந்த கண்ணனுக்கு யானைகள் எப்படிக் கிடைக்கும்?" என்று கேட்கிறாள், தோழி.

"போடி பைத்தியம்! வசுதேவரின் செல்வமெல்லாம் கண்ணனுடையதுதானே! தத்துப் பிள்ளைக்கு இரண்டி டங்களிலும் லாபமாச்சே!" என்றாள் ஆண்டாள், வசுதேவரின் ராஜ்யத்திலுள்ள செல்வத்தையெண்ணி.

"சக்ரவர்த்தித் திருமகனின் பட்டாபிஷேகத்தின் போது, வானர வீரர்கள் நாலாபக்கமும் சென்று, தீர்த்தங்களைக் கொணர்ந்தது போல, என் கல்யாணத் தின் போதும், அந்தணர்கள் புனிதத் தீர்த்தங்களைக் கொணர்ந்தனர். காப்புக் கட்டுவதைக் கனவில் கண்டேன்."

"கண்ணனோ இடையன். அவனுக்கென்னடி ஆசாரமும் முடியும் தெரியும்? பெரி...சா என்னவோ புனிதன் என்கிறாய்!"

"மற்றப்போது எப்படியோ? இப்போது ஸ்நானம் செய்து, அனுஷ்டானங்களையும் தப்பாமல் செய்து கையும் பவித்திரமுமாய், வைதிகமாய், ஒருவர் மீதும் படாமல், ரொம்ப ஆசாரமாகத்தானடி இருக்கிறார்" என்றாள், ஆண்டாள் பெருமையாக.

Koviloor Digital Library

''ஆமாமடியம்மா! துளி ஆசாரம் குறைந்தாலும், பெரியாழ்வார் பெண்ணைக் கொடுக்கமாட்டாரென்ற பயந்தானடி'' என்ற ரோஹிணி, ஆண்டாளின் விலாவில் இடித்தாள்.

'கொல்'லென்று சிரிப்பலைகள் எழுந்து அடங்கின.

''இப்படியெல்லாம் பரிஹாஸம் பண்ணினால், நான் மேற்கொண்டு சொல்லவே மாட்டேன்.'' என்று, பொய்க் கோபம் காட்டினாள், ஆண்டாள்.

''அவ கிடக்கிறா. நீ சொல்லும்மா!''

''தேவர்கள் தலைவனான இந்திரன் முதலிய தேவர்கள் கூட்டமாக வந்திருந்து என்னை மணப்பெண்ணாகப் பேசி நிச்சயித்து, மற்ற பலவும் செய்து, என்னுடைய நாத்தனாரான துர்க்கை எனக்குப் புதுப்புடவையும் உடுத்தி, மணமாலையும் சூட்டுவதுபோல, கனாக் கண்டேன். தோழீ நான்.''

தேவர்களுக்கு மிகவும் ஸந்தோஷம். நம்பெருமானுக்கு கல்யாணமஹோத்ஸவம் என்று, குதூஹலத்தோடு, திரள் திரளாக வருகின்றனர். எல்லாம் பேசி முடித்தபின், இனியும் தாமதம் வேண்டாமென்று, உடனேயே, துர்க்கையைக்கொண்டு, சில சடங்குகளைச் செய்விக்கின்றனர்.

சக்ரவர்த்தித் திருமகனாக அவதாரம் செய்தபோது, சரபங்கரின் ஆச்ரமத்துக்கு வந்தும்கூட, இந்திரன் பெருமாளை ஸேவிக்காது போய்விட்டான். ஏனெனில், அப்போது பெருமாள் தன்னுடைய பரத்வத்தைக் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால், ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தின்போது, அப்படியல்லவே, பரத்வமும் கூடவே வந்து பரிமாறும் அவதாரமாகையாலே,தேவர்களும் வந்து குறுக்கும் நெடுக்குமாக உலாவி, தங்கள் பெருமையையும் பறைசாற்றிக் கொண்டனர்.

''சுந்தரி என்றால், துர்க்கை என்கிறாயே!... அது எப்படி?'' என்று, சந்திரிகை கேட்டாள்.

Koviloor Digital Library

"துர்க்கை கண்ணனோடு பிறந்தவளாதலால் எனக்கு நாத்தனார்தானே! ஆகாயத்திலே அந்தர்தானமாய்ப் போனாளல்லவா? அதனால், சுந்தரி என்று பெயர்."

"ம்... அப்புறம்..."

"இளமங்கையர் தீப கலசங்கள் ஏந்தி எதிர் கொண்டழைக்கின்றனர். மதுரை மன்னன் கண்ணன், அவற்றை ஏற்றுக் கொண்டு, மணப்பந்தலிலே புகுந்தார்."

"பார்த்தாயா ரோஹிணி! மதுரை மன்னன் என்கிறாள். தன் கணவர், மன்னனாகத்தான் இருக்க வேண்டுமாம்." என்று, சந்திரிகை, மற்றவர்களுக்கு எடுத்துக் கொடுத்தாள்.

"இல்லையில்லை! மதுரைக்கு மன்னனாக இருக்க வேண்டுமென்று, ஆசைப்பட்டு, இப்படிச் சொல்ல வில்லை. அந்தப் பெயரில், கண்ணனுக்கு விருப்பம் அதிகம். அதனால்தான் சொன்னேன். ஒரு பக்தன், மிக அழகான, ஸ்ரீ கிருஷ்ணவிக்ரஹத்தை ஆராதித்து வந்தான். அதற்கு என்ன பெயரை இடுவது என்று யோஜித்துக் கொண்டே இருந்தான். கண்ணன் அவனது கனவிலே தோன்றி, "அப்பா! எனக்கு மதுரை மன்னன் என்கிற பெயரிலே தனி விருப்பம். அந்தப் பெயரையே இடு" என்றாராம். அதனால்தான்" என்றாள், ஆண்டாள்.

"அது சரி, பூமியதிர வருவானேன்?"

"பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்ணான ஆண்டாளை மணம் புரிந்துகொள்ள வருகையில், பதற்றம் இருக்காதா, என்ன? அதனால், பூமி அதிர் கிறது." என்று, பரிஹாஸம் செய்த ரோஹிணி, ஆண்டாளைப் பார்த்து, "சரி, நீ மேலே சொல்லு" என்றாள்.

Koviloor Digital Library

''மத்தளம் முதலான மேளதாளங்களும், சங்குகளும் முழங்குகின்றன. அத்தை மைந்தன் மதுசூதன் வந்து கரம் பற்றுகிறாரடி'' என்றாள் ஆண்டாள். உடனே மனக்கண்ணில் அக்காட்சி விரிந்தது. அதிலேயே லயித்து விட்டாள்.

''கண்ணன் உனக்கு அத்தை பிள்ளையா? இந்த சொந்தம் எப்போ வந்தது? எனக்குத் தெரியவே தெரியாதே''—என்றாள் வேணி, நகைத்துக்கொண்டே. ''நப்பின்னைக்குக் கண்ணன் அத்தை பிள்ளை இல்லையா? மாமன் மகள், அத்தை மகன், கல்யாணத் துக்கு முறைதானே! அதனாலே, நப்பின்னையைப்போல இவளும் ஆசைப்படுகிறாள். இதுகூடவா தெரிய வில்லை!'' என்கிறாள், ரோஹிணி.

''அது சரி கோதை! மதுசூதன் என்கிறாயே! அது ஏனடி?''

ஆண்டாள், காட்சியிலேயே லயித்துப் போய் விட்டிருக்கிறாள். பதிலே இல்லை. லேசாக ஆண்டாளை உலுக்கினாள்.

''என்ன கேட்டாய்? மதுசூதனன் என்று ஏன் சொன்னாய் என்று தானே! மதுசூதன் என்றால், மது என்கிற அரக்கனைக் கொன்றவன், விரோதிகளை முடிப்பதிலே வல்லவன் என்று அர்த்தம். என்னைக் கைப்பிடிக்க ஆசைப்பட்டு, உறவு முறை கொண்டாடிக் கொண்டு, யாரேனும் வந்தார்களானால், கண்ணன், அவர்களை முடித்து விடுவார்.''

''பேஷ்! பேஷ்! உன்னைக் கைப்பிடிக்கும் தைரியம் கண்ணனைத் தவிர, வேறு யாருக்கு வரும்?'' என்று, விளையாட்டுக்காக ஆண்டாளைத் தள்ளிவிட்ட சந்திரிகை, ''அப்புறம் கனவைச் சொல்லு...'' என்று கேட்டாள்.

Koviloor Digital Library

"வேதங்களையோதும் வேதியர்கள் உரக்கவும், ஸ்பஷ்டமாயும், துளிபிசகாமலும் மந்திரங்களைக் கூறினார்கள். கண்ணன் என் கையைப் பிடித்துக் கொள்ள, இருவரும் ஹோமாக்னியைப் பிரதக்ஷினம் செய்தோம். தெளிவாக மந்திரங்களை ஓதியதைக் கண்ணனும் பிரமாதமாக ரசித்தாரடி..." என்றாள், ஆண்டாள், மிக மெல்லிய குரலில்.

"இடையன் கண்ணனுக்கு வேதம் தெரியுமாம். ரசித்தானாம். பிரேமைக்கும், உண்மைக்கும் எத்தனை தூரம் பாரேன்" என்று சிண்டினாள், ரோஹிணி.

"இதென்ன கூத்து! கண்ணனுக்கு வேதம் தெரியாதாமே! சாந்திபனி முனிவரிடம் படித்தாரடி." சட்டென்று ஆண்டாள் இடை வெட்டினாள்.

"அதானே! ரோஹிணி! நீ சற்று சும்மாயிருக்க மாட்டாய்?" என்று அதட்டினாள், சந்திரிகை.

"என்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் நம்மை ஆட்கொள்ளும் ஸ்ரீமந் நாராயணன், தன் கையால் என் தாள் பற்றினார். அப்படியே அம்மி மிதித்தேன்."

"கண்ணனை ஸ்ரீமந் நாராயணன் என்கிறாய்! சரி. இப்போது அவன், தன் கையால் உன் காலைப் பற்றினான் என்கிறாய்! சாக்ஷாத் பரமபதநாதன், உன் காலைப் பிடிப்பதாவது! என்ன உளறுகிறாய்! அவன் காலை நீ பிடிக்கவேணும் என பிரார்த்தித்தாய். இப்போது இப்படிச் சொல்கிறாயே!"

"யாராயிருந்தாலென்ன! ஸ்வருபதசையில் கைங்கர்யத்தின் போதுதான், நாம், அவன் காலைப் பிடிப்பது. பிரணய தசையில் பரிமாற்றத்திலே வந்தால், அவன்தான் நம் காலைப் பிடிப்பான்"— என்றாள், ஆண்டாள்.

"அதுதானே! அப்படிச் சொல்லு, ஆண்டாளின் காலைப் பிடிக்கக் கண்ணன் என்ன பாக்கியம் செய்தானோ?"

Koviloor Digital Library

அதிர்வேட்டாக சிரிப்பலைகள் எழுந்து அடங்கின.

''நான் போகிறேன்...'' என்று, பொய்க் கோபத்தோடு ஆண்டாள், எழுந்து போக யத்தனித்தாள். அவளைப் பிடித்திழுத்து உட்கார வைத்தனர். வெறும் வாயையே மெல்லுவார்கள். இப்போது அவல் வேறு கிடைத்திருக்கிறதே! விடுவார்களா?

''என் ஸஹோதரர்கள் பொரியை எடுத்துக் கொடுக்க, அதை நான் அரிமுகன் அச்சுதன் கைமேல் வைத்துப் பொரியிடும் லாஜஹோமம் செய்தோம்.''

''அதென்ன அரிமுகன்?''

''ஹிரண்யவதத்துக்காக நரஸிம்ஹமாய் வந்தாரில்லையா? அதுதான்...''

'இந்த ஆண்டாள் பெரிய கைகாரி. பாரேன்... என்னவெல்லாம் சொல்கிறாள்' என்று வியந்து நிற்கின்றனர்.

''ஐமார் என்று பாடினாயே! ஐமார் என்றால் யார்?''

''ஐமார் என்றால், என் ஸஹோதரர்கள்''— என்று, விளக்கினாள், ஆண்டாள்.

''உனக்குத்தான் ஸஹோதரர்களே கிடையாதே! பின் யார் பொரியிட்டது?''

''அதனாலென்ன? ஒரு ஸஹோதரன் இல்லாதார்க்கு ஊரெல்லாம் ஸஹோதரர்கள். ஹரி பக்தர்கள் எல்லோருமே என் ஸஹோதரர்கள்தான். என்னுடைய ஸஹோதரர்கள் சிறந்த ஹரிபக்தர்கள். ருக்மியைப்போல அல்ல. நற்செல்வனைப் போல மிகச் சிறந்த ஸ்ரீகிருஷ்ண பக்தர்கள்.''

''யார் அந்த நற்செல்வன்?''— இது ஒருத்தி.

''திருப்பாவையில் சொன்னேனே! பாலைக்கூடக் கறக்காமல், தன் ஜீவனத்தையும் துறந்து, ஸ்ரீகிருஷ்ண பக்தியில் ஈடுபட்டிருந்த, அந்த நற்செல்வன்தான், என்

Koviloor Digital Library

ஸஹோதரனாக இருந்து பொரியிட்டான். தன் மனத்துக்குப் பிடித்தமானவன், தன் தூய பக்தன் ஒருவன், மைத்துனனாக வாய்த்தது பற்றி, கண்ணனுக்கு மிகவும் ஸந்தோஷம், திருப்தி. இம்மையில் அவனுக்கு எல்லாவித மங்களங்களையும் கொடுப்பதாயும், கடைசியில், வேறெங்கும் அல்லல்படாது,தன் திருவடிகளில் சேர்த்துக் கொள்வதாயும் வாக்களித்திருக்கிறார், கண்ணன்'' — ஆண்டாளுக்கு உணர்ச்சியில், தொண்டை அடைத்துக் கொண்டது.

எல்லோருமே சில வினாடிகள், நற்செல்வனைப் பற்றியே, எண்ணிக் கொண்டிருந்தனர். மௌனம் நிலவியது.

"அதற்கப்புறம் குளிர் சாந்தமும், சந்தனமும் பூசி, நீராடி, யானை மேல் வீதிகளில் வலம் வந்தோமடி! ஸந்தோஷம் மிறிப்போய் எழுந்து பார்த்தபின்தான், அத்தனையும் கனவு என்று தெரிந்தது. எத்தனை நாழிகை என்று, சாளரத்தைத் திறந்து பார்த்தேன். விடியற்காலைதான்... விடியற்காலையில் சொப்பனம் கண்டால், கூடிய சிக்கிரமே பலிக்குமென்பார்களே!'' கண்களில் ஒளி படரத் தோழிகளைக் கேட்டாள்.

"கோதை! ஸஞ்சலப்படாதே! விடியற்காலையில், கனவு கண்டாய்! கட்டாயமாகப் பலித்தே தீரும். உடனடியாகப் பலிக்கும். கவலையை விடு. நாங்கள் போய்விட்டு அப்புறமாக வருகிறோம்'' என்றவாறே அவளைத் தனிமையில் விட்டுவிட்டுச் சென்றனர்.

"சிக்கிரமே ஆண்டாளின் கனவு பலிக்க வேண்டும். வேட்டகத்துக்குக் கண்ணன் அடிக்கடி வருவானாகையால், நமக்கும் அடிக்கடி அவன் தரிசனமும் கிடைக்கும்'' என்று ரோஹிணி, சொல்லிக் கொண்டே போனாள்.

கனவென்பது, எண்ணங்களின் முதிர்ச்சிதான். மனோரதங்கள் - மனத்தின் ஆழ்ந்த ஆசைகள்

Koviloor Digital Library

கனவாகப் பரிணமிப்பதுண்டு. எதிர்கால நிகழ்ச்சிகளை முன் கூட்டியே உணர்த்தும் கனவுகளுமுண்டு. இது எம்பெருமான் அருளால், ஆத்மாவுக்கு உண்டாகும் தொலைநோக்கு உணர்வு. ஜீவர்களின் புண்ணிய பாபங்களின் பலமாக இன்ப துன்பங்களை கனவின் மூலமாய் அனுபவிக்கச் செய்யும் கனவுகளுமுண்டு.

ஆண்டாள் கண்ட கனவு, ஆண்டாளின் மனோரதம். அதாவது, பகவத் விஷயத்தில் ஆண்டாளுக்குண்டான ஊற்றம், ஆழமான பக்தி காதலின் முதிர்ச்சி.

ஒவ்வொருவருக்கும் மூன்று தசைகள் உண்டு. விழிப்பு நிலை, கனவுநிலை, உறக்கநிலை (ஜாக்ரதை, ஸவப்ந, ஸுஷுப்தி) விழிப்பு நிலை—ஆன்மாவும் மனமும், புலன்களும் கூடிய நிலை. இந்நிலையில், ஆத்மா ஹ்ருதயத்தில் இருக்கும்.

கனவுநிலை—புலன்கள் அடங்கி, ஆத்மாவும் மனமும் கூடிய நிலை. இந்நிலையில், ஆத்மா, கண்டத்தில் வந்திருக்கும். விழிப்புக்கும் நல்லுறக்கத்துக்கும் இடைப்பட்ட நிலை. உறக்கத்தின் ஆரம்பத்திலும், விழிக்கும் முன்புதான் கனவுகள் உண்டாகும்.

உறக்கநிலை—புலன்களும் மனமும் அடங்கி, ஆத்மா தன்னைத் தானே அனுபவிக்கும்—அதாவது உணரும் நிலை. இந்நிலையில், ஆத்மா, சிரஸ்ஸில் தங்கியிருக்கும். உறக்கம் சுகரூபமாயிருப்பதற்குக் காரணம் ஆத்மாநுபவமே.

கனவு கண்டதிலே, ஸீதையைவிடவும், கோதை, ஒரு படி உயர்ந்தே விட்டாள், என்றால் மிகையல்ல. ஸீதைக்குக் கனவு வராமல், திரிஜடைக்குத்தான் கனவு வந்தது. கனவின் இன்ப அனுபவத்தை ஸீதை இழந்து விட்டாள். திரிஜடை, ஒவ்வொன்றாய் சொல்லச் சொல்லத்தான், ஸீதை அறிந்து கொண்டாள்.

Koviloor Digital Library

ஆனால், இங்கே, ஆண்டாளோ, தேனைத் துளித் துளியாய் ரசித்து, அனுபவித்துப் பருகுவது போல, ஒவ்வொரு நிகழ்ச்சியையும் ரசித்து மகிழ்கிறாள். கனவு இன்பத்தை அனுபவிக்க, அவள் யாரையும் நம்பியிருக்கும் நிலையின்றி, தானே கண்டதால், ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நன்றாக எடுத்துச் சொல்லவும் வசதியாயிருந்தது.

பெரிய வெள்ளம் வரப்போவதற்கு அறிகுறியாக, நதியிலே நீர்க்கசிவு ஏற்படுவதுண்டு. அனுபவம் வாய்ந்த பெரியவர்கள், இதைக் கண்டு, தக்க முன்னேற்பாடுகள் செய்வார்கள். நிஜமாகவே கல்யாண மஹோத்ஸவம் பின்னாலே கோலாகலமாய் வரப்போவதற்கு அறிகுறியாக இக்கனவு அமைந்தது.

இக்கனவு வந்த பின்னரேதான், ஆண்டாளும், பெற்றோரும், மற்றோரும், சற்று மனந்தேறினர். நம்பிக்கை வந்து, உற்சாகமும் பெற்றனர். இக்கனவு தான் ஆண்டாளின் உயிரைக் காத்த மருந்தாகியது.

இன்றும், ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமணங்களிலே, இக்கனவுப் பாசுரங்கட்கு, ஒரு முக்கியமான இடம் உண்டு. இப்பாசுரங்களை முழுவதும், இசையமைத்துப் பாடுவார்கள். "சீர்பாடித் தளுவம் பிடிப்போமே!" என்று பினாஹஸ்பதிகள், ஒவ்வொரு பாசுரம் முடிந்த பின்னும், தட்டைப் பிடித்துத் தாம்பூல தட்சிணைகள் பெறுவர். இது, கொஞ்சங் கொஞ்சமாய் மாறித் தற்போது, "சீர்பாடிக் களிமின்—களிப்போமே" என்று இருக்கிறது. சீர்ப்பாடல்களைப் பாடி மகிழுங்கள்— நாங்களும் மகிழ்கிறோம்— என்று முடிப்பார்கள்.

இக்கனவுப் பாசுரங்களைப் படிப்பவர்களுக்கும், பாடுபவர்களுக்கும் பலன் சொல்லியருளியிருக்கிறாள். "தூயதமிழ் மாலை ஈரைந்தும் வல்லவர், வாயு நன் மக்களைப் பெற்று மகிழ்வரே!" என்பதுதான் பலன், "வாழ்க்கையே பலனடையக் கூடிய, ஒரு பலன்தான்."

Koviloor Digital Library

"பெறுமவற்றுள் அறிவறிந்த மக்கட்பேறு போல் பிறிதில்லையே!"

'தூயதமிழ் மாலை'—என்று சொல்கிறாள். ஊன்றிக் கவனித்தால், புலப்படும், ஒரு அரிய பெரிய விஷயம். ஒரு மொழியில் பாடப்பட்டால், எப்படித் தூய்மை பெறுகிறது? விஷயமும் அரிய விஷயம், மொழியும் அரிய மொழி. அதனால் மட்டுமா? அல்ல. பாடுபவரின் சொந்த அனுபவமாகவே இருந்துவிட்டால். அதில் கலப்படம் சிறிதும் இருக்காது. இதைப் பாடிய ஆண்டாள் பெற்ற பலன், கற்பவர்களும் பெறுவர். அதனால் தான், "தூயதமிழ் மாலை" என்கிறாள்.

'வாயுநன் மக்கள்' என்கிறாள். நல்ல குணங்கள் மட்டுமே நிறைந்த, மிகச் சிறந்த, பக்தர்களான குழந்தைகள் பிறப்பார்கள். அதனால், பெற்றோருக்கும், மற்றோருக்கும்கூட, பேறு கிடைக்கும். "தம்மில் தம் மக்கள் அறிவுடமை, பக்தியுடமை, மாநிலத்து மண்ணுயிர்க்கெல்லாம் இனிதன்றோ?"

இதிலே, இன்னொரு பொடியும் இருக்கிறது. இதைப் படிக்கும் கன்னிப் பெண்களுக்கு, உடனே, வெகு சீக்கிரமே திருமணமாகிவிடும்—என்பதை, மறைமுகமாய், "நன் மக்களைப் பெற்று மகிழ்வர்" என்பதன் மூலம் குறிப்பிடுகிறாள்.

எத்தனையோ கனவுகளைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால், இந்தக் கனவைப் பற்றிப் பேசினாலோ, படித்தாலோ, நமக்கு அரிய பலன் கிடைக்கிறது. வேறெந்தக் கனவுக்கும் இப்படிப்பட்ட பெருமை கிடைக்கவேயில்லை.

கோதை கண்ட கனவு மட்டுமே, நம்முடைய வாழ்க்கையோடு, பின்னிப் பிணைந்துள்ளது. இப்படிப் பெருமை வாய்ந்த கனவு வேறு ஏதேனும் உண்டா?

Koviloor Digital Library

7. பெண்களுக்கு பகையான பாஞ்சஜன்யம்

கனவைக் கொடுத்தானேயன்றி, கனவிலே வந்து முறையாக மணம் புரிந்து கொண்டானேயன்றி, கண்ணன் நேரிலே வாராது, வஞ்சித்தான். மனது அலை பாய்ந்தது.

''கண்ணனின் ஸம்பந்தத்தைப் பெற்றவர் யாரேனும் உண்டா?'' என்று தீவிரமாய் யோஜிக்கத் தொடங்கினாள்.

''கண்ணனின் வாயமுதத்தை இடைவிடாது பருகுபவர் யாரேனுமுண்டா?'' என்று, ஒரு எண்ணம் எழுந்தது. ''அந்தப் பேற்றைக், கண்ணன், யாருக்குமே கொடுக்கமாட்டான். வஞ்சமே உருவானவன்''—என்று எண்ணியவளுக்கு, உடனே, அவனது இடது திருக்கரத்திலே நித்தியவாஸம் செய்கின்ற திருச்சங்காழ்வானின் நினைவு வந்தது. அவனையே இடைவிடாது அனுஸந்தித்தாள். அதனால், திருச்சங்காழ்வான் வந்து, தரிசனமளித்தான்.

''கம்பீரமான சுபாவத்தையுடைய வெள்ளைச் சங்கே! உன்னை ஒன்று கேட்கப் போகிறேன். தட்டாது பதில் சொல்லு.''

ஒருவேளை சங்கு, தன் கேள்விகளுக்குச் சரியாகப் பதில் கூறாது போய்விடுமோ என்று, ''கம்பீரமான சுபாவமுடைய வெண் சங்கே''—என்று விளிக்கிறாள்.

''எனக்குத் தெரிந்தால், தட்டாது சொல்கிறேன்.''

Koviloor Digital Library

''உனக்கு மிக நன்றாகத் தெரிந்த விஷயத்தைத் தான் கேட்கப்போகிறேன். பெருமானின் அதர ரஸத்தை இடைவிடாது பருகும் பேறு பெற்றிருக்கிறாயே, அந்த ரஸம் எப்படியிருக்கும்? கற்பூரம்போலப் பரிமளம் வீசுமா? இல்லை, தாமரைப் பூப்போல, பரிமளம் வீசுமா?''

சங்கு பதிலே கூறவில்லை. என்ன பதில் கூற முடியும்?

''திருப்பவளச் செவ்வாய் தித்திப்பாய் இருக்குமா?''—என்று கேட்டுவிட்டுப் பதிலையும் ஆவலுடன் எதிர் பார்த்தாள்.

''குவலயா பீடத்தின் கொம்புகளாகிய தந்தத்தை முறித்தானே, அந்தக் கண்ணனாகிய மாதவனின் பவளம் போலச் சிவந்த வாயின் சுவை எவ்வாறிருக்கும்? தெரிந்து கொள்ள வேண்டுமென்ற விருப்பத்தோடு தானே கேட்கிறேன், சொல்லு சீக்கிரமாய்.''

மாதவன் — என்கிற சொல், மிக ஆழமானது. லக்ஷ்மியின் பதி. பெரிய பிராட்டியின் நாயகன் என்று பொருள். பெரிய பிராட்டியின் நாயகன் என்பதாலே, கருணை மிக்கவன். பக்தவத்ஸலன், தீனபந்து தீனதயாளன். எம்பெருமான் கொஞ்சம் முன்னே பின்னே இருப்பினும், பிராட்டி, அவனைக் கண்காணித்துக்கொண்டே இருப்பதால், கருணையைப் பொழிவான்.

'வெண் சங்கே'— என்று விளிக்கிறாள், சங்கு வெளுத்திருக்கிறது. ஏன்? பொதுவாக, உடல் எப்போது வெளுக்கும்? நாயகனைப் பிரிந்துள்ள நாயகிக்குத்தான் உடல் வெளுக்கும். இடைவிடாது, எம்பெருமானின் அதரரஸத்தைப் பருகிக்கொண்டிருக்கும் சங்குக்கு உடல் வெளுத்திருக்கிறது? அதாவது, எம்பெருமானைக் கணமும் பிரியாத சங்குக்கு உடல் ஏன் வெளுக்க

Koviloor Digital Library

வேண்டும்? எங்கே பிரிவு நேருமோ என்கிற அச்சத்தினால்; ஆண்டாளுக்கு எப்படியிருக்கும் என்பது உணரத் தக்கது.

சங்கு பதிலேதும் கூறவில்லை. ஆண்டாளுக்கு கோபமான கோபம்.

"ஏ, சங்கே! நீ எதை உண்கிறாய் எனில், உலகளந்தவனான எம்பெருமானின் வாயமுதம். ஏ சங்கே! எங்கே உறங்குகிறாயெனில், அந்தக் கடல் வண்ணனின் கைத் தலத்திலேதான். இதனால், பெண்கள் கோஷ்டி உன்மீது மிகவும் கோபமாயிருக்கின்றனர். இது நியாயமா? அநியாயமான காரியங்கள் பல செய்கின்றாயே!

"உலகளந்தான் வாயமுதம்— தேவர்களின் அமுதம், உவர்க்கடலிலே பிறந்தது. நீ உண்ணும் அமுதம் உலகளந்தான் வாயில் பிறந்ததாயிற்றே! கங்கையையும், கங்கையில் புனிதமாய்க் காவிரியையும்விடப் பரம பாவனமானதும், பரம போக்யமானதுமான, ரஸத்தைப் பருகிக் கொண்டிருக்கிறாய். கடல்வண்ணனின் திருக் கரத்திலே கண்வளர்கிறாய். இதைவிட வேறென்ன வேண்டும்? அப்போதும் திருப்தி என்பதே இல்லாதிருக் கின்றாய். எம்பெருமான் சம்பந்தப்பட்டவையெல்லாமே, நம்மை, இந்தப்பாடுதான் படுத்தும். அனுபவிக்க அனுபவிக்க, இன்னும் அதிகமாய் அனுபவிக்க வேண்டு மென்கிற ஆவலும் பதைபதைப்புந்தான் இருக்கும். அதனாலே, மற்றவர்களுக்குச் சிறிதும் இடங்கொடுக்கத் தோன்றாது.

"இனிய பொருளைத் தனியாகத் துய்த்தல் தகாது. வாழாப்பட்டுள்ளீரேல் வந்து, மண்ணும் மணமும் கொள்மின்— என்று கேட்டதில்லையோ?

"நீராடப் போதுவீர்-என்றாவது கேட்டிருக்கிறாயோ? எம்பெருமானை, நீ மட்டுமே இப்படி இடைவிடாது

Koviloor Digital Library

அனுபவிப்பதனால், பெண்கள் எல்லோரும் உன் மீது மிகவும் கோபமாயிருக்கின்றனர்.

"பண்பல செய்கின்றாய்—பண்பு + அல = பண்பல = பண்பற்ற. அநியாயங்கள் பல செய்கின்றாய். பெண்களாகிய எங்கள் மீது சற்று இரக்கம்கொண்டு, எங்களுக்கும் சற்று இடங்கொடுக்க மாட்டேனென்கிறாயே! இது நியாயமா? நீயே யோசித்துப் பார். பகவதனுபவம் எல்லோருக்கும் பொதுவானது. உன்னுடைய தனி உரிமையா என்ன?"

"அநியாயங்கள் பல செய்துவிட்டுப் பலப்பல பண்கள் இசைக்கிறாயே! நீ மிகவும் சந்தோஷமாக இருப்பதனால், பண்கள் வருகிறது. எம்பெருமானின் அதர ரஸத்தை நீ பருகிக் கொண்டிருப்பதால், ஏற்கெனவே எங்களுக்கு வயிற்றெரிச்சல். அதில், எண்ணெயை வார்ப்பதுபோல, பாடவேறு செய்கிறாயே!

"பாஞ்சசன்யமே! நீ என்ன செய்வாய்? நற்குடிப் பிறந்து, நல்ல சூழ்நிலையில் வளர்ந்திருந்தாலல்லவா, நல்ல எண்ணங்களும், பரந்த நோக்கும் வரும்? நீயோ, அசுரனான பஞ்சஜனன் உடலிலே பிறந்து, உப்புக் கடலிலே வளர்ந்தவன். அதனால், உன்னிடம் பரந்த நோக்கத்தையும், நல்ல எண்ணங்களையும் எப்படி எதிர் பார்க்க முடியும்?

"உன்னை, என்ன சொல்லி என்ன பிரயோஜனம்? என் போதாத காலம், எம்பெருமான் வந்து முகமும் காட்டாது, தவிக்க விட்டிருக்கிறான். எப்போதுதான் விடியுமோ?

"பதினாயிரத்து நூறு தேவிமார்கள் காத்திருக்கின்றனர். அவர்கள் யார்? எதற்காக காத்துக் கொண்டிருக்கின்றனர்? எல்லோரும், ஸ்ரீகிருஷ்ணனின் தேவியர்.

Koviloor Digital Library

கண்ணனின் அதராம்ருதத்தைப் பருகக் காத்திருக்கின்றனர். அவர்களெல்லோரும் அதற்கு உரிமைப் பட்டவர்கள். அவர்களுக்கும் பங்கு உண்டு. அப்படியிருக்க, அவர்களையும் விடாது, நீயே உண்கிறாய். இதென்ன அல்வழக்காடுகிறாய், நீ? அவர்கள் பக்கந்தான் நியாயமிருக்கிறது. அவர்களைத் தள்ளிவிட்டுவிட்டு, நீ இங்ஙனம் செய்வதுதான் அநியாயத்திலும் அநியாயமாய் இருக்கிறது. இப்படி அடாவடி செய்தாயாகில், உன்னை ஸாது கோஷ்டியிலே யார்தான் சேர்த்துக்கொள்வர்? யார்தான் மதிப்பார்கள்?

"கைங்கர்யச் செல்வம் மிகுதியாகப் பெற்றிருக்கும் நீ இப்படிச் செய்யலாமா? மற்றவர்களோடு அந்தச் செல்வத்தைச் சற்றுப் பகிர்ந்து கொண்டால்தான் என்ன, குறைந்தா போய்விடுவாய்?"

அகடவிகட சாமர்த்தியங்கள் எதுவும் எடுபடவில்லை. ஆண்டாள் மிகவும் மனம் வருந்திக் கலங்கினாள்.

Koviloor Digital Library

8. மேகவிடு தூது

"கார் காலத்திலே வருவேன்" என்று சொல்லிப் போன கண்ணனும் வரவில்லை. ஆண்டாள் நிலை குலைந்து போனாள். கண்ணீர் விட்டுக்கொண்டே, ஒரு நாள் சாயங்கால வேளையில், தன் நந்தவனத்திலே உட்கார்ந்திருந்தாள். அப்போது, மேகங்கள், கூட்டங் கூட்டமாய் வந்தன. மேகங்களோடுகூட, எம்பெரு மானும் வந்திருக்கிறானோ என்று பார்க்கிறாள். எம்பெருமான் வரவில்லை. மேகங்களையே தூதாக அனுப்புகிறாள்.

"ஆகாசம் முழுவதும் நீலநிறமான விதானம் போலி ருக்கின்ற மேகங்களே! தெளிந்த தீர்த்தங்கள் பாயுமிட மான திருவேங்கடமலையில் எழுந்தருளியிருக்கின்ற திருமாலாகிய எம்பெருமானும் உங்களோடுகூட எழுந் தருளியிருக்கிறானோ? முலை நுனியிலே கண்ணீர் அரும்ப வருந்தும் என் பெண்மையை உருவழிக்கிற அவரது இச்செய்கையால், அவருக்குப் பெருமையாகவா இருக்கும்?

எம்பெருமானும் தானும் படுக்கையிலே இருக் கையிலே, நீலநிற விதானத்தைக் காட்டியது போலிருக் கிறது" இந்த மேகங்களின் தோற்றம் என்பது உட்பொருள்.

'என் திருமால்'— என்கிறாள். பிராட்டியோடு வந்ததைக் குறிக்கிறது. பிராட்டிக்குக் கருணையுள்ளம். எம்பெருமானுக்குத்தான் என் மீது கருணையில்லை.

Koviloor Digital Library

இல்லாவிடில், நான் இப்படிக் கலங்கிக் கொண்டிருக்கையில், வராதிருப்பாரோ?

பெண் நீர்மை ஈடு அழிக்கும் இது—பெண்களுக்கே உரிய தன்மையைச் சிரழித்தல். "நாயகன் விருப்பப் படியேதான் எதுவும் நடக்கும்— அவன் வந்தபோது வரட்டும். நாம் சிறிதும் கலங்கவேண்டாம் -ஒரு முயற்சி செய்ய வேண்டாம்"— என்றிராமல், "எப்போ வருவாரோ?"—என்று விசாரப்பட்டுக்கொண்டு, அவரை வரவழைக்க, என்னென்னவோ முயற்சிகள் செய்து வைப்பதும், கண்ணீர் சிந்த வைப்பதும், கலங்க வைப்பதுமே, பெண்ணின் தன்மையை அழிப்பதாகும்.

இவருக்கு இது ஒரு பெருமையோ? ச்ரியப்பதி என்று, அகில உலகெங்கும் புகழ் பெற்றவர். ஸ்ரீமஹாலக்ஷ்மிக்கு கரசரணாதி அவயவஸ்தாநியையான என்னையும், பெரியபிராட்டியாரைப் போலவே, சந்தோஷப்படுத்த வேண்டாமா? இப்படிப் பராமுகமாய் இருந்தால் அவருக்கு இழுக்கு என்று தெரிவியுங்கள்.

'பெரியாழ்வார் பெற்ற பெண்பிள்ளையான ஆண்டாள், எம்பெருமானை ஆசைப்பட்டாள். அவளுக்கு என்ன குறைச்சல்? மடமயில் போன்ற தோற்றம், சோலைக்கிளி. குயிலையும் பழிக்கும் குரல்— பாடினாலோ, குழலிசையும் யாழிசையும் வெட்கும். எம்பெருமான் கல்மனசாயுள்ளாரே! என்ன அநியாயம்!' என்று கேட்பவரெல்லாம் உருகுகின்றனர்.

"மேகங்களே! எனக்காகத் தயைசெய்து, எம்பெருமானிடம் சென்று, பரிந்து பேசுங்கள்"— என்று, மேகங்களைத் தூது அனுப்புகிறாள். அவை, மௌனம் சாதிக்கின்றன. தொடர்ந்து கெஞ்சுகிறாள்.

"சிறந்த முத்துக்களையும், பொன்னையும் கொண்டு பொழிகிற காளமேகங்களே! திருமலையிலே எழுந்தருளி

Koviloor Digital Library

யிருக்கும் நிலநிறமான எம்பெருமானிடமிருந்து எனக்கு ஏதாகிலும் சேதி உண்டா? காமாக்னியானது உள்ளே புகுந்து, அதனால் கதுவப்பட்டுள்ள நான், இரவின் நடு ஜாமத்திலே, ஒரு தென்றல் காற்றுக்கு இலக்காகியிருப் பது, தகுமா?

முத்துக்களையும் பொன்னையும் பொழிகின்றீர்கள். எனக்கு எம்பெருமானின் ஒரு வாய்ச்சொல்தான் அருமையாகிவிட்டதா? பெருமானிடம் நான் வைத்துள்ள பிரேமை, என்னைத் தீயாகத் தகிக்கின்றது. தென்றல் காற்று வேறு, நோயை அதிகப்படுத்துகிறது.

சேர்ந்திருக்கும் காதலர்களாகிய பாக்கியவான்கள் தாம், தென்றல் காற்றை அனுபவிப்பார்கள். காதலர்கள் சேர்ந்திருக்கும் போது அகமளிக்கின்ற இத்தென்றல், காதலர்களுக்கு மிகப்பிரியமானது. விரகத்தில் தவிப்பவர் களுக்கு வெறுப்பூட்டும். அப்போது தென்றல் வீசினால் அதன் மீது அசூயையும், கோபமுந்தான் ஏற்படும்.

மதங்கொண்ட யானைகள்போல, கர்ஜித்துக் கொண்டு எழுகின்ற மேகங்களே! திருவேங்கடத்தை இருப்பிடமாய்க் கொண்டவர்களே! நாகத்தணையில் சயனித்துப் பள்ளிகொண்டிருக்கும் எம்பெருமான் ஏதாகிலும் எனக்குச் சேதி அனுப்பியுள்ளாரா? அவரே தான் எனக்குக் கதி என்பதையும் மறந்து, பெண்கொடி யான என்னை இந்த அவஸ்தைக்கு உள்ளாக்கினால், இந்த வையகத்தார் அவரை எவ்விதம் மதிப்பார்கள்?''

மத யானைபோல் எழுந்த மேகங்கள்— மேகங்கள், மத யானைபோல ஆர்ப்பரித்துக்கொண்டு, ஏன் எழுகின் றன? மேகங்களுக்கு என்ன வாழ்வு வந்திருக்கிறது? இத்தனைச் செருக்கும் மிடுக்கும் ஏன் கொண்டிருக் கின்றன?

Koviloor Digital Library

ஒன்றுமில்லாதவர்களெல்லாம் ஜபர்தஸ்து கொண்டாடுகையில், இந்த மேகங்கள் ஏன் கொண்டாடக் கூடாது? திருமலையிலே பெருமானை ஸேவிக்கப் பெற்றதாலேதான், இந்த மேகங்களுக்கு இத்தனை உயர்ச்சி! ''அகலகில்லேன் இறையும்'' என்று, அலர்மேல்மங்கை உறைந்திருக்கின்ற மலர்மார்பினை ஸேவிப்பதென்ன, சாதாரண காரியமா? ஜகத்ரக்ஷகனைக் கண்குளிர, ஆவி குளிர, ஸேவித்ததாலேதான். இவை, மதயானைகள் போல மதங்கொண்டு எழுகின்றன. மத யானைகள் போல, இவை எழுவது, முற்றிலும் பொருத்தமே. திருமலையிலே மேகங்களைக் கண்டால், யானைகள் நினைவுக்கு வரும்—யானைகளைக் கண்டால்,மேகங்கள் நினைவுக்கு வரும்.

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!— என்று பாடுகிறாள். இதற்குத் தனிப்பொருள் உண்டு. கிராமங்களிலிருந்தும், பட்டணங்களிலிருந்தும் வந்து, எம்பெருமானை ஸேவித்ததும், தத்தம் இருப்பிடங்களுக்குச் சென்று விடுவார்கள். ஆனால் நீங்களோ, வேங்கடத்தையே இருப்பிடமாய்க் கொண்டு வாழ்கின்றீர்களே! போனோம் வந்தோம் என்றில்லாது, அங்கேயே நிரந்தரமாய் வாழ்கின்றீர்களே! இருக்காதா பின்னே!

பாம்பணையான் என்கிறாள். அவனுக்குப் படுக்கை எது? பாம்புப் படுக்கை. இந்த ஆதிசேஷன் செய்யும் கைங்கர்யம் எத்தனை உயர்வு பெற்றது? நான் கொடுத்து வைக்கவில்லையே? என் பாக்கியம் இவ்வளவுதானா?

பாம்புப் படுக்கையில் படுத்துப் படுத்து, எம்பெருமானுக்கும் பாம்பின் குணமே வந்திருக்கிறது. பாம்பிற்கு இரட்டை நாக்கு, இப்படியும் பேசும்— அப்படியும் பேசும். சமயத்திற்கு தகுந்தாற்போலப் பேசி மயக்கும். அதைப்போலத்தான், எம்பெருமானும், முன்பு வந்த

Koviloor Digital Library

போது, "பிரியேன், பிரியேன்" என்றார். அதை அப்படியே நம்பினேன். அதை நம்பி மெய்ம்மறந்து இருக்கையிலேயே, "அவசரமாகச் செல்ல வேண்டியிருக் கிறது. கார் காலத்தில் வருவேன்" என்றார். சொன்ன படி வரவும் இல்லை. இது நியாயமா?

'வார்த்தை என்னே—' வார்த்தை சொன்னார். சொன்ன வார்த்தையைக் காப்பாற்ற வேண்டாமோ? பாரதப்போரிலே, அர்ச்சுனனின் தேர்த்தட்டிலே, ஸாரத் தியம் செய்கையிலே, என்ன வார்த்தைகள் சொன்னார்? "ஸாது ஜனங்களைக் கைவிட மாட்டேன்" என்றல்லவா சொன்னார்! சொன்னபடி செய்தாரா? காப்பாற்ற முடியாத வார்த்தைகளையெல்லாம் ஏன் சொல்ல வேண்டுமாம்? அந்த வார்த்தைகளை எல்லாம் உண்மை என நம்பிக்கொண்டு, என்னைப்போல, இன்னும் எத்தனையெத்தனை அசடுகள் காத்துக் கொண்டிருக் கின்றனவோ? !

'கதியென்றும் தானாவான்—' அவன் ஜகத்ரக்ஷகன்' ஜகந்நாதன். மூவுலகங்களையும் ரக்ஷிப்பவன். அவனை யன்றி, வேறு யாரும் காப்பார் இல்லை. எனக்கும் அவன் தான் கதி.

'கருதாது'— எண்ணிப் பார்க்கிறானா இதை? இல்லை. சற்றும் எண்ணிப் பார்ப்பதே இல்லை. அரைக் கணம் எண்ணிப் பார்த்தாலும், போதுமே! ஓடிவரத் தோன்றுமே! அவன்தான் இதைக் கருதுவதேயில்லையே! மறந்தே விட்டானே!

'வதை'— கொடியை என்ன செய்ய வேண்டும்? கொடியொன்று கீழே கிடந்தால், யாராயிருந்தாலும், அதைப் பார்க்கிறவர்கள் என்ன செய்ய வேண்டும்? உடனே எடுத்து, மெல்ல, கொழுகொம்பைச் சுற்றிப்

Koviloor Digital Library

படரவிட்டல்லவா போகவேண்டும்! தன்னைச் சுற்றிப் படர்ந்திருக்கிற பூங்கொடியை, கொழுகொம்பு, தானே கீழே தள்ளலாமா? ஈதெங்கேனும் உண்டா? அந்தக் கொடிக்கு, இது எப்பேர்ப்பட்ட சித்திரவதை!

'வையகத்தார் மதியாரே'— இந்த வையகத்தில் வாழ்பவர்களும் அவனை மதிக்க வேண்டாமா? நித்திய ஸுரிகளும், முப்பது முக்கோடி அமரர்களும் மட்டும் மதித்துப் போற்றினால் போதுமா? ஸம்ஸாரிகளும் மதிக்கவேணுமென்றுதானே, காட்டில் வேங்கடம், கண்ணபுரநகர் என்று வந்து, வாட்டமின்றி மகிழ்ந்து உறைகின்றான்? இந்த வையகத்தில் பிறந்து, அவளையே நினைந்துருகிக் கொண்டிருக்கும் என்னை இப்படி வதைத்தால், இதைக் காண்பவர்கள், அவனை எவ்விதம் மதிப்பார்கள்?

சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டும். அஞ்சுக் குடிக்கு ஒரு சந்ததியாய், மிக அருமையாய் பிறந்திருக்கும் என்னை வதைக்க வேண்டாமென்று, உங்கள் பெருமானிடம் போய்ச் சொல்லுங்கள்.''

Koviloor Digital Library

9. பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள்

ஆற்றாமை மீதூர, மேகங்களைத் தூது போக வேண்டினாள். அவைகளோ, தாம் வந்த காரியத்தைச் செய்தன. அதாவது, மழையைப் பொழிந்தன. அதனால், மண் குளிர்ந்தது. ஆண்டாளின் மனந்தான் குளிர வில்லை. மாறாகக் கொதித்தது.

தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்தது. பூங்குவளைகள் பூத்தன. பொறி வண்டுகள் கண்படுத்தன. மழைக்காலத்து மலர்களெல்லாம் மலர்ந்தன. மழைக் காலத்துக்கே உரிய காய்கள் பழங்கள் செழித்தன. மழைக் காலத்தில் உலாவுகின்ற மற்றப் பிராணிகளும் மகிழ்ச்சியோடு உலவின. எங்கும் மழையின் வரவு தெரிந்தது.

எம்பெருமானோடு கூடியிருந்த காலத்தில், இவைகள் எல்லாமே மனத்துக்கு இதமாய் இருந்தன. இப்போது, அவை எரிச்சலூட்டின.

முன்பெல்லாம் முல்லையரும்புகளைக் கண்டு, எம்பெருமான் புன்னகை புரியும்போது, லேசாகத் தெரியும் பல்வரிசை என மகிழ்ந்ததுண்டு. பிரிவின்போது, அதை எண்ணிக் கலங்குகிறாள்.

படா என்னும் கொடிகள் பூத்து, மலர்கள் 'கொல்' லென்று சிரித்தன, "எமக்கு நீ தப்பிப்பிழைக்க முடியுமா?" என்பது போல.

Koviloor Digital Library

காக்கணம் பூக்களையும், காயாம் பூக்களையும் கண்டு, திருமாலிருஞ்சோலை அழகுடைய நிறமாயிற்றே என்று விம்முகிறாள்.

குயில், மயில்' கருவிகளை, களங்கனி, காயாம்பூ– இவை எல்லாமே பஞ்சமாபாதகர்கள்—என்று நொந்து கொள்கிறாள். எவையெல்லாம் பஞ்சமாபாதகங்கள் என்று நமக்குத் தெரியுமே! மேற்கூறிய ஐந்தும், என்ன பாதகத்தைச் செய்திருக்க முடியும்? எம்பெருமானின் திருமேனியின் நிறத்தையும், அழகையும். நினைப்பூட்டு கின்றனவாம். எம்பெருமானைப் பிரிந்து, ஏற்கெனவே, தான் வாடிக் கொண்டிருக்கையில், இவைகளும் சேர்ந்து, தன்னை வாட்டுவதைத்தான், பஞ்சமாபாதகம் என்று சாடுகிறாள்.

ஓங்கின மலர்களையுடைய சோலைகள் சூழ்ந்த திருமாலிருஞ்சோலையிலே, நின்ற திருக்கோலத்திலே எழுந்தருளியிருக்கிற செந்தாமரை போன்ற திருக் கண்களையுடைய காளமேகம் போன்ற வடிவழகை யுடைய எம்பெருமானின் அழகிய வடிவம் போல, மலர் மேல் தங்கியிருக்கும் வண்டுக் கூட்டங்களே! நெருங்கி யிருக்கின்ற அழகிய சுனைகளே! அச்சுனைகளில் உள்ள செந்தாமரை மலர்களே! நீங்கள் எனக்கு எமதூதர்கள்தான். எனக்கு ஒரு புகல் சொல்லுங்கள்.

செந்தாமரை மலர்கள், எம்பெருமானின் கண்களை நினைவூட்டுகின்றன. இப்படி, ஒவ்வொன்றுமே எம்பெருமானையே நினைவூட்டுவதால், இவள், அவற்றைக் கடிந்து கொள்கிறாள். இவளின் உயிரை வாட்டுவதனாலே, அவற்றை யமதூதர்கள் என்கிறாள்.

எம்பெருமானோடு சேர்ந்திருந்த போது, சந்தோஷத்தையளித்த தாமரை மலர்கள், இப்போது, பிரிவின் போது, யமனாகி, இவளது உயிரைப் பறிக்கப் பார்க்கிறது.

Koviloor Digital Library

இதேபோல, ஸ்ரீராமாயணத்தில், சீதாபிராட்டி புலம்புவதைப் பார்க்கலாம்.

பிரிவுத் துயரம் மிறிப்போய், பிராணனை விட்டுவிட வேண்டுமென்கிற எண்ணம், சீதாபிராட்டிக்கும் ஆண்டாளுக்கும் பொதுவானதாக இருந்தது.

''நீங்கள் எல்லோருமே, எம்பெருமானின் சம்பந்தத்தைப் பெற்றிருக்கிறீர்களே! ஏ வண்டுக் கூட்டங்களே! சுனைகளே! செந்தாமரைகளே! எனக்கு ஒரு பற்றுக்கோடு சொல்லுங்கள்...'' என்று, தளர்ந்து விழுந்தாள்.

பின்பு, த்வயானுஸந்தானம் பண்ணினாள். உத்தர கண்டத்தை அனுஸந்தானம் செய்தாள். அதனாலே, கைங்கர்யம் செய்ய விரும்பினாள். இப்போது, உள்ளம், மிகவும் தளர்ந்திருப்பதால், காயிக கைங்கர்யம் எதுவும் பண்ண முடியாது போலிருக்கவே, வாசிக கைங்கர்யம் பண்ண முடிவு செய்து, பாசுரம் பாடுகிறாள்.

''மணங் கமழுகின்ற சோலைகளையுடைய அழகர் மலையிலே எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுக்கு, நூறு பானைகள் நிறைய வெண்ணெயும், நூறு பானைகள் நிறைய அக்காரவடிசிலும் கண்டருளப் பண்ணியிருக்கிறேன். பெருமைமிக்க அந்த எம்பெருமான், இன்று, இவற்றை ஏற்றுக் கொள்வானோ?''

பால்சோறு மூட நெய்பெய்து, முழங்கை வழிவாரக், கூடியிருந்து குளிரவேண்டும் என்று, திருப்பாவையிலே பாடினாள். இப்போது, கண்ணனுக்கு மிகப் பிரியமான வெண்ணெயையும், அக்காரவடிசிலையும் சமர்ப்பிக்கிறாள்.

அது சரி. நூறு தடா எதற்கு? உள்ளார்ந்த பக்தியோடு ஒரே ஒரு பத்ரம், பலம், புஷ்பம், தோயம்—

Koviloor Digital Library

என்று ஸமர்ப்பித்தால், போதாதோ? அதிலேயே திருப்தி யடைபவனாயிற்றே! அவனுக்கு எதற்கு இத்தனை?

காசா, பணமா— வெறுமே வாயால்தானே சொல்கிறோமென்று, இஷ்டத்துக்குச் சொல்லிவைக்க லாமேயென்று சொல்லியிருக்கிறாளா எனில், அப்படி யில்லை.

கண்ணனோ, வசுதேவரின் பிள்ளை. வசுதேவரோ அரசர். செல்வத்துக்கும், அந்தஸ்துக்கும் என்ன குறை? பின்னர் வளர்ந்ததோ, ஆயர்பாடியின் தலைவரான நந்தகோபரின் செல்வத்திருமகனாக. இப்படி, பிறந்த இடம், வளர்ந்த இடம், இரண்டுமே, மிகப்பெரிய இடம். பெரிய இடத்துப் பிள்ளைக்குத் தக்கவாறுதானே, ஸமர்ப்பிக்க வேண்டும்! கண்ணனின் அந்தஸ்துக்கும் பதவிக்கும் தக்கவாறு ஸமர்ப்பிக்க வேண்டுமென்பது, ஆண்டாளின் பாரிப்பு, அதனால்தான் நூறு தடாக்கள் நிறைய ஸமர்ப்பிக்கிறாள்.

நம் ஆசாரியரான பெரும்பூதூர் மாமுனிக்கும், இப்பாசுரத்துக்கும் நிறையத் தொடர்பு உண்டு.

நாலாயிர திவ்யபிரபந்தத்தைப் பெற்ற தாய், ஆழ்வார்கள் எனில், வளர்த்த தாய், உடையவர்தானே! ஒரு சமயம், உடையவர், இந்தப் பாசுரத்தை உபன் யாஸம் செய்து கொண்டிருந்தார். உருகி உருகித் தானே கரைந்து கொண்டிருந்தார்.

“நூறு பானைகள் நிறைய வெண்ணெயும், நூறு பானைகள் நிறைய, அக்கார வடிசிலும் ஸமர்ப்பிக்க ஆண்டாள் திருவுள்ளம் கொண்டிருந்தாளா? ஏதும் செய்ய முடியாத நிலையிலே, வாசிகமாய் ஸமர்ப்பித் தாளா? நாம் காயிகமாய் சமர்ப்பித்து விடுவோமே! அவள் திருவுள்ளம் உகக்குமே’ என்று, உடையவர், திருமாலிருஞ்சோலைக்கு எழுந்தருளினார்.

Koviloor Digital Library

ஆண்டாள் பாடியது போலவே, நூறு பானைகள் நிறைய வெண்ணெயும், நூறு பானைகள் அக்கார வடிசிலும் செய்து, ஸமர்ப்பித்தார் பக்தியோடு.

மன நிறைவோடு, ஸ்ரீவில்லிபுத்தூர் வந்து ஆண்டாள் ஸன்னதியின் முன்னே கண் மூடிக் கரங்கூப்பி நிற்கையிலேதான், அந்த அற்புத அனுபவம் நிகழ்ந்தது.

''என் மனோரதத்தைப் பூர்த்தி செய்த என் அருமை அண்ணரே! உமது அன்பே அன்பு அன்று நான் பாடியதை இன்று நீர் செய்தே விட்டீரே!'' என்றவாறே அர்ச்சா விதிகளையும் கடந்து ஆண்டாள் ஓடிவந்து, இவரைத் தழுவிக் கொண்டாள்.

''நம் கோயில் அண்ணரே! நம் கோயில் அண்ணரே!''— என்று திரும்பத் திரும்ப அழைத்து மகிழ்ந்தாள்.

இதனால்தான் ஆண்டாளின் வாழித் திருநாமத்திலே, ''பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே!''— என்று வாழ்த்துகிறோம். அதாவது, ஸ்ரீபெரும்பூதூரிலே அவதரித்த யதிராஜரான உடையவருக்குப் பின்னே பிறந்தவளான, தங்கையான ஆண்டாளே! என்று, உடையவரின் தங்கை என்று சிறப்புப் பெயரிட்டு ஆண்டாளை வாழ்த்துகிறோம்.

இதிலிருந்து, ஆண்டாள்—உடையவர்—இவர்களின் பரஸ்பர பாசமும், அன்பும் புலப்படுகிறது.

'இன்று வந்து இவை கொள்ளுங்கொலோ'—என்று பாடுகிறாள். அத்திரி முனிவரின் ஆஸ்ரமத்துக்கு ஸாயங்காலமாக எழுந்தருளினானே, ''நான்தான் ராமன், இவள் தான் என் பத்தினி சீதை—இவன்தான் என் ஸஹோதரன் லக்ஷ்மணன்—என்று சொல்லிக்கொண்டு, அதேபோல, இன்றும் என் முன்னே எழுந்தருளலாகாதா''— என்று தவிக்கிறாள்.

Koviloor Digital Library

''பூக்கள் விதவிதமாய் மலர்கின்ற திருமாலிருஞ் சோலையிலே, கொன்ற மரத்திலிருந்து கொன்றைப் பூக்கள் சரம்சரமாய் தொங்குகின்றன. அந்தக் கொன்றை மலர்களைப் போலவேதான் நானும் இருக்கிறேன். எம்பெருமான் பவழவாயில் வைத்து ஊதிய பாஞ்சஜன் யத்தின் ஒலியையும், சார்ங்கவில்லின் ஒலியையும் கேட்டு நான் உயிர்தரிப்பது எப்போதோ?''

கார்காலம் வந்துவிட்டதென்று முன்னமே கண்டோம். அதனாலே, மலை முழுதும் கொன்றை மரங்களில் கொன்றைப் பூக்கள் மலர்ந்து விட்டன. அவைகள், மாலைகள் போலத் தொங்குகின்றன. இந்தக் கொன்றை மலர்களோ, எம்பெருமானின் ஆராதனைக்கு உதவா. தேவதாந்தரங்களின் பூஜைக்குத்தான் பயன் படும். தாமஸ, ராஜஸ குணங்களைக் குறிக்கின்ற இம்மலர்கள், ஸத்வகுணமூர்த்தியின் திருவாராதனைக்குப் பயன்படா.

பின்னே, இம்மலர்கள் என்னவாகின்றன? வாடி உதிர்ந்து, வீணாகிப் போகின்றன.

இந்த மலர்கள் மலர்வதுபோல, நானும் மலர்ந்துதான் என்ன பலன்? இவைபோலவே, நானும் வாடி உதிர வேண்டியதுதானா? எம்பெருமான் வந்து அருள் புரியாத தால், என் வாழ்வும் வீணாகித்தான் போகிறது. என் ஜென்மத்துக்கு விமோசனமே எம்பெருமான்தான். அவன் வந்து என்னை ஏற்றுக்கொள்ளாவிடில், இந்தக் கொன்றை மலர்களின் கதிதான் எனக்கும் ஏற்படும்!

ஊதிய சங்கொலி—இது எப்போது, யாரால் ஊதப் பட்டு, யார் உயிரைக் காத்தது? ஸ்ரீருக்மிணியின் விவாஹ மகோஹத்ஸவத்தைச் சற்றே மனக்கண் முன்னே கொணர்ந்து அக்காட்சியைக் காணவேண்டும். சிசுபாலனோடு விவாஹம் சோடிக்கப்பட்டு, எல்லாம் கோலாகலமாய் ஏற்பாடாகிக் கொண்டிருக்கிறது.

Koviloor Digital Library

அப்போது கோவிலுக்குச் சென்ற ருக்மிணி, "இனி கண்ணன் வந்து நம்மைக் காப்பாற்றவே முடியாது. நாம் முடிந்துதான் போகவேண்டும்" என்று தீர்மானித்த சமயம், கோயிலின் நந்தவனத்திலிருந்து ஸ்ரீகிருஷ்ணன் பாஞ்சஜன்யத்தைக் கம்பீரமாய் முழக்க, அதைக்கேட்ட பின்னர்தானே ருக்மிணிக்கு உயிர் வந்தது! அதைப் போல, என் உயிரை எப்போது கண்ணன் காப்பான்?

சார்ங்கவில்லின் ஒலி— சீதையை இணங்க வைப்பதற்காக, கபடமாய் ஸ்ரீராமனின் சிரஸ்ஸைப் போலவே, ஒரு மாயா சிரஸ்ஸைத் தயாரித்து, சீதையிடம் ராவணன் காட்டினான்.

"இனி நமக்கு வாழ்வேது? ஸ்ரீராமனின் சிரஸ்ஸை ராவணன் வாங்கிவிட்டானே! இனி வாழ்வேது? நாம் பிராணனை முடித்துக் கொள்வோம்"— என்ற முடிவுக்கு வந்தபோது, ஸமுத்திரக் கரையிலிருந்து ஸ்ரீராமன் தன்னுடைய சார்ங்கவில்லின் நாணை இழுத்து ஒலி செய்ய, "ஓ! ராவணன் பொய்யான சிரஸ்ஸைக் காட்டி நம்மைக் கலக்கி விட்டான். இதோ கேட்கிறதே வில்லின் ஒலி! இதுவன்றோ என் உயிரைக் காக்கிற ஒலி!"—என்று உயிரை விடும் முடிவைக் கைவிட்டாளே! அது போல, எனக்கும் உயிரை அளிக்கலாகாதா?

சங்கின் ஒலியோ, சார்ங்கவில்லின் ஒலியோ, இரண்டிலொன்று என் உயிரைக் காக்குமெனப் புரியவேயில்லையா? புரிந்தும் என் உயிரைக் காக்க மனந்தான் இல்லையா?

இப்படிப் பலவாறாகப் புலம்பிக் கொண்டிருக்கிறாள். எம்பெருமானைத் தவிர, வேறு யாரும் எதுவுமே செய்ய முடியாது.

Koviloor Digital Library

10. நரக வேதனை-விரக வேதனை

அழுதுகொண்டே தன் சோலையில் மெதுவாக நடந்து கொண்டிருக்கிறாள். கார்காலமானபடியால் எங்கு திரும்பினாலும் மலர்கள் மலர்ந்து எம்பெருமானின் மேனி நிறத்தையும், அதரங்களையும், பல்வரிசைகளையும் ஒத்திருப்பதைக் கண்டு ஆற்றாமை அதிகமாகிறது.

கார்க்கோடல் பூக்களுக்கும், மேல்தோன்றிப் பூக்களுக்கும் தப்பிப் பிழைக்க முடியாது வருந்திக் கொண்டிருக்கையில், இதென்ன முல்லை மலர்கள் நன்றாக மலர்ந்து எம்பெருமானின் பல்வரிசையை நினைவூட்டி வதைக்கின்றனவே! அம்மா! முல்லைப் பிராட்டியே! உன்னைக் கைகூப்பி வணங்குகிறேன். உன் காலிலே விழுகிறேன். என்னை வதைக்க வேண்டாம். கம்பிரமானவளே! வட்டவட்டமாய் இலையே தெரியாதவாறு கொல்லெனப் பூத்து நிற்கும் நீ, என் மீது சற்று இரக்கம் காட்டு.

தனி வழியிலே போய்க் கொண்டிருக்கையிலே திடீரென்று நம்மெதிரே கள்ளன் வந்து நின்னால் எப்படியிருக்கும்? என்ன செய்வோம்? பலவிதமாயும் அவனைக் கெஞ்ச மாட்டோமா? அதைப் போல, கடுந் துன்பத்திலே அகப்பட்டுக் கொண்டிருக்கிற ஆண்டாள், தன்னை வாட்டி வதைக்கிற முல்லையை, முல்லைப் பிராட்டி என்கிறாள்.

பெரியபிராட்டி, சிதைபிராட்டி, ருக்மிணிபிராட்டி என்று குறிப்பிடுவது போல, அவர்களுக்கு இணையாக உன்னையும் 'பிராட்டி' என்று குறிப்பிடுகிறேன்

Koviloor Digital Library

பார்த்தாயா? 'பிராட்டி' என்ற பெயர்தான் முதலில் தோன்றியது. பிராட்டிதான். எம்பெருமானைப் பிரானாக ஆக்குகிறாள். பிராட்டி என்றால், மற்றவர்கள் துன்பப் படுகையில் வலுவிலே தானாக வந்து உதவுபவர்கள்--என்று பொருள். நீயாக வலிய வந்து உதவாவிடினும், நான் கேட்ட பின்பாவது எனக்கு உதவலாமே! உன் பெயருக்கு மாறாக என்னை வதைக்கிறாயே, அம்மா! இது சரியா?

"கொல்லை அரக்கியை மூக்கரிந்திட்ட குமரனார் சொல்லும் பொய்யானால், நானும் பிறந்தமை பொய்யன்றே"—என்று பாடுகிறாள்.

கொல்லை அரக்கி என்றது யாரை? அதர்மமாக நடந்துகொண்ட அரக்கி—சூர்ப்பநகை, பிராட்டியைப் புருஷகாரமாய் கொண்டு, எம்பெருமானை அடைய வேண்டியதிருக்க, பிராட்டியை ஒழித்துவிடவேண்டு மென்று தூக்கிச் செல்ல முயற்சித்தது விபரீதமன்றோ? அதனால்தான், கொல்லை அரக்கி எனப்படுகிறாள்.

மூக்கரிந்திட்ட—சூர்ப்பநகையின் மூக்கை அரிந்தது லக்ஷ்மணனேயன்றி, பெருமாள் அல்லவே! பின் ஏன் பெருமாளைக் குறிப்பிடவேண்டும்? பெருமாளுக்கு லக்ஷ்மணன் வலதுகை என்பதற்காகவும், இருவரும் எத்தனை ஒற்றுமை என்பதைக் காட்டவுமே, லக்ஷ்மணன் செய்ததை பெருமாள் மீது ஏற்றிச் சொல்கிறாள்.

குமரனார்—பெருமானின் அழகு வர்ணிக்கப் படுகிறது இச்சொல்லாலே.

சொல்—ஸ்ரீராமன் என்ன சொன்னார்? "மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந"—"என் மீது நிஜமாகவே பிரியம் இல்லாவிடினும், பிரியம் இருப்பது

Koviloor Digital Library

போல, நடித்துக்கொண்டு வந்தாலும், அவர்களையும் ஒருக்காலும் கைவிடேன்"—என்றார்.

பொய்யானால்—ஸ்ரீராமன் ஸத்யஸந்தன். தான் ஸத்தியஸந்தனாக இருந்தருடன் தன் தந்தையையும் ஸத்தியஸந்தனாக்க வனவாஸம் சென்றார். அப்படியிருக்க, மேற்சொன்ன அவர் வார்த்தைகள் பொய்யாகலாமோ, பொய்யாகுமோ?

நானும் பிறந்தமை பொய்யன்றே—நான் பெரியாழ்வாரின் பெண் என்பதும் மெய்யாகவா போகிறது! பொய்யன்றே என்பது பொய்யன்றோ—என்கிற பொருளில் வருகிறது.

ஸத்தியஸந்தரான பெருமாளின் சொல் பொய்யாகிப் போனாலும், என் பிறப்பு பொய்யாகலாமோ–என்பது உட்பொருள்.

இப்படியாக, முல்லையின் காலிலே விழுந்து கதறினாலும், முல்லைமலர் என்ன செய்யமுடியும்? தன் பாட்டுக்குப் பேசாமலிருந்தது.

சந்தர்ப்பம் தெரியாது அப்போது மயில்கள் தம் தோகையை விரித்தாடின. இதைக் கண்டதும் இவள் துன்பம் மிகுதியானது.

இதற்கு முன்பே இந்த மயில்கள் மழையைக் கண்டதும் மகிழ்ச்சியோடு தோகைகளை விரித்து நடனமாடின. வாங்கிக் கட்டிக்கொண்டன. இவள் பேச்சுக்கு செவி சாய்க்காது, அவற்றை ஆடவேண்டாமென கண்டித்தும், முன்னிலும் நன்றாகப் பெரிய கை தேர்ந்த நாட்டியக்காரிகள் போல ஆடத்தொடங்கின. இவளுக்கு ஒரே வெறுப்பு.

நடமாடித் தோகை விரிக்கின்ற மாமயில்காள்—ஆட்டத்தை நிறுத்துங்கள். நான் பலகீனமாய் இருக்கையில் என்னால் ஒன்றும் செய்யமுடியாது என்ப

Koviloor Digital Library

தால், நீங்களும் என்னை மேலும் மேலும் பலகீனப் படுத்துகிறீர்களா? இது நியாயமா? எப்படி வேண்டு மாயினும் இவளை ஹிம்ஸிக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்களோ? தோகையை விரித்துக்கொண்டு நடனமாடும் மாமயில்களே! கண் உடையவர்களுக்கு உங்கள் ஆட்டம் எத்தனையோ இன்பமாக இருக்கு மென்று சொல்ல வேண்டியதே இல்லை.

பாவியேன்— என்று நொந்து கொள்கிறாள். எம்பெருமானைப் பிரிந்து வாடிக் கொண்டிருப்போ ரெல்லாம் பாவிகள்தான். அந்த வரிசையில் நானே முதல் பாவி.

ஒரு கை முதல் இலேன்— சோலையோ ஆண்டா ளுடையது. அந்தச் சோலையில்தான் மயில்கள் ஆடுகின்றன. அதைக் கண்டு களிக்க என்ன கைமுதல் வேண்டும்? கார்காலத்திலே மேகத்திரளைக் கண்டு, மயில்கள் மகிழ்ந்து ஆடுவதை காணக் கண் வேண்டாமோ? அந்தக் கண்கள்தான் கைமுதல். ஆனால் ஆண்டாளோ, ''கைமுதல் இலேன்'' என்று ஏன் கூறிக் கொள்கிறாள்? கண்கள் அவனுடைய திருமேனி யழகைக் கண்டு அவனோடேயே போய்விட்டன. காதுகளோ, அவன் பக்தர்கள் அவன் புகழைப் பாடு வதைக் கேட்கப் போய்விட்டன. அவனது கஸ்தூரிதிலக வாஸனையும், வைஜயந்தீ துளஸி மாலைகளையும் முகர்ந்த மூக்கு, அவற்றை வாஸனை பிடித்துக் கொண்டே வேறெந்த பரிமளங்களும் பிடிக்காது, அவனோடேயே போய்விட்டது. வாயோ, கேட்கவே வேண்டாம். ஸதா அவன் புகழையே பாடிக்கொண்டிருக் கிறது. இப்படி ஐம்புலன்களும் எம்பெருமானுடன் போய்விட்டதால், மயில்களின் ஆட்டத்தைக் காண கை முதலான கண்கள் என்னிடம் இல்லை— என்கிறாள்.

Koviloor Digital Library

இதிலே, "கை முதல் இலேன்"— என்பவை உயிரான வார்த்தைகள்.

தசரதனும் இதேபோலப் புலம்புகிறான் ஒரு சமயம்.

"ராமனுடன் சென்ற என் கண்கள் இன்னும் மீள வில்லையே! கௌஸல்யே! உன்னைக் காணவே முடிய வில்லையே! உன் கையினால் என்னைத் தொடு. உன் இந்திரியங்களும் ராமனுடன் சென்றுவிட்டனவா? ஸ்ரீராமன் முகத்திலே விழிக்க வேண்டியதிருக்க, கைகேயி முகத்திலே விழித்ததன் பலன் இதுதான்... இனி என்று தான் என் கண்கள் மீளுமோ? என் கண்ணுக்குப் பிரயோஜனமே, ஸ்ரீராமன் முகத்தில் விழிப்பதுதானே! ஸ்ரீராமனைத்தான் கண்ணாரக் காண முடியவில்லை யெனினும், அவனைப் பெற்ற புண்ணியவதியான உன்னைக் கூடக் காண முடியவில்லையே!" என்று தசரதன் புலம்புகிறான்.

அதைப்போல, இங்கு ஆண்டாளும் புலம்புகிறாள்.

"ஆயர்களுக்குச் செல்வம் மிதமிஞ்சிப் போகை யிலே, குடக்கூத்து ஆடுவதுண்டு. அடுக்கடுக்காய் குடங்களைத் தலையிலும் தோள்களிலும் இருகை களிலும் வைத்துக் கொண்டு ஆடும் ஒரு வகையான ஆட்டம். கண்ணன் குடக்கூத்திலே வல்லவன். எல்லோரையும் குடக்கூத்தாலே வசீகரம் பண்ணக் கூடியவன். நானும் அவன் வலையிலே விழுந்தேன். ஆயர்களுக்கு சுலபமான கோவிந்தனாக இருப்பவன், எனக்கு மட்டும் எட்டாதவனாக இருப்பது ஏன்?"

அரசர்களுக்கே உரியது இந்த மிடுக்கு, ஜபர்தஸ்து, அந்தஸ்து. இந்த மிடுக்கினால் அரசர்கள் சிறிதும் இரக்கமின்றி, பலப்பல கொடுமைகள் புரிகின்றனர். யாராவது தட்டிக்தான் கேட்க முடியுமா? அவர்களுக்கு, நீதியாவது— நேர்மையாவது! கண்ணன் பல அநீதிகள் புரிகிறானே! யாராவது மூச்சுவிட முடிகிறதா?

Koviloor Digital Library

உடமைகளாகிற மாடு கொண்டான். மாடு—செல்வம். கண்ணனிடந்தான் எல்லாவற்றையுமே இழந்து நிற்கிறோமே!

மழைமேகங்களே! மண்ணைப்பூசி, மெழுகை ஊற்றி, பின்னர் அதை வெளியே எடுத்து விடுவதுபோல, என்னை அணைத்து, ஸாரமான ஆத்மாவை உருக்கி யழித்தே விட்டான். அழகிய வேங்கடமலையிலே உறைகின்ற எம்பெருமானோடு என்னை நெருக்கிக் கூட்டிவைத்து, பின்பு ஆனந்தமாய் நீங்கள் பொழியக் கூடாதா? நானும் எம்பெருமானும் கூடும்போது, நீங்கள் ஆனந்தமாய்ப் பொழிய வேண்டுமேயன்றி, எனக்குப் பாதகமாய் பொழியலாமோ?

"மழையே—மழையே"—என இருமுறை கூறுகிறாள். தாகத்தால் மிகவும் தவிப்பவன் 'தண்ணீர் தண்ணீர்' எனத் தவிப்பது போல, இவளும் எம்பெருமானின் அருளுக்குத் தாகமெடுத்துத் தவிப்பதால், இருமுறை கூறுகிறாள்.

மேலும், மேகங்கள் ஓரிடத்தில் நில்லாது போய்க் கொண்டேயிருக்கும். சற்றுத் தூரத்தே போய்விட்ட அவற்றுக்குக் கேட்க வேண்டுமென்று இருமுறை கூறுகிறாள்.

பாத்திரங்கள் செய்பவர்கள், முதலிலே பாத்திரத்தின் வடிவத்தைப் போல, மண்ணைப் பூசிக்குழைத்து வனைந்து கொள்வார்கள். பின்பு, மெழுகை அதன் மீது பூசிக் கொண்டு மறுபடியும் மண்ணைக் குழைத்துப் பூசிக் கொள்வர். கடைசியில், லேசாகச் சூடு காட்டினால், உள்ளே இருக்கிற மெழுகு கரைந்து உருகி, ஒரு சிறிய துவாரம் மூலம் வெளியே ஓடும். மெழுகு இருந்த இடம் காலியாகப் போய்விட்டதும், உலோகத்தை உருக்கி ஊற்றிக்கொண்டு குளிர்ந்ததும் மண்ணைப் பெயர்த்து எடுத்து விட்டால், பாத்திரம் தயாராகி விடும். அதைப்

Koviloor Digital Library

போலவே, எம்பெருமானும் என் உடம்பையணைத்து, உள்ளேயிருக்கும் ஸத்து அழியும்படிச் செய்து விட்டானே!

அவர் அழகர். அத்தோடு, நலிவுற்றோருக்கு வலிய வந்து உதவுபவர். ஆனால், என் விஷயத்தில் மாத்திரம் இவ்வார்த்தைகள் அர்த்தமற்றவையாகிவிட்டனவே!

அப்பெருமான், என் நெஞ்சிலே பிரகாசித்துக் கொண்டிருப்பதாக இருப்பது பாவனையேயொழிய, அவனை ஆலிங்கனம் செய்யப் புகுந்தால் அவன் அகப் படுவதேயில்லை. நான் இப்படி நலியாமல் அவனை அணைத்துக்கொள்ள வழிவகைகள் செய்தபின், மழையே நீ பெய்தால், நானும் மகிழ்வேனே! அதை விட்டுவிட்டு, நான் விரகதாபம் மேலிட்டு நலிந்து கொண்டிருக்கையில், நீ பெய்வது நியாயமா?

ஆசாரியர் பெரியநம்பிகள் இந்தப் பகுதிகளை உபன்யஸிக்கையில், கண்ணீர் சிந்திக் கதறுவாராம். ஆண்டாளின் தாபத்தையெண்ணி, நாத்தழுதழுத்து உடலே நடுங்குமாம். ஆண்டாள் பட்ட தாபத்தைத் தானே படுவாராம்.

ஆசாரியர்கள் காலத்திலெல்லாம் பிரபந்தங்கள் அவர்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந் திருந்தன. பிரபந்தம் தெரியாதவர்களே இருக்க மாட்டார்கள். பேச்சு, மூச்சு எல்லாமே திவ்விய பிரபந்த மாயிருந்தது.

Koviloor Digital Library

11. அரங்கா! அநீதி! அநீதி!!

எம்பெருமான் ஒரே வார்த்தைதான் சொல்லுவான். அது பொய்யாகாது. ஒருக்கால், பொய்யாகப் போய் விட்டால், பெரியாழ்வாரின் பெண் என்கிற சம்பந்தம், தனக்கு எம்பெருமானை பெற்றுத்தந்தே தீருமென்று எண்ணிக் கொண்டிருக்கையில், இவள் தாயும் தோழி களும், உறவினர்களும் இவளருகே வந்து அமரு கின்றனர், ஆறுதலாகச் சற்று நேரம் பேசிக் கொண் டிருக்கலாமென்று.

தாய்மார்களே! அரங்கத்திலே எழுந்தருளியிருக்கும் எம்பெருமான், எனக்கு அமுதம் போன்றவராய், குழற்கற்றைகள் அழகராயும், அழகிய அதரங்களை உடையவராயும், அழகிய கண்களை உடையவராயும், திருநாபியிலுண்டான தாமரைப் பூவாலே அழகு பெற்ற வராயுமுள்ள எனக்குப் பிரபுவான அழகிய மணவாளர், என்னுடைய கைவளையைக் கழன்று விடுகிறதாய் ஆக்கிவிட்டார்.

எம்பெருமானை எண்ணியெண்ணி நைந்து, கரைந்து, நான் அழகொழிந்து நிற்கையிலே, நீங்கள் எழில்பொழிய நிற்பது, உங்கள் பாக்கியந்தான்.

அவர், திருவரங்கத்திலே எழுந்தருளியுள்ள அழகிய மணவாளர். நூற்றியெட்டு ஸ்ரீவைஷ்ணவத்தலங்களிலே, தலையாயது. கங்கையில் புனிதமாய்க் காவிரிக்கரை யிலே உள்ளது, திருவரங்கம். பெருமாள் கொள்ளை யழகு. அவரது கேசக்கற்றைகள் சுருண்டு, கருத்து, மனோரம்மியமாக இருக்கும். திருப்பவளவாயின்

Koviloor Digital Library

அழகைச் சொல்லவும் கூடுமோ? கொப்பூழிலே தாமரை மலர்ந்திருக்கும்படியானவர்.

அவர் மீது என்ன குற்றம்? ஒன்றுமேயில்லை. நான் அணிந்திருப்பதோ, கழல்வளை. அதனை உண்மையாக்கிவிட்டார். அதாவது, கழன்று விழக்கூடிய வளையாக்கிவிட்டார். எம்பெருமானைச் சற்று நேரம் பிரிந்தால் போதும். என் உடல் மெலிவதால், கைகளும் மெலிந்து, குச்சியாகிவிடுவதால், வளைகள் கைகளில் நிற்காது, நழுவிக் கழன்று, கீழே விழுந்து விடுகின்றன. இத்தகைய பிரிவுத் துன்பத்தைத் தருகிறோமேயென்று, பெருமாள், சற்றும் எண்ணிப் பார்க்காது, என்னை வாட்டுகிறார்.

வாமனரூபனாய் வந்து, அழகிய கையாலே பிக்ஷை யேற்று, ஸகல உலகங்களையும், தன் வசப்படுத்திக் கொண்ட ஸ்வாமியாய், நன்மைமிக்க மஹான்கள் வாழுகின்ற ஸர்வ தாபஹரமான திருவரங்கத்தில், திருவனந்தாழ்வானைப் படுக்கையாய் உடைய பெருமாள், அபலையான என் கைமுதல் பொருள்களையும் கொள்ளை கொண்டாரே!

நல்ல குறள் உருவாய் என்றால், பொருத்தமாக இருக்கும். விண்ணவர்க்கும், மண்ணவர்க்கும் உதவும் பொருட்டுத்தானே வாமனனாய் வந்தார், எம்பெருமான். அப்படியிருக்க, பொல்லாக் குறள் உரு என்பது பொருந்துமோ? நல்ல குறள் உரு என்றால், எல்லோரும் திருஷ்டி போட்டு விடுவார்கள் என்று அஞ்சியே, பொல்லாக் குறள் உரு என்கிறாள். பெரியாழ்வாரின் பெண்ணாயிற்றே!

மேலும், நல்ல குறள் உரு — என்றால், மண்ணிலே இருக்கப்பட்ட சில நல்ல பொருள்களோடு ஒப்பிடவும் தோன்றும். ஒப்பற்றது என்பதால், இங்ஙனம் கூறினாள்.

Koviloor Digital Library

திருவரங்கத்திலே, மறைப்பெருந்தீ வளர்த்திருப்பர், வகுவிருந்தை அளித்திருப்பார். சிறப்புடைய மறையவர் வாழ் திருவரங்கம் என்பதும் பொருந்தும். ''அரங்கனின் குளிர்ந்த திருமுகத்தையும் முறுவலையும் விட்டுவிட்டுப் பரமபதம் போவதா? வேண்டாம் அப்பரமபதம்''— என்றெல்லாம் யோசித்தார்கள். தொண்டரடிப்பொடி யாழ்வாரும், ஆளவந்தாரின் பேரனான சொட்டை நம்பிகளும், கூரத்தாழ்வாரின் திருமகனான பட்டரும் அப்படி எல்லோரையும் கொள்ளை கொண்டு ஆட்டி வைத்தது, அரங்கம்.

பெருமாளோ, நாகணையான். அந்த நாகத்த ணைக்கு ஏறும் பாக்கியம் இல்லாத, என்னுடைய—மஹா பலியைப் போல, தம் அபேக்ஷிதம் பூர்ணமாய் கொடுக்க முடியாத என்னுடைய எம்பெருமானைத் தவிர, வேறொரு துணை இல்லாத என்னுடைய கை முதலான சரீரத்தையும் கொள்ளை கொண்டானே, எம்பெருமான்.

தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்கிறது. காவேரியின் தீர்த்தமானது, நிலங்கள் ஓடிப் புரண்டு வளப்படுத்துகிறது. பெருமாள், ஸ்ரீமான் எல்லாப் பொருள்களிலும் அந்தர்யாமியாய் இருக்கிறார். அறிவில் எத்துணை மேம்பட்டவர்களுக்கும், அடைய முடியாத வர். நான்கு வேதங்களிலுமுள்ள சொற்களுக்குப் பொரு ளாய் நிற்பவர். ஏற்கெனவே, என் கையிலிருந்த பொருள் கள் எல்லாவற்றையும் கொண்டார். இப்போது, மீத மிருந்த மாமை நிறத்தையும் கைக்கொண்டார். மெய் யான பொருளான, அழிவற்ற ஆத்மாவையும் கொண்டு விட்டார்.

அசேதனமான தீர்த்தமுங்கூட என்ன செய்கிறது? ரக்ஷ்யவர்க்கம் வாடாமல் பார்த்துக் கொள்கிறது. இருகரைகளிலும், பயிரை செழித்து வளரச் செய்கிறது. பூமியையே பொன்னாக்கி, பொன்னி என்கிற பெயரை யும் பெறுகிறது. இப்படிப்பட்ட காவிரி நல்நதி பாய்கின்ற

Koviloor Digital Library

இடத்திலே, ரக்ஷ்யகோடியிலே ஒருத்தியான என்னை எம்பெருமான் காணாதிருக்கிறானே.

நான்மறையின் சொற்பொருளாய் நின்றார்— வேதத்திலே வரும் சொற்கள் எல்லாமே எம்பெருமானின் திருநாமங்களும் திருக்கல்யாண குணங்களுமேதானே!

வேடுவச்சி, குரங்கு, தயிர்காரன்—என்று, எல்லாப் பொருளுக்கும் உள்ளே நின்று, எல்லாப் பிராணிகட்கும் சுலபனாய் இருக்கின்றார், பெருமாள்.

மறையோரும் காணாத, மறைபொருள். எவ்வளவு பெரிய ஞானியாக இருப்பினும், தன் முயற்சியாலே கிட்ட நினைப்பார்க்கும் கிட்டாதவன்.

மெய் என்று ஆத்மாவைச் சொல்லுவதாலே, ஆத்மீயங்களை ஏற்கெனவே கொள்ளை கொண்டு விட்டார். இப்போது ஆத்மாவையும் கொண்டாரே!

சுக்ரிவனுடன் பெருமாள் ஸக்யம் பண்ணிக் கொண்ட போது, இளையபெருமாள் மூலம் வால்மீகி முனிவர் கூறியது, நினைவுகூரத் தக்கது.

உலகத்தை ரக்ஷிக்கப்பட்டவரான பெருமாள், கைகொடுத்து உதவுமாறு, சுக்ரீவனை வேண்டுகிறார். தர்மநெறி பிறழாதவர். ஸர்வலோக சாண்யன். மூவுலகும் சரணடைந்தாலும் காப்பாற்றக் கூடியவர். இப்போது, சுக்ரீவனிடம் உதவி கோரி வந்துள்ளார். புத்தியில் சிறந்தவர். ஐம்புலன்களை அடக்கியவர். அவரை, நாம் தான் தேடிப்போக வேண்டும். அப்படிப்பட்ட ஒப்புயர் வற்றவர். சுக்ரிவனைத் தேடி வந்திருப்பது, சுக்ரீவனின் பாக்கிய விசேஷமே.

சுக்ரிவன் மீது, எத்துணை அன்பும் நம்பிக்கையும் வைத்து, ஸ்ரீபெருமாள், அவனைத் துணைகொண்டாரோ, அதைப்போன்றே, ஆண்டாளின் மீது அளவற்ற பிரேமை வைத்து, அவளுடைய உடல்பொருள், ஆவியைத் தனதாக்கிக் கொண்டார்.

Koviloor Digital Library

12. கண்ணனிடம் உய்த்திடுமின்

எம்பெருமானும் வரவில்லை. இவளுக்கும் பொறுக்க வில்லை. தானாகவே, நடந்தாயினும், அவன் இருப் பிடத்துக்குப் போய்விடலாம் என்று பார்த்தாலோ,உடல் மிகவும் பலவீனமான தசையில் இருக்கவே, அதுவும் முடியாது போலிருந்தது.

சுற்றியிருந்தவர்களைப் பார்த்து, ''கண்ணன் வருமளவும் என்னால் காத்திருக்க இயலாது. கண்ண னிடம் என்னைக் கொண்டு போய்ச் சேர்த்து விடுங்கள்'' என்று கெஞ்சுகிறாள். ''நீங்கள் அழைத்துப் போகா விடில், நானே சென்று விடுகிறேன்.''

''அம்மா கோதை! என்ன இருந்தாலும், நீ பெண். பொறுமை வேண்டும். எம்பெருமானிடம் பிரேமை என்றாலும், அச்சம், நாணம், அடக்கம் வேண்டாமா? ஊரிலே நாலுபேர் நாலுவிதமாய் பேசுவார்களே!''

''என் விஷயம் ஊர் முழுக்கத் தெரிந்ததுதானே! புதிதல்லவே! இனிமேல் நாணுவதற்கு என்ன இருக் கிறது? மற்றவர்கள் பேச்சைப் பற்றி ஏன் அச்சப்பட வேண்டும்!''

''நீ என்னதான் இப்படிப் பேசினாலும், நாங்கள் விட்டுவிட முடியுமா? இப்படித் தானே சென்றால், எம்பெருமானுக்கு இழுக்காகத்தான் முடியும்! நீ என்ன சொன்னாலும், நாங்கள் கேட்க முடியுமா?''

''தாமதிக்காதீர்கள். அது என் உயிருக்கே ஆபத் தாய் முடியும்! என் துன்பந்தீர, இருக்கிற ஒரே பரிஹாரம் அதுதான். நான் இப்போதிருக்கும் நிலைமைக்கும்,

Koviloor Digital Library

முந்தைய நிலைமைக்கும், முந்தைய நிலைமையில் என்னை வைத்துப் பாருங்கள். இப்போதைய நிலைமை என்ன? விரகதாபம். இது வேண்டவே வேண்டாம். தமக்கு மட்டுமின்றிப் பார்ப்பவருக்குமே துன்பமாயிருக்கும். இதற்கும் முந்தையது, ஸம்ச்லேஷாவஸ்தை – அதாவது கூடியிருக்கும் நிலை. இதுவும் வேண்டாம். எந்த கணமும், பெருமான் போய்விடுவார் என்று பயந்துகொண்டேதான் இருக்க வேண்டும். ஆகையால்,இதுவும் வேண்டாம். இதற்கும் முந்தைய நிலைமை. பகவத் விஷய வாஸனையே சற்றும் இல்லாது, ஆடிப்பாடித் திரிந்து கொண்டிருந்த காலம்.

விதவிதமாய் உடுத்திக் கொண்டு, விதவிதமாய் உண்டு கொண்டு, தோழியருடன் கூடிக்களித்து, ஆடிப் பாடிய காலம். வேடிக்கையும், விளையாட்டுமாகவே கழிந்தது. கவலையே தெரியாதிருந்தது. அப்படிப்பட்ட நிச்சிந்தையான நிலையை எனக்கு ஏற்படுத்திக் கொடுக்க, நினைத்தீர்களானால், என்னை, ஆயர்ப்பாடியிலே கொண்டு சேர்த்துவிடுங்கள்.

உலகளந்தானை ஸேவித்தால்தான், என் ஆற்றாமை தலைக்கட்டும்.

தந்தையும், தாயும், உற்றாரும் இருக்க, இந்தப் பெண், தான்தோன்றியாக, தானே தனியாகப் புறப்பட்டுப் போனாள் என்கிற பழி வந்தபின், ஒன்றும் செய்ய முடியாது. அதற்காக, என்னாலும் இனிப் பொறுத்திருக்க முடியாது. மாயனான கண்ணபிரான், சும்மாயிராது, என் முன்னே வந்து, தன் திருமேனியைக் காட்டிக்காட்டி அலைக்கழிக்கிறான்.

கண்ணன் ஏன்தான் இப்படிப் பெண்களை புண்படுத்துகிறானோ? ஏன்தான் இப்படிப் பழி விளைவிக்கும் குறும்பும் தீம்பும் செய்கிறானோ?

Koviloor Digital Library

நந்தகோபரின் திருமாளிகையின் வாசல் திண்ணையில், என்னைப் படுக்க வைத்திருங்கள்.''

''படுக்க வைப்பானேன்?''

''இப்போதிருக்கும் நிலையில், என்னால் உட்காரக் கூட முடியாதே! வைத்தியர் வீட்டு வாசலிலே, நோயாளிகள், முடியாத உடம்போடு, படுத்துக் கொண்டு, காத்திருப்பது போல, நோயாளியான நானும், மருந்தும் மருத்துவனுமான கண்ணன் திருமாளிகை வாசல் திண்ணையிலே காத்துக் கிடக்கிறேன்.

நடுநிசியிலே கொண்டுவிடுங்கள். பகலாக இருந்தால், தாய் தந்தையரிடம் பயந்துகொண்டும், வெட்கப் பட்டுக் கொண்டும், என் முகத்தைக்கூடப் பார்க்க மாட்டான். நள்ளிரவு என்றால், ஆலிங்கனம் செய்து கொள்வானே!

அழகிய திருக்கரத்திலே, திருவாழியை ஏந்திருப்பவன் கண்ணன். அந்தக் கண்ணனின் திருமுகத்தில் விழிப்பதைத் தவிர, மற்றவர்களின் முகத்தில் விழிக்க மாட்டேனென்று, நல்ல ஆடைகளினால் கண்களை மூடிக்கொண்டு, அல்ப மனிதர்களைக் கண்டால், வெட்கப்படும் இக்கொங்கைகளைப் பாருங்கள் கண்ணனுக்குத் தவிர, மற்றவர்கள் வழியில் போகா. என்னை யமுனை நதிக்கரையிலே கொண்டு விடுங்கள்.

பெண்ணுக்குப் பதற்றம் கூடாது — என்கிறவர்களைப் பார்த்துக் கூறுகிறாள்:

''என் கொங்கைகளைப் பாருங்கள். கையும் திருவாழியுமான அழகு பொலிந்து நிற்கும் கண்ணபிரானையன்றி, வேறு யாருடைய முகத்தையும் காணமாட்டோம்''—என்று கச்சினால், இவை கண்களை மறைத்துக்கொண்டு, பிற மானுடர்களைக் கண்டால்,

Koviloor Digital Library

நாணிக்கிடக்கின்றன. கோவிந்தனின் திருமாளிகைக் குள்ளே புகுந்தாலன்றி, இவை தரிக்கமாட்டா.

பசுக்களின் பின்னே போய், திம்பிலே கைவளரும் கண்ணனுக்கல்லாது, வழியே போய் வழியே வந்து, ஏகதார விரதனாயிருக்கும் சக்கரவர்த்தித் திருமகனுக்கு வழிபோகாது.

"ஸ்ரீராமன் வனவாஸம் புறப்பட்ட போது, திருப்பப் பட்ட என் குதிரைகள், என்னுடைய வழியிலே செல்லவில்லை," என்கிறார் சுமந்திரர்.

குதிரைகள், பிராணி வர்க்கம். அவை அறியுமோ, ஸ்ரீராமனின் பெருமைகளை. அறியமாட்டாத அக் குதிரைகளே, இங்ஙனம், "ஸ்ரீராமனின் வழியில்தான் செல்வோம் — அரண்மனை திரும்பமாட்டோம்"— என்றால், அதிசயமாக இருக்கிறதன்றோ?

இந்தக் குதிரைகள் போலவேதான், ஆண்டாளின் கொங்கைகளும். அவற்றுக்கே தெரிகிறது, கோவிந்த னின் அருமை பெருமைகள்! கோவிந்தனைத் தவிர, மற்றவர்களைப் பாரோம் என்று, கச்சையிட்டுக் கண் மூடிக் கிடக்கின்றன. மற்றவர்களைக் கண்டால், நாணுகின்றன, ஒடுங்குகின்றன, நடுங்குகின்றன.

"கோவிந்தனுக்கல்லால் வாயில் போகோம்" என்று, உறுதியாக நிற்கின்றன. பக்தியின் உறுதியிலே, சுமந்தரரின் குதிரைகளும், ஆண்டாளின் கொங்கை களும் ஒன்றாகவே இருக்கின்றன.

KOVILOOR ANDAVAR
A. No. 15611
LIBRARY. KOVILOOR

Koviloor Digital Library

13. வாட்டத்தைத் தணிப்பீர்

''கண்ணன் சம்பந்தப்பட்ட ஏதோவொரு தலத்தில், கண்ணன் கட்டாயமாக இருப்பான். என்னை உடனே கொண்டு விட்டுவிடுங்கள்'' என்று, கல்லும் கரைய உருகுகிறாள்.

தாயும், மற்றவர்களும், இவளுடைய விரகதாபத்துக்கு இத்தனை நாட்கள், வெகு கவனமாக உபசாரங்கள் செய்து செய்து களைத்திருந்ததால், அவர்களாலும் இயலவில்லை. சோர்ந்து போயிருந்தனர்.

''கண்ணனின் இருப்பிடத்துக்கு என்னை அழைத்துக் கொண்டு போக முடியாவிட்டாலும், அவன் பிரஸாதத்தையாவது வாங்கி வந்து கொடுத்து, என்னைக் காப்பாற்றுங்கள்.''

கண்ணன் என்கிற கரியபெருமானின் காட்சியிலே மட்டும் ஊறிக்கிடக்கின்ற என்னை, நீங்கள் எல்லோருமே, ஏற்கெனவே நொந்திருக்கிற புண்ணிலே புளி ரஸத்தைச் சொரிந்தது போலப் பலவாறாகப் பேசுகின்றீர்களே! ஒரு பெண்ணைத் துன்பப்படுத்து கிறோமேயென்பதைச் சற்றுமறியாத அப்பெருமானுடைய இடையிலே உடுத்தியிருக்கும் பீதாம்பரத்தை எடுத்துவந்து, எனக்குப் போர்த்திவிடுங்களேன்.

கண்ணழகன், கண்ணன். கண்ணன் என்றால், மாடு மேய்க்கும் ஆயன் என்பதுபோல, அணுகுவதற்குச் சுலபமானவன் என்று தோன்றுகிறதல்லவா? ஏமாற வேண்டாம். இப்படியெண்ணி ஏமாந்தவர்களின் எண்ணிக்கைக் கணக்கிலடங்காது. அவர்களைப்

Koviloor Digital Library

பார்த்து, நீங்களாயினும், சரியாகப் புரிந்து கொள்ளுங்கள்.

ஏனெனில், அவன்தான் கரியதிருமேனி படைத்த தெய்வம். பரத்துவம் தோன்ற நிற்பவன்.

கண்ணனுடைய தரிசனந்தான், எனக்குப் பழக்க மான ஒரே காட்சி. அதிலேயேதான் நான் ஊறிக் கிடக்கிறேன். முன்பு, அவன், எளியவனாக இருந்த போது அளித்த தரிசனத்தைக் கண்முன்னே நிறுத்தி வைத்து, அதையே கண்டு கொண்டு, காலந்தள்ளிக் கொண்டிருக்கிறேன்.

வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சுவது போல, நொந்த புண்ணிலே புளியை விடுவது. ஏற்கெனவே நொந்திருப்பவரை, இன்னும் நோகச் செய்வது.

எட்டி நின்று மூன்றாம் மனிதர்களைப் போலப் பேசாமல், கிட்டி வந்து, எனக்கு, உதவப் பார்க்கலாமே, நீங்களெல்லோரும்!

பெண்ணின் வருத்தமறியாதவன் கண்ணன். அவனுடைய அரையிலே உடுத்திக் கொண்டிருக்கும் பீதாம்பரத்தைக் கொணர்ந்து என் மேலே போர்த்தி விடுங்கள்.

"அரையிலே உடுத்தியிருக்கும் பட்டு எதற்கு? அவன் மேலே சார்த்திக் கொண்டிருக்கும் உத்தரீயம் ஆகாதோ" என்று, நஞ்சீயர், பட்டரைக் கேட்டாராம்.

"கண்ணனின் வேர்வை நாற்றத்திலே ஆசை கொண்டவள் ஆண்டாள். உத்தரீயத்திலே அது விசேஷமாய்க் கிடைக்காதே" என்றாராம் பட்டர்.

ஆண்டாளுக்குக் காய்ச்சல் மிகுதியாகிவிட்டது. உடம்பு நடுங்குகிறது. இவளது வாட்டத்தைத் தணிக்க, விசிறிகளைக் கொணர்ந்து விசிறி, காய்ச்சலை இறக்கப் பார்க்கிறார்கள்.

Koviloor Digital Library

"இதனால் எல்லாம் ஒன்றும் பிரயோஜனமேயில்லை. அவனது பீதாம்பரத்தினால் விசிறினால்தான் காய்ச்சல் தணியும்'' என்கிறாள், ஆண்டாள்.

"ஆயர்பாடி முழுவதையும் கொள்ளை கொண்டு அனுபவிக்கிற ஒரு கருத்த காளை போன்ற கண்ணன் ஹிம்ஸிக்க, அதனால் துன்பப்பட்டு, பலவகை வேதனைகளால் நொந்திருக்கும் என்னை, இவ்வுலகிலே தேற்றுவார், யார்? ஆராத அமுதமாகிய கண்ணபிரானின் அமிருதம் சுரக்கிற திருவாயிலே ஊறிக்கிடக்கிற ரஸத்தை யாவது கொணர்ந்து, நான், உலர்ந்து சருகாகப் போகாதபடி, எனக்குப் பருகத் தாருங்கள்.

"ஆயர்ப்பாடியிலே பிறந்திருக்கிற கண்ணனை மனத்திலே இருத்திக் கொண்டதனாலேதான், எனக்கு இத்தனை துன்பங்களும். ஸ்ரீராமனை நினைத்துக் கொண்டோர்க்குத் துன்பமே இல்லை. கண்ணனுக்கு எத்தனையோ பேர். ஆயர்பாடியிலே ஐந்து லக்ஷம் ஆய்ச்சியரிடமும் செய்யவேண்டிய மொத்தத் தீம்புகளையும், என் ஒருத்தியிடமே செய்து விடுகின்றானே!

ஸ்ரீராமனோ—குணக்கடல்.

கண்ணனோ—குறும்புக்கடல்.

கார் ஏறு என்று அடைமொழியிட்டுக் குறிப்பிடுகிறாள். ஆண்களை, காளைகளுக்குப் ஒப்பிடுவது வழக்கம். கம்பீரத்துக்கும், உறுதிக்கும் காளையை ஒத்திருந்த கண்ணனின் திருமேனி கருத்த நிறம் என்பதாலே, கார் ஏறு என்கிறாள்.

"அவன் ஆரா அமுதம். பருகப்பருக, ஆராத அமுதம். போதுமென்கிற திருப்தியைத் தராத அமுதம். இன்னும் இன்னும் பருகவேண்டுமென்கிற தாபந்தான் அதிகமாகும். ஆராத ஆசை, தீராத ஆசை. அதனாலே

Koviloor Digital Library

தான், அவன் ஆரா அமுது. தமிழிலே,இந்த ஆரா அமுது என்கிற திருநாமம், மிக மிக அழகு வாய்ந்தது. இத் திருநாமத்திற்கு, ஈடு இணையே கிடையாது.

அமுதனின் வாயில், அமுதுதானே ஊறும்! முன்னே, சங்கினையழைத்து, "கற்பூரம் நாறுமோ— கமலப் பூ நாறுமோ— திருப்பவள செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ"— என்று, பாடினாள். அதை அடியொற்றி, இப்போது, அமுதன் வாயில் ஊறும் அமுத நீரைக் கொணர்ந்து, எனக்குப் பருகக் கொடுங்கள் என்கிறாள்.

"சருகாய் உலர்ந்து போயிருக்கும் இவள், இந்த அமுதத்தைப் பருகியபின் மறுபடியும் துளிர்ப்பாள்.

"ஏற்கெனவே மரியாதைகள் நிலை குலைந்திருக்கும் இவ்வுலகத்தில், நந்தகோபருடைய மகன் என்று ஒருவன் பிறந்திருக்கிறானே, அவனால், பலப்பலத் துன்பங்கள் அடைந்துவிட்டேன். அந்தக் கொடியவனின் திருவடிகள் பட்ட இடத்திலுள்ள மண்ணை எடுத்துவந்து, விட்டுப் பிரியாத உயிரையுடைய என் உடம்பின் மீது பூசுங்கள்."

"நியாயம், நேர்மை, ஸத்யம் எல்லாமே சீர்குலைந்து போயிருக்கின்றனவே! இதைக் கேட்பார் இல்லையா?"

"நந்தகோபருக்கு மகனான கண்ணன். அவர் பாவம். மிகவும் ஸாது. நீதியுடனும், நேர்மையுடனும் அரசாட்சி செய்துகொண்டிருக்கிறார். அவர், தர்மப்படி நடப்பதினாலேதான், தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்கிறது. வள்ளல் பெரும் பசுக்கள், வாங்க வாங்கக் குடங்களை நிறைத்துக்கொண்டிருக்கின்றன. அவருக்கு எப்படித்தான் கண்ணன், மகனாக வந்து பிறந்தானோ? அம்மாடியோ! இப்படிப்பட்ட ஸாது மனிதருக்கா, இந்த முரட்டுப்பிள்ளை பிறந்திருக்கிறது என்று எல்லோரும் நொந்து கொள்ளும்படி, கண்ணன், இப்படியுமா தீம்புகள் செய்வது!

Koviloor Digital Library

நந்தகோபரின் மகனாக வந்திருக்கிற கண்ணன், மிகக்கொடியவன், கடியவன், திருமால். கொடியவன் என்றால், மற்றவர்களைத் துன்பத்துக்கு உள்ளாக்கி தான் இன்பம் எய்துவது!

எந்த அவசரத்திலும், தன் காரியமே குறியாய் இருக்கும் காரியவாதி. தன் காரியத்தை சாமர்த்தியமாய், வெற்றிகரமாய் முடித்துக் கொள்வது!

பெரிய பிராட்டியின் நாயகன், பெயர்தான் பெரிய பெயர் பெரிய பிராட்டி என்று. ஆனால், செய்வது அத்தனையும் சிறுமைகளே. இவனது குறும்புக் குணங்க லெல்லாம், அவளிடமிருந்துதான் வந்திருக்கின்றன. நம்மைப் பற்றி, எம்பெருமானிடம் நல்லபடியாக எடுத்துச் சொல்லி, பேறு பெற்றுத் தரவேண்டாமோ? அதுதான் முடியவில்லை. விருப்பமில்லை என்றால், சும்மா இருக்கலாமே! நம்மைப்பற்றி இல்லாததும் பொல்லாததும் சொல்லி, பெருமாளையும் தடுக்கிறாளே!

பட்ட காலிலேயே படுவது போல, மேலும் மேலும் வதைக்கிறானே!

அந்தப் பக்கம், இந்தப் பக்கம் அசைய முடியாத வாறு, உடம்பு சோர்ந்து விட்டது.

கண்ணன் நடந்து திரிந்த வழிகளில் இருக்கின்ற மணற்பொடிகளைக் கொணர்ந்து, என் மீது பூசுங்கள். என் உயிர் இன்னும் போகாமலிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது.

Koviloor Digital Library

14. கண்டேன், களிகொண்டேன்

இத்தனை துன்பப்படுத்தியது போதுமென்று, கண்ணன் திருவுள்ளம் பற்றுகிறான், வந்து தரிசனமளிக்கிறான். இவளும் உள்ளம் மகிழ்கிறாள். இதற்காகத்தானே இத்தனை நாள், போகும் உயிரையும் பிடித்து வைத்துக் கொண்டிருந்தாள்!

நம்மாழ்வார், "என் அவாவறச் சூழ்ந்தாயே"— என்று, பெற்ற பேற்றினை, இப்போது ஆண்டாளும் பெற்றிருக்கிறாள். அதை நேரடியாய்க் கூறாது, கண்ணனைக் கண்டீரோ என்று கேட்பது போலவும், கண்டோமே என்று பதில் கூறுவது போலவும் பாடியிருக்கிறாள்.

இப்படி, இருவிதமாய், அதாவது, இவளே கேள்வியும் கேட்டுக் கொண்டு, பதிலும் இவளே கூறுகிறாளே! இது எவ்வாறு பொருந்தும்! ஒருவர்க்கே இரு நிலைகள் உண்டாவதெப்படி?

எம்பெருமானின் கிருபையினாலும், இவளது பரம பக்தியினாலும், தடையற்ற ஞானத்தாலும், பொருந்தாதது ஒன்றுமேயில்லை.

உந்திப் பறக்கும் பாசுரங்களில், பெரியாழ்வார், ஏககாலத்தில், ஸ்ரீராமன் மீது, கண்ணன் மீது பொங்கிய பக்தி வெள்ளத்தில் சிக்குண்டு, ஒரு பாசுரம் ராமனைப் பற்றியும், அடுத்ததைக் கண்ணன் மீதுமாகப் பாடியருளியிருக்கிறார்.

பரமபதத்திலே நித்ய முக்தர்கள், ஏககாலத்தில் பல தசையை அடைவதைப்போல, எம்பெருமானின் அருளால், இது சாத்தியமே, பொருத்தமே.

Koviloor Digital Library

"கண்ணன் என்கிற கருத்தக் காளையொன்று" காவலில்லாது, இஷ்டப்படித் திரிந்து கொண்டும், பலராமனுக்கு ஒப்பற்ற தம்பியாய், ஸந்தோஷமாகப் பல தீம்புகளைச் செய்து விளையாடிக் கொண்டும், இந்தப் பக்கமாய் வருவதைக் கண்டீர்களா?

இஷ்டமான பசுக்களைத் திருப்தியாக மேய்த்து, தாகத்துக்கு நீரும் காட்டி, விளையாடுவதைப் பிருந்தா வனத்திலே கண்டோம்.

தடை செய்வாரில்லாதபடி, இஷ்டப்படி, சுயேச்சை யாக கண்ட இடங்களிலும் சுற்றித் திரிவான், கண்ணன். பரமபதநாதனுக்குத் திடீரென்று, ஒரு ஆசை உண்டா யிற்று. பரமபதம், சிறைக்கூடம்போலத் தெரிந்தது. திருவனந்தாழ்வான் மடியிலும், ஸேனை முதலியாரின் பிரம்பின் கீழும், பெரிய திருவடியின் சிறகின் கீழும் ஒடுங்கிக் கொண்டிருப்பது, தளர்ச்சியைத் தரவே, பேசா மல், கண்ணனாகத் திருவவதாரம் செய்துவிட்டான். பசுக்களை மேய்க்கின்ற சாக்கில், சுற்றித் திரிந்தான். யாருடைய தோட்டம், எவருடைய தோட்டமென்று பாராது, புகுந்துவிடுவான். மரத்தின் மீதேறி காய்கனி களைப் பறித்துத் தின்பான். அடுக்களையிலே புகுந்து, தயிர், வெண்ணெய், பாலை விழுங்குவான். யாருமே தட்டிக் கேட்க முடியாது. கேட்டுவிட்டால், இன்னும் குறும்புகள் அதிகரிக்குமேயன்றி குறையாது. கரும்புத் தோட்டத்திலே, யானை புகுந்து, த்வம்ஸம் செய்வதைப் போல, ஆசை தீர, குறைதீர, மேய்ந்தான்.

இப்படித் திரிந்து மேய்பவன், பலராமன் கீழே எப்படி இருப்பான்? அடக்கமாயும் பவ்யமாயும், இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்பதுபோல பரம சாதுவாக இருப்பான். மற்றவர்களிடம் மட்டுமே தீம்புகள். பலராமனைக் கண்டால், அண்ணனுக்கு அடங்கிய தம்பியாக இருப்பான்.

Koviloor Digital Library

சந்தோஷத்துக்குப் போக்குவீடாக, பெரிதாக, சப்தமிட்டுக் கொண்டு, குதித்து விளையாடிக் கொண்டிருப்பான்.

கண்ணன் அவதரித்த வடமதுரைக்குச் சற்று தூரத்திலே, யமுனா நதிக்கரையிலுள்ள இடம். பூதனை, சகடாசுரன் வந்து, கண்ணனைக் கொல்லப் பார்த்ததும், நந்தகோபர், தம் குடியிருப்பை பிருந்தாவனத்துக்கு மாற்றிக் கொண்டார். பிருந்தாவனம் என்றால், நெருஞ்சிக்காடு நெருஞ்சிக் காடாயிருந்த இடம், கண்ணன் திருவடிகள் பட்டதும், செழிப்புற்றுப் பசுக் களுக்கு புல் நிறைந்த மேய்ச்சல் நிலமாயிற்று.

காளமேகத்திலே, குளிர்ந்த தாமரை பூத்தாற் போல, திருக்கண்கள் என்கிற பெரிய பாசத்திலே என்னை அகப்படுத்தி, தான் போகுமிடமெல்லாம் என் நெஞ்சையும் கூடவே இழுத்துக் கொண்டு போய் விளையாடும் ஈசன்தன்னைக் கண்டீர்களோ?

போர்வையாகப் போர்த்த முத்துச் சட்டையுடைய தான, தேஜஸ்ஸை உடையதான, பெரிய யானைக்குட்டி போல, வேர்வையுற்று நின்று விளையாட, அந்த அழகை, பிருந்தாவனத்திலே கண்டோம்.

மேகமோ, அழகிய கானமேகம். மழையைப் பொழியும் கானமேகம். கருணையைப் பொழியும் கானமேகம். மேகத்திலே இரண்டு தாமரை மலர்கள் மலர்ந்துள்ளனவோ என்று வியக்கும்படியாக அமைந் திருக்கின்றன அவனது திருக்கண்கள். அந்தத் திருக்கண்கள் படுத்தும்பாடு, அப்பப்பா – சொல்லி முடியாது. அந்தக் கண்கள் என்கிற வலையிலே நான் சிக்கிக் கொண்டிருக்கிறேன். தன் அழகையும், வீரத்தையும், அந்தஸ்தையும் காட்டி, என்னைத் தன்

Koviloor Digital Library

கண்ணாகிற வலையிலே சிக்க வைத்துக் கொண்டிருக்கிறான். இனி தப்பவும் முடியுமோ?

அவன் போகுமிடமெல்லாம் என் நெஞ்சும் அவன் கூடவேதான் செல்கிறது. என் நெஞ்சு என்னிடமில்லையே! என்ன செய்வது? அவனோடு போயிற்றே!

அழகிய யானைக் குட்டிபோல இருக்கிறான். ஏற்கெனவே சொல்வச் செழிப்பிலே புரண்டு கொண்டிருக்கிறான். ஆயர்பாடி முழுதும் சுதந்திரமாய்த் திரிந்து, பாலும், வெண்ணெயும், தயிருமாக உண்டால் பின் எப்படியிருப்பான்?

யசோதைக்குப் பிள்ளை போலவா இருக்கிறான்! அவளுடைய தம்பி எனலாம்படி வளர்த்தியாக இருக்கிறான்.

வேர்த்துக் கொட்டும்படியாய் விளையாடுகிறான். பெண்களைத் துரத்தியும், ஓடிப்பிடித்தும் விளையாடுவதால், வேர்த்துக் கொட்டுகிறது. அந்த வியர்வைத் துளிகள் எப்படிக் காட்சியளிக்கின்றன?

முத்துச்சட்டையைப் போர்த்திக் கொண்டாற்போல இருக்கிறது.

இரக்கமென்பதையே அறியாதவனாய், குறும்பே உருவானவனாய், தனது திருக்கையிலுள்ள சார்ங்க வில்லைப்போலே, திருப்புருவ வட்டங்களாலே அழகு பெற்றவனாய், ஆனால், அவற்றை அடியார்கள் அனுபவிக்கும்படி பொருந்தி வாழப்பெறாதவனான எம்பெருமானைக் கண்டீர்களோ?

திருமேனியிலே கருமை பெற்றும், திருமுகத்திலே செம்மை பெற்றுமிருப்பதாலே, உதயபர்வதத்தின்

Koviloor Digital Library

மேலே விரிகின்ற சூரியன்போல விளங்கும் அப்பெருமானை, பிருந்தாவனத்திலே கண்டோம்.

தருமம் என்கிறதைச் சற்றும் அறியாதவன்—எது தர்மம்? பிறர் மீது இரக்கம் காட்டுவதுதான் தருமம். ஆனால், கண்ணனோ பிறர் மீது—இல்லையில்லை—என் மீது இரக்கமா காட்டுகிறான்?

பொருந்தி வாழாதவன். அழகே உருவான கண்ணன் குறும்புத்தனத்தினால் உகந்தாரோடு பொருந்தி வாழ மாட்டேனென்கிறானே! பின்பு, இந்த அழகினால் என்னதான் பிரயோஜனம்? தம்மை உகப்பாரைத் தானும் உகந்து அவர்களோடு பொருந்தியிருந் தாலன்றோ புகழ்வர்?

கண்ணனின் திருப்புருவங்களுக்கு எதுதான் ஒப்பாகும்? அவன் கையிலே வில்லைப்பார்த்தால், முகத்திலிருக்க வேண்டியது கையிலே இருக்கிறதே யென்று வியப்பாக இருக்கும்! உடனே, வளைந்த புருவங்களைப் பார்ப்பார்கள்? அவன் முகத்தைப் பார்த்தாலோ, கையிலிருக்க வேண்டியது முகத்துக்கு எப்படிப் போயிற்றென்று வியப்பார்கள்!

''இது மட்டுமல்ல, கண்ணன் சம்பந்தப்பட்ட எல்லாமே அழகுதான். அவன்தான் வீணடித்துக் கொண்டிருக்கிறான்.'' என்று பலவிதமாயும் கண்ணனைப் பற்றியே எண்ணிக் கொண்டிருக்கிறாள்.

இப்படிப் பலவிதமாய் எம்பெருமானை தெரிந்து எழுதியும், வாசித்தும், வணங்கியும், பூஜித்தும் பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கிறாள் கோதை.

பெண்ணின் திருமணம் பெரியாழ்வாருக்குப் பெரிய பிரச்னையாயிற்று. ''என்றைக்கும், ஏழேழ் பிறவிக்கும்,

Koviloor Digital Library

உற்றோமேயாவோம்— உனக்கே நாம் ஆட்செய்வோம். மற்றை நம் காமங்கள் மாற்று, மானிடர்க்கென்று பேச்சுப்படில், வாழ்கில்லேன், கேசவநம்பியைக் கால் பிடிப்பாள் எனும் பேறு எனக்கருள் கண்டாய்'' என்றெல்லாம் கண்ணனைத் தவிர, வேறு யாரையுமே மணக்க முடியாதென்று உறுதியாக இருந்தாள்.

''மணந்துகொள், யாரையாவது மணந்து கொள்''— என்று பெரியாழ்வாரும் இவளைப் பலவந்தப்படுத்த வில்லையே தவிர, மனத்துக்குள்ளே உருகிக் கொண் டிருந்தார்.

இவளது அழகும் கவலையைக் கொடுத்தது. கண்ணன் மீது இவளுக்குள்ள பக்தியோ, அதற்கு மேலே கவலையைக் கொடுத்தது. கண்ணனின் அவதாரக் காலம் முடிந்து விட்டதே! அர்ச்சா ஸமாதியிலே இருக்கின்ற கண்ணன்,எப்படி அந்த விதிகளைக் கடந்து வந்து இவளை மணந்து கொள்வான்? கலியுகத்திலே இது சாத்தியமா? என்று அவரை கவலைகள் அரித் தெடுத்தன.

''அம்மா கோதை, என்ன சொல்கிறாய்? யாரை யம்மா மணம் புரிந்து கொள்வாய்?''

''அப்பா! பெருமானைத் தவிர, வேறு யாரையும் மனத்தாலும் எண்ணியதே இல்லை.''

''எல்லாப் பெருமாளும் ஸ்ரீமந் நாராயணன்தான் என்றாலும், எந்தப் பெருமாளை நீ மனத்தில் எண்ணிக் கொண்டிருக்கிறாய்?''

ஆண்டாள் பதில் பேசாது,நாணத்தோடு தலையைக் குனிந்து கொண்டாள்.

Koviloor Digital Library

"அம்மா! பெருமாள் நூற்றெட்டுத் திருப்பதிகளிலே எழுந்தருளியுள்ளார். நான் ஒவ்வொரு திருப்பதியிலும் உறைகின்ற பெருமாளைப் பற்றிச் சொல்கிறேன். கேட்ட பின்பு நீ சொல்லு" என்றபடியே அவளைப் பக்கத்திலே உட்கார வைத்துக்கொண்டு ஆரம்பித்தார்.

"முதலிலே வருவது திருவரங்கம். பெருமாளின் பெயர் ஸ்ரீரங்கநாதர். அழகிய மணவாளன். கேட்டாயா? என்ன பெயர்? 'அ...ழ...கி...ய... மணவாளன்' என்று இழுத்து ராகமாய்ப் பாடினார்.

"போங்களப்பா!"— என்று கைகளால் முகத்தை மூடிக்கொண்டாள்.

"அந்த ஸ்ரீரங்கநாதன் ஆனந்த ரூபி, ஞானஸ்வரூபன், வேதசரீரன்,உபய காவேரியின் மத்தியிலே பள்ளிகொண்டிருக்கிறான். கருணாஸமுத்திரன். அசுரர்களுக்குக் காலன். லீலாவிநோதன். லக்ஷ்மியின் பதி. அகில உலகங்கட்கெல்லாம் ஆதாரமானவன். பிரம்மா முதலானோரால் வணங்கப்படுபவன். வைகுண்டாதிபதி, வரதாபயஹஸ்தன். தீனசரண்யன். பக்த வத்ஸலன்." என்று நீளமாய்ச் சொல்லி நிறுத்தினார்.

ஆண்டாளும் நிமிர்ந்து பார்த்துவிட்டு தலையைக் குனிந்து கொண்டாள். ஆழ்வார் தொடர்ந்தார்.

ஸ்ரீரங்கத்தைச் சேர்த்து நாற்பது சோழ நாட்டுத் திருப்பதிகளையும், அவற்றில் உறையும் எம்பெருமான்கள், பாண்டிய நாட்டுத் திருப்பதிகள் பதினெட்டு, மலைநாட்டுத் திருப்பதிகள் பதின்மூன்று, நடுநாட்டுத் திருப்பதிகள் இரண்டு, தொண்டை நாட்டுத் திருப்பதிகள் இருபத்திரண்டு,வடநாட்டுத் திருப்பதிகள் பன்னிரண்டும் ஆக, நூற்றெட்டுத் திருப்பதிகளிலும் உறையும் பெருமாளின் பெயர், அழகு, வீரதீர பராக்கிரமங்கள்,

Koviloor Digital Library

கல்யாண குணங்கள்— ஆகிய எல்லாவற்றையும் விரிவாய்க் கூறினார்.

"இப்போது சொல்லு! யாரைப் பண்ணிக் கொள்வாய்?"

"அப்பா! பெரிய பெருமாளான ஸ்ரீரங்கநாதரைத் தான் நான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன்" என்ற படியே உள்ளே ஓடிவிட்டாள்.

"பிடித்தாலும் பிடித்தாய், புளியங்கொம்பாய்த்தான் பிடித்திருக்கிறாய்!" என்று உரக்கச் சிரித்தார், ஆழ்வார்.

சிரித்தாரே தவிர, ஆழ்வாருக்கு தூக்கமே பிடிக்க வில்லை. புரண்டு புரண்டு படுத்தார். அரங்கன் இவரது கனவிலே வந்து, "ஆழ்வீர்! வருந்த வேண்டாம். ஆண்டாளை அவளது பெருமைக்குத் தக்கபடி நானே மணமுடித்துக்கொள்வேன்" என்றார்.

கண்ணை விழித்துப் பார்த்த ஆழ்வாருக்கு மகிழ்ச்சி யில் நெஞ்சே அடைத்தது. இந்த விஷயம் ஊர் முழுக்கப் பரவிவிட்டது. ஆழ்வாரின் கனவிலே வந்த அரங்கன், தன் சன்னதியின் கைங்கர்யபரர்களின் கனவிலே வந்து, ஆண்டாளைத் தக்க மரியாதைகளோடு அழைத்து வருமாறு பணித்தான்.

குடைகள், ஆலவட்டங்கள், நகைகள் மற்றும் மங்கலப் பொருள்களையெல்லாம் எடுத்துக் கொண்டு அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் நோக்கி வந்தனர். இந்தச் செய்தி அவர்கள் வந்து சேருவதற்குள் பாண்டியநாடு முழுவதும் பரவிற்று.

பெரியாழ்வாரின் சிஷ்யனான அரசன் வல்லபதேவன் விரைந்து வந்து எல்லா ஏற்பாடுகளையும் தானே

Koviloor Digital Library

முன்னின்று செய்தான். தன்னுடைய நன்றியையும், வணக்கத்தையும்,தன் ஆசாரியருக்குத் தெரிவிக்க, இதை விட வேறு பொருத்தமான சந்தர்ப்பம் கிடைக்காதே!

தன் அந்தஸ்துக்கேற்ப எல்லாம் செய்து, ஸ்ரீரங்கத்துப் பெரியவர்களை பூர்ணகும்பங்களோடு எதிர் கொண்டழைத்து வந்தான்.

ஸ்ரீவில்லிப்புத்தூரே திரண்டு வந்து இக்காட்சியைக் கண்டு களிப்புற்றது. உற்றார், உறவினர், தோழிமார்கள் எல்லோரும் கூடிவிட்டனர். சந்தோஷத்துக்குக் கேட்கவா வேண்டும்!

ஊர் முழுவதும் மாவிலை கட்டினார்கள். பாளை, கமுகு பரிசுடைப் பந்தல்கள் அமைத்தனர். பூரணப் பொற்குடம் வைத்துத் தோரணம் நாட்டினார்கள். நாற் திசைகளிலிருந்தும் புனித தீர்த்தங்கள் கொணர்ந்து ஆண்டாளை நீராட்டினார்கள். கதிரொளி தீபம் ஏற்றினர். மத்தளங்கள் முழங்கின. வரிசங்கங்கள் நின்றூதினர். கண்ணைப் பறிக்கும், வெள்ளை நுண் மணல், செம்மண், வண்ணப் பொடிகள் கொண்டு தெருவணிந்தனர்.

நவரத்தினங்களால் இழைக்கப் பெற்ற முடுபல்லக் கிலே ஆண்டாள் ஏறியதும், ஸ்ரீவில்லிபுத்தூரே திரண்டு ஸ்ரீரங்கம் நோக்கிச் சென்றனர். வழியிலே, அங்கங்கே பாகவதர்களும் அடியார்களும் சேர்ந்து கொண்டனர்.

'ஆண்டாள் வந்தாள்,' 'சூடிக்கொடுத்த சுடர்க் கொடி வந்தாள்,' 'சுரும்பார் குழற்கோதை வந்தாள்,' 'தொடை சூடிக் கொடுத்தாள் வந்தாள்,' 'கேசவ நம்பி யைக் கால் பிடிப்பாள் வந்தாள்,' 'திருப்பாவைச் செல்வி வந்தாள்'— என்று பலவாறாகச் சின்னங்கள் பரிமாறிக் கொண்டு, ஆண்டாளை எதிர்கொண்டனர்.

Koviloor Digital Library

ஆண்டாள் அரங்கனின் சன்னதிக்குள் சென்றாள். பெருமாள் கைலாகு கொடுக்க, நாகத்தணையை மிதித்தேறி, பெருமாளின் காலடியிலே அமர்ந்தாள்.

கூடியிருந்தோர், ஆண்டாள் வாழி, அரங்கன் வாழி, அனவரதம் வாழி'' என்று விஜயகோஷம் செய்தனர். ஆடிப்பாடிக் களித்தனர், குதித்தனர், ஒருவரையொருவர் தழுவிக் கொண்டனர், விழுந்தனர், எழுந்தனர், என்ன செய்கிறோம் என்று தெரியாது என்னென்னவோ செய்தனர்.

பெண்ணைப் பெற்ற எல்லா தகப்பன்மாரையும் போல, பெரியாழ்வார், விக்கி விக்கி அழுதார்.

''இல்லம் வெறியோடிற்றாலோ என்மகளை எங்கும் காணேன்
மல்லரையட்டவன் பின்போய் மதுரைப்புறம் புக்காள் கொலோ?''

''ஒருமகள் தன்னையுடையேன் உலகம் நிறைந்த புகழால்
திருமகள் போல வளர்த்தேன் செங்கண்மால்தான் கொண்டு
போனான்''

''இடையிரு பாலும் வணங்க இளைத்திளைத்து என்மகள் ஏங்கி
கடைகயிறே பற்றி வாங்கிக் கைத்தழும்பேறிடுங் கொலோ?''

''வெண்ணிறத்தோய் தயிர்தன்னை வெள்வரைப்பின் முன் எழுந்து
கண்ணுறங்காதேயிருந்து கடையவும்தான் வல்லவள் கொலோ''

என்று, பலவாறாகப் பெரியாழ்வார் அழுது அரற்றுவதைக் கண்ட அரங்கன், மனம் நெகிழ்ந்தே போனான்.

''ஆழ்வீர்!''— கூப்பிட்டது அரங்கனேதான். ''வருந்தவே வேண்டாம். சீதையை ஸ்ரீராமனுக்குத் தந்த ஜனகர் போன்றும், திருப்பாற்கடல் போன்றும், எனக்கு மாமனாராகி விட்டீர், வருந்தற்க!''

Koviloor Digital Library

"எம்பெருமானே, எம்பெருமானே"— என்றாரே தவிர, குரல் தழுதழுத்தது. பேசவே முடியவில்லை.

அரங்கனின் ஆணைப்படி, பெரியாழ்வாருக்கு எதிர் மரியாதைகளை விமரிசையாகச் செய்தார்கள். திருமாலை திருப்பரிவட்டம் சார்த்தி, ஸ்ரீசடாரியும் சாதித்து, துளஸி தீர்த்தப் பிரசாதமும் சாதித்தார்கள்.

"ஆழ்வீர்! கலங்கற்க! ஸ்ரீவில்லிபுத்தூர் சென்று பழையபடியே கைங்கர்யம் செய்து கொண்டிரும். நீவிர் ஸங்கல்பித்த மாத்திரத்திலேயே, நாம் கருடன் மீது கடுகி வந்து, சேவை சாதிப்போம்"— அரங்கனே ஆழ்வாரின் கண்களை அன்போடு, தன்னுடைய உத்தரீயத்தால், துடைத்துவிட்டான்.

பெண்ணிடமும், மாப்பிள்ளையிடமும், ஊராரிடமும் விடைபெற்றுக்கொண்டு, ஆழ்வார் ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் திரும்பிவந்து, வடபத்ரசாயி கோயிலுக்குப் பழையபடி கைங்கர்யங்கள் செய்து கொண்டிருக்கலானார்.

நாடு முழுதும் இதே பேச்சுத்தான்.

"ஒரு மானுடப் பெண், எம்பெருமானை அர்ச்சையிலே மணந்த அதிசயம் என்ன?"

"ஒரு சிறு பெண்ணுக்கு இத்தனை ஞான பக்தி வைராக்கியமா?"

"எத்தனை உறுதியிருந்தால் அர்ச்சையிலே எம்பெருமான் மணந்து கொள்வார்?" என்று சந்தோஷமாய்ப் பேசிக் கொண்டனர்.

பெருமாள் கல்யாணம் பண்ணிக்கொண்டதென்னவோ ஆண்டாளையே. ஆனால், என்னவோ

Koviloor Digital Library

தம் பெண்ணையே பெருமாள் கல்யாணம் பண்ணிக் கொண்டாற்போல, ஒவ்வொருவரும் மகிழ்ந்தனர்.

ஒரு லட்சியத்தை சங்கல்பித்துக்கொண்டு அதை அடைய இடைவிடாது பாடுபட்டால், அதை ஒருநாள் அடைந்தே தீரலாம் என்பது ஆண்டாளின் விஷயத்தின் மூலம் நன்றாகவே நிரூபிக்கப்பட்டுவிட்டது.

உறுதியாக இருந்தால்—லட்சியம் நிறைவேறும்.

ஆண்டாள் வென்றுவிட்டாள்—தமிழை வென்றாள்—திருவரங்கனையே வென்றாள்.

இதன் மூலம் பெண்களுக்கு ஒரு புதிய சக்தியும், உற்சாகமும் வருகிறது. புதிய வேகம் பிறக்கிறது என்றால் மிகையில்லை.

ஸ்ரீமத்யை விஷ்ணு சித்தார்ய மநோநந்த ஹேதவே ।
நந்த நந்தந ஸீந்தர்யை கோதாயை நித்ய மங்களம் ॥

விஷ்ணுசித்தரின் மன மகிழ்வுக்குக் காரணமானவளும், விஷ்ணுசித்தரின் திருமகள் என்கிறதான பெருஞ் செல்வத்தைப் பெற்றவளும், நந்தகுமாரனுக்குப் பொருந்திய அழகுடையவளான கோதை என்னும் ஆண்டாளுக்கு மங்களம், என்றென்றும் மங்களம் சுப மங்களம்.

அரங்கன் திருவடிகளே சரணம் ॥
ஆண்டாள் திருவடிகளே சரணம் ॥

Koviloor Digital Library

பூஜை-பாராயணம்

முப்பது திருப்பாவைகளில் உள்ளவையும், தோன்று கிறவையுமான பகவந் நாமாக்களை அடியில் கண்டபடி, கணிரென்று தவறில்லாத உச்சரிப்புடன் கூறி, அர்ச்சனை செய்தால், ஸ்ரீ ஆண்டாளும், அரங்கனும் ப்ரீதர்களாகி, ஸமஸ்தவித அபேக்ஷிதங்களையும் கொடுத்து, ரக்ஷிப்பார்கள்.

ஸ்ரீ அழகிய சிங்கர், திருப்பாவையிலிருந்து நூற்றெட்டு நாமாக்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றை அழகிய ஸம்ஸ்க்ருதத்தில் அஷ்டோத்தர சத நாமாவளியாக்கி அருளியுள்ளார். அதையும் எழுதியிருக்கிறேன். முதலில் நன்றாகப் படியுங்கள். அர்த்தத்தைப் புரிந்து கொண்டு, அர்ச்சனை செய்து, கோரிய பலன்களை யடைந்து இன்புறலாம்.

பாராயண முறை : விடியற்காலையில் தலை ஸ்நானம் செய்து, மடிவஸ்திரம் அணிந்துகொள்ள வேண்டும். தரையை சுத்தமாய்ப் பெருக்கி, மெழுகிக் கோலமிட்டு, மணையின் மீதும் கோலமிட்டு, ஆண்டாள் ரங்கமன்னார் படத்தை வைத்து, புஷ்பங்களால் அலங்கரிக்கவும். பஞ்சுத்திரி போட்டு, நல்லெண்ணெய் அல்லது பசு நெய் விளக்கேற்ற வேண்டும். நல்ல சுத்தமான, அன்றலர்ந்த புஷ்பங்களைக் கொண்டு, அர்ச்சனை செய்யவும். ஸங்கல்பங்கள் வழக்கம் போல் செய்ய வேண்டும். கரந்யாஸம், அங்கந்யாஸம் செய்து தியானம் செய்து, பின் அர்ச்சனை முடித்து, தூப, தீப, தாம்பூலம், தீர்த்தம், பழங்கள் ஸமர்ப்பிக்க வேண்டும்.

Koviloor Digital Library

வெண்பொங்கல், அக்காரவடிசில், வடை, சுண்டல், தயிர் சாதம், வெண்ணெய், பால் சமர்ப்பிக்க வேண்டும். பிருஹஸ்பதிகளைக் கொண்டு செய்யும் போது, அவருக்குத் தாம்பூல தட்சணைகள் வழங்கவும். சங்கல்பம் சொல்கையில், கோரும் பலனைச் சொல்லிக் கொள்ளவேண்டும்.

பலன்கள் : புத்தி விருத்தியாகும். பாபங்கள் தொலையும். யமுனை, கங்கை போன்ற புண்ணிய நதிகளில் நீராடிய பலன்கள் கிடைக்கும். உறுதியான மனம் பெறலாம். துக்கங்கள் விலகும். கெட்ட கனவுகள் வராது. குழந்தைகளுக்கு நலன் உண்டாகும். ரோகங்கள் குணமாகிவிடும். பகைவர் அழிவர். மங்களம் உண்டாகும். பயம் நீங்கும். அஞ்ஞானம் விலகி, ஞானம் உண்டாகும். வாக்குவன்மை, சங்கீதத்தில் தேர்ச்சி, அழகு, புகழ் கிடைக்கும். நல்ல கணவன் கிடைப்பர். சத்புத்திரர்கள் பிறப்பர். மொத்தத்தில் நாம் கேட்கும் வரங்கள் கிடைக்கும்.

கூட்டாகச் சேர்ந்து, விளக்குப் பூஜை செய்வது போல, கூட்டாகத் திருப்பாவை பூஜை செய்தால், மிகவும் நல்லது. இதற்குப் பெண்மணிகளின் ஆதரவும், ஒத்துழைப்புந்தான் தேவை.

குழந்தையிலேயே நல்ல எண்ணங்களை மனத்தில் விதைத்து, பக்தி, கலாசாரம் இவற்றைக் காப்பதும், பரப்புவதும், பெண்களின் கடமை.

Koviloor Digital Library

திருப்பாவை நாமாவளிகள்

1. ஸ்ரீமதே நந்தகோப குமாராய நம:
2. ,, யசோதா பாலஸிம்ஹாய ,,
3. ,, நீலமேகச்யாமளாய ,,
4. ,, பத்மராக நயநாய ,,
5. ,, ஸூர்ய சந்த்ர நிபாநநாய ,,
6. ,, நாராயணாய ,,
7. ,, பக்தா பீஷ்ட பலப்ரதாய ,,
8. ,, க்ஷீரஸாகர ஸாயிநே ,,
9. ,, பரமாத்மநே ,,
10. ,, புவநத்ரய விக்ராந்த சரணாய ,,
11. ,, ஸலக்ஷ்மீக வாம நோத்தம ப்ரஹ்ம சாரிணே ,,
12. ,, ஸர்வஜகத் காரணாய ,,
13. ,, திவ்யாவதார சேஷ்டி தாய ,,
14. ,, மதுராபுரி ஜன்ம தேசாய ,,
15. ,, யமுனாநதீ பாரகாய ,,
16. ,, கோபகுல ரத்ந தீபாய ,,
17. ,, ஸ்ரீ தாமோதராய ,,
18. ,, கருடத்வஜாய ,,
19. ,, பூதனாஸ்தன விஷபாயிநே ,,
20. ,, சகடாசுர பஞ்ஜநாய ,,
21. ,, ப்ரளயார்ணவஸாயிநே ,,
22. ,, க்ஷீராப்தி சேஷசாயி யோக நித்ராய ,,
23. ,, பக்தஹ்ருதய ஸீப்த ஸ்ரீஹரயே ,,
24. ,, கேசி ஸம்ஹாரிணே நாராயணாய ,,
25. ,, மல்லானாம் மாரகாய ,,
26. ,, தேவாதி தேவாய ,,
27. ,, அதிமானுஷ சேஷ்டிதாய ,,

Koviloor Digital Library

28. ஶ்ரீமதே லக்ஷ்மீ பதயே நம:
29. ,, வைகுண்ட நிலயாய ,,
30. ,, துளஸி மகுட நாராயணாய ,,
31. ,, நீலமேக ஸ்யாமளாய ,,
32. ,, ராவணத்வம்ஸ, பக்த மனோரஞ்சகாய ,,
33. ,, பஹாஸுர ஸம்ஹர்த்ரே ,,
34. ,, ராவணத்வம் ஸகாய ,,
35. ,, சங்கசக்ர ஹஸ்தாய ,,
36. ,, பங்கஜே க்ஷணாய ,,
37. ,, குவலயாபீட கஜேந்த்ர ஹந்த்ரே ,,
38. ,, கம்ஸ சிரச் சேத்ரே ,,
39. ,, விசித்ர சக்தி யுக்தாய ,,
40. ,, ப்ரஹ்ம, ருத்ர, இந்திராதி நாயகாய ,,
41. ,, சரணாகத ரக்ஷண தீக்ஷித த்வஜாய ,,
42. ,, விஸ்மய லீலாய ,,
43. ,, இந்திர நீல ஸ்யாமளாய ,,
44. ,, ஸகல லோக மாத்ரே ,,
45. ,, ஸகல தேவ தோத்க்குஷ்டாய ,,
46. ,, பலபத்ராநு ஜாய ,,
47. ,, கோபகந்ய நாதாய ,,
48. ,, கோபிகா குசஸங்க விசால லக்ஷஸே ,,
49. ,, ஸர்வ தேவ பய நிவர்த்தகாய ,,
50. ,, ஸகல கல்யாண குணகணாய ,,
51. ,, பக்த விரோதி ப்ரத்வம் ஸகாய ,,
52. ,, கோஸம்பந்த நந்தகோப தநயாய ,,
53. ,, ஸங்கல்ப விஸ்த்ருத ஜகதாகாராய ,,
54. ,, தர்சித தசாவதார மூர்த்தயே ,,
55. ,, ராஜாதி ராஜ ஸேவித பாத பத்மாய ,,
56. ,, ஸூர்ய சந்த்ர சக்ஷுஷே ,,
57. ,, ஸிம்ஹ கம்பீர கதயே ,,
58. ,, வீரஸிம்ஹாஸனாலங் க்ருதயே ,,
59. ,, கங்கா ஜந்ம பாத பங்கஜாய ,,

Kevilbor Digital Library

60. ஸ்ரீமதே லங்கா நாசக விக்ரமாய நம:
61. ,, சகடாசுர பஞ்ஜந வஜ்ர பாதாய ,,
62. ,, வத்ஸாசுர நாசக பாதாய ,,
63. ,, கோவர்த்தன சத்ர தராய ,,
64. ,, சத்ரு மதன கோதண்டாதி தராய ,,
65. ,, ஸகல பூஷனாஸ்த்ரயுத தேவகி ஸூதாய ,,
66. ,, யசோதா லிலாகர்ப் பாய ,,
67. ,, கம்ஸோதர ஜாடரேதர வஹ்நயே ,,
68. ,, பக்த பரதந்த்ரீக்ருத ஸ்ஹதந்த்ர்யாய ,,
69. ,, நவரத்னாபரண சோபி காத்ராய ,,
70. ,, வடபத்ர சாயிநே ,,
71. ,, ப்ரணத பக்த மோஹகாய ,,
72. ,, விரோதி ஜன வசிகரண லிலாய ,,
73. ,, ஸர்வோபநிஷத் ஸார பூதாய ,,
74. ,, கோரக்ஷண தீக்ஷிதாய
75. ,, கோ கோபால வேஷதாரிணே ,,
76. ,, கோபிகா பிரார்த்தித க்ஷிரான்ன போக்த்ரே ,,
77. ,, கோகுல ஜன புண்யாபலாவதாராய ,,
78. ,, ஸகல குண ஸம்பூர்ணாவதாராய ,,
79. ,, ஸ்வேச்சாவதாராய ,,
80. ,, பூ ப்ரார்த்திதாவதாராய ,,
81. ,, த்ரித்ர்யஷ்ட நயநார்த்தித ஸஹஸ்ர நயநாய ,,
82. ,, ஸகலவித பந்தவே ,,
83. ,, ப்ரீத்யாஹூத நாமதராய ,,
84. ,, அப்ரமேய மஹாத்ம்யாய ,,
85. ,, அப்ரமேய விபவாய ,,
86. ,, அப்ரமேய நந்தாய ,,
87. ,, அப்ரமேய நந்தகராய ,,
88. ,, அப்ரமேய விபூதயே ,,

Koviloor Digital Library

89. ஸ்ரீமதே பக்தாபிஷ்ட புருஷார்த்த ப்ரதாய நம:
90 ” அதிமனோஹர, ஸ்வர்ண, பத்ம சரணாய ”
91. ” அக்ஞாந ஜன குலேவதீர்ணாய ”
92. ” நித்யஸூரி பரிஷத் ஸேவ்யாய ”
93. ” பஞ்சராத்ர, சாஸ்த்ர, ப்ரகாசித வைபவாய ”
94. ” ஹேய குண ரஹிதாய ”
95. ” ஸகலவித போகப்ரதே ”
96. ” ஆச்ரித துக்க நிவர்த்தகாய ”
97. ” க்ஷீரஸாகர மதந தக்ஷாய ”
98. ” ஸாக்ஷாத் ப்ரஹ்ம, ருத்ர பித்ரே ”
99. ” க்ஷீராப்தி கன்யாலங்க்ருத வக்ஷஸே ”
100. ” புருஷார்த்த தானதக்ஷ புஜ சக்தயே ”
101. ” ஸர்வ ரக்ஷண புஜ சக்தயே ”
102. ” பக்தானுராக வீக்ஷண நயனாய ”
103. ” மந்தஹாஸ கோபிதாய ”
104. ” உபய விபூதி நாயகாய ”
105. ” நிஸ்ஸமாப்யதிகாய ”
106. ” ஆச்ரிதாநந்த ஸமான போகாய ”
107. ” ஆச்ரிதாபுநராவ்ருத்தி மோக்ஷதாய ”
108. ” கோதா காதாம் படதாம் ஆநந்ததாய ”

Koviloor Digital Library

இப்புத்தகத்திலே எடுத்தாளப்பட்டிருக்கின்ற நாச்சியார் திருமொழிப்பாசுரங்கள்

1. காமதேவா! கண்ணனுடன் கூட்டி வை

1. தையொரு திங்களும் தரைவிளக்கித்
தண்மண்ட லமிட்டு மாசி முன்னாள்
ஐய நுண்மணற் கொண்டு தெருவணிந்து
அழகினுக்கு அலங்கரித்த அனங்க தேவா!
உய்யவுமாங் கொலோவென்று சொல்லி
உன்னையும் உம்பியையும் தொழுதேன்
வெய்ய தோர் தழல் உமிழ் சக்கரக்கை
வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே.

2. வெள்ளை நுண்மணற்கொண்டு தெருவணிந்து
வெள்வரைப்பதன் முன்னம் துறை படிந்து
முள்ளுமில்லாச் சுள்ளி எரிமடுத்து
முயன்று உன்னை நோற்கின்றேன் காமதேவா!
கள்ளவிழ் பூங்கணை தொடுத்துக் கொண்டு
கடல்வண்ணன் என்பதோர் பேரெழுதி
புள்ளினை வாய்பிளந்தான் என்பதோர் இலக்கினில்
புக என்னை எய்கிற்றியே.

2. ஸ்ரீதரா! சிற்றிலைச் சிதையேல்

3. நாமம் ஆயிரம் ஏத்த நின்ற நாராயணா நரனே!—உன்னை
மாமி தன் மகனாகப் பெற்றால் எமக்கு வாதை தவிருமே
காமன் போதரும் காலமென்று பங்குனி நாள் கடைபாரித்தோம்
தீமை செய்யும் ஸ்ரீதரா!—எங்கள் சிற்றில் வந்து சிதையேலே!

Koviloor Digital Library

4. இன்று முற்றும் முதுகு நோவ இருந்து இழைத்த இச்சிற்றிலை
நன்றும் கண் உற நோக்கி நாம் கொள்ளும்
ஆர்வம் தன்னை தணிகிடாய்
அன்று பாலகனாகி ஆலிலை மேல் துயின்ற எம் ஆதியாய்
என்றும் உந்தனுக்கு எங்கள் மேல்
இரக்கம் எழாதது எம் பாவமே.

3. கண்ணா! கூறையைக் கொடுத்திடு!

5. கோழி அழைப்பதன் முன்னம்
குடைந்து நீராடுவான் போந்தோம்
ஆழியன் செல்வன் எழுந்தான்
அரவணை மேல் பள்ளி கொண்டாய்
ஏழைமையாற்றவும் பட்டோம்
இனி என்றும் பொய்கைக்கு வாரோம்
தோழியும் நானும் தொழுதோம்
துகிலைப் பணித் தருள்வாயே.

4. எத்தைத் தின்றால், பித்தம் தெளியும்?

6. தெள்ளியார் பலர் கைதொழும் தேவனார்,
வள்ளல் மாலிருஞ்சோலை மணாளனார்
பள்ளி கொள்ளுமிடத்து அடிகொட்டிடக்
கொள்ளுமாகில் நீ கூடிடு கூடலே!

7. காட்டில் வேங்கடம் கண்ணபுரநகர்
வாட்டமின்றி மகிழ்ந்துறை வாமனன்
ஒட்டாரவந்து என் கை பற்றி தன்னொடும்
கூட்டுமாகில் நீ கூடிடு கூடலே!

8. ஆவல் அன்பு உடையார் தம் மனத்து அன்றி
மேவலன் விரைசூழ் துவராபதிக்
காவலன் கன்று மேய்த்து விளையாடும்
கோவலன் வரில் கூடிடு கூடலே!

Koviloor Digital Library

9. பூமகன் புகழ் வானவர் போற்றுதற்கு
ஆம் மகள் அணிவாள் நுதல் தேவகி
மாமகன் மிகுசீர் வசுதேவர் தம்
கோமகன் வரில் கூடிடு கூடலே!

10. ஆய்ச்சிமார்களும் ஆயரும் அஞ்சிட
பூத்த நீள் கடம்பு ஏறிப் புகப் பாய்ந்து
வாய்த்த காளியன் மேல் நடமாடிய
கூத்தனார் வரில் கூடிடு கூடலே!

11. அற்றவன் மருதம் முறிய நடை
கற்றவன் கஞ்சனை வஞ்சனையில்
செற்றவன் திகழும் மதுரைப்பதி
கொற்றவன் வரில் கூடிடு கூடலே!

12. அன்று இன்னாதன செய் சிசுபாலனும்
நின்ற நீள் மருதும் எருதும் புள்ளும்
வென்றி வேல்விறல் கஞ்சனும் வீழ முன்
கொன்றவன் வரில் கூடிடு கூடலே!

13. கொண்ட கோலக் குறள் உருவாய்ச் சென்று
பண்டு மாவலிதன் பெரு வேள்வியில்
அண்டமும் நிலனும் அடி ஒன்றினால்
கொண்டவன் வரில் கூடிடு கூடலே!

14. பழகு நான்மறையின் பொருளாய் மதம்
ஒழுகு வாரணம் உய்ய அளித்த எம்
அழகனார் அணி ஆய்ச்சியர் சிந்தையுள்
குழகனார் வரில் கூடிடு கூடலே!

15. ஊடல் கூடல் உணர்தலை புணர்தலை
நீடுநின்ற நிறை புகழ் ஆய்ச்சியர்!
கூடலைக் குழற் கோதை முன் கூறிய
பாடல் பத்தும் வல்லார்க்கு இல்லை பாவமே!

Koviloor Digital Library

5. குயிலே! கோவிந்தன் வரக் கூவு

16. மென்னடை அன்னம் பரந்து விளையாடும்
வில்லிபுத்தூர் உறைவான் தன்
பொன்னடி காண்பதோர் ஆசையினால் என்
பொரு கயற்கண்ணிணை துஞ்சா
இன்னடிசிலோடு பாலமுது ஊட்டி
எடுத்த என் கோலக்கிளியை
உன்னோடு தோழமை கொள்ளுவன் குயிலே
உலகளந்தான் வரக் கூவுவாய்!

17. சாரங்கம் வளைய வலிக்கும் தடக்கை
சதுரன் பொருத்தம் உடையன்
நாங்கள் எம்மில் இருந்து ஒட்டிய கச்சங்கம்
நானும் அவனும் அறிதும்
தேம்கனி மா பொழில் செந்தளிர்
கோதும் சிறு குயிலே!—திருமாலை
ஆங்கு விரைந்து ஒல்லைக் கூகிற்றி
ஆகில் அவனை நான் செவ்வன காணே!

6. பெருமை பெற்ற கனவு.

18. வாரணம் ஆயிரம் சூழ வலஞ்செய்து,
நாரணன் நம்பி நடக்கின்றான் என்றெதிர்
பூரணம் பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன், தோழீ! நான்.

19. நால்திசைத் தீர்த்தம் கொணர்ந்து
நனிநல்கி பார்ப்பனச் சிட்டர்கள் பல்லார் எடுத்தேத்தி
பூப்புனைக் கண்ணிப் புனிதனோடு எந்தன்னைக்
காப்பு நாண் கட்டக், கனாக் கண்டேன், தோழீ! நான்,

20. இந்திரன் உள்ளிட்ட தேவர் குழாமெல்லாம்
வந்திருந்து என்னை மகள் பேசி மந்திரித்து
மந்திரக் கோடி உடுத்தி மணமாலை
அந்தரி சூட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான்.

Koviloor Digital Library

21. கதிரொளிதீபம் கலசமுடன் ஏந்தி
சதிரின மங்கையர் தாம்வந்து எதிர் கொள்ள
மதுரையார் மன்னன் அடிநிலை தொட்டெங்கும்
அதிரப் புகுதக் கனாக் கண்டேன், தோழீ! நான்.

22. மத்தளம்கொட்ட, வரிசங்கம் நின்றூத,
முத்துடைத் தாமம் நிறை தாழ்ந்த பந்தற் கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன், தோழீ! நான்.

23. வாய்நல்ல மறையோதி மந்திரத்தால்
பாசிலை நாணல் படுத்துப் பரிதி வைத்து
காய்ச்சின மாகளிறன்னான் என் கை பற்றி
தீவலம் செய்யக் கனாக் கண்டேன், தோழீ! நான்.

24. இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மையுடையவன் நாராயணன் நம்பி
செம்மையுடைய திருக்கையால் தான்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக் கண்டேன், தோழீ! நான்.

25. வரிசிலை வாண்முகத்து என் ஐமார் தாம் வந்திட்டு
எரிமுகம் பாரித்து என்னை முன்னே நிறுத்தி
அரிமுகன் அச்சுதன் கைம்மேல் என் கை வைத்து
பொரி முகம் தட்டக் கனாக் கண்டேன், தோழீ! நான்.

26. குங்குமம் அப்பிக் குளிர் சாந்தமட்டித்து
மங்கள வீதி வலஞ்செய்து மணநீர்
அங்கு அவனோடும் உடன் சென்று அங்கு ஆனை மேல்
மஞ்சனமாட்டக் கனாக் கண்டேன், தோழீ! நான்.

27. ஆயனுக்காகத் தான் கண்ட கனாவினை
வேயர் புகழ் வில்லிபுத்தூர்க் கோன் கோதை சொல்
தூய தமிழ்மாலை ஈரைந்தும் வல்லவர்
வாயும் தன் மக்களைப் பெற்று மகிழ்வாரே!

Koviloor Digital Library

7. பெண்களுக்குப் பகையான பாஞ்சஜன்யம்

28. கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ?
மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே!

29. உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம்
கண்படை கொள்ளில் கடல்வண்ணன் கைத்தலத்தே
பெண்படையார் உன்மேல் பெரும்பூசல் சாற்றுகின்றார்
பண்பல செய்கின்றாய் பாஞ்சசன்னியமே!

30. பதினாறாமாயிரவர் தேவிமார் பார்த்திருப்ப
மதுவாயில் கொண்டாற்போல் மாதவன் தன் வாயமுதம்
பொதுவாக உண்பதனைப் புக்கு நீ உண்டக்கால்
சிதையாரே உன்னோடு? செல்வப்பெருஞ் சங்கே!

8. மேகவிடு தூது

31. விண்நீலம் மேலாப்பு விரித்தாற் போல மேகங்காள்
தெண் நீர் பாய் வேங்கடத்து என் திருமாலும் போந்தானோ
கண்ணீர்கள் முலைக்குவட்டில் துளி சோரச் சோர்வேனை
பெண்ணீர்மை ஈடு அழிக்கும் இது தமக்கு ஓர் பெருமையே.

32. மாமுத்தம் நிதி சொரியும் மாமுகில்காள் வேங்கடத்துச்
சாமத்தின் நிறம் கொண்ட தாளாளன் வார்த்தை என்னே
காமம் தீ உள்புகுந்து கதுவப்பட்டு இடைக்கங்குல்
ஏமத்து ஓர் தென்றலுக்கு இங்கு இலக்காய் நான் இருப்பேனே!

33. மதயானை போல் எழுந்த மாமுகில்காள் வேங்கடத்தைப்
பதியாக வாழ்வீர்காள் பாம்பணையான் வார்த்தை என்னே
கதி என்றும் தானாவான் கருதாது ஓர் பெண் கொடியை
வதை செய்தான் என்னும் சொல் வையகத்தார் மதியாரே.

Koviloor Digital Library

9. பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள்

34. துங்கம் மலர் பொழில் சூழ் திருமாலிருஞ்சோலை நின்ற
செங்கண் கருமுகிலின் திருவுருப்போல் மலர்மேல்
தொங்கிய வண்டினங்காள்! தொகுபூஞ்சுனைகாள்! சுனையில்
தங்கு செந்தாமரைகாள்! எனக்கு ஓர் சரண் சாற்றுமினே.

35. நாறுநறும் பொழில் மாலிருஞ்சோலை நம்பிக்கு நான்
நூறு தடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து பராவி வைத்தேன்
நூறு தடா நிறைந்த அக்காரவடிசில் சொன்னேன்
ஏறு திருவுடையான் இன்று வந்து இவை கொள்ளுங்கொலோ?

36. கோங்கு அலரும் பொழில் மாலிருஞ்சோலையில்
கொன்றைகள் மேல்
தூங்கு பொன்மாலைகளோடு உடனாய் நின்று தூங்குகின்றேன்
பூங்கொள் திருமுகத்து மடுத்து ஊதிய சங்கு ஒலியும்
சார்ங்கவில் நாண் ஒலியும் தலைப்பெய்வது
எஞ்ஞான்று கொலோ?

10. நரக வேதனை—விரக வேதனை

37. முல்லைப் பிராட்டி! நீ உன் முறுவல்கள் கொண்டு
அல்லல் விளைவியேல் ஆழிநங்காய்! உன் அடைக்கலம்
கொல்லை அரக்கியை மூக்கறிந்திட்ட குமரனார்
சொல்லும் பொய்யானால், நானும் பிறந்தமை பொய்யன்றே.

38. நடமாடித் தோகை விரிக்கின்ற மா மயில்காள் உம்மை
நடமாட்டம் காணப் பாவியேன் நான் ஓர் முதல் இலேன்
குடமாடு கூத்தன் கோவிந்தன் கோமிறை செய்து எம்மை
உடைமாடு கொண்டான் உங்களுக்கு இனி ஒன்று போதுமே!

Koviloor Digital Library

39. மழையே! மழையே! மண்புறம் பூசி உள்ளாய் நின்ற
மெழுகு ஊற்றினாற் போல ஊற்றும் நல் வேங்கடத்துள் நின்ற
அழகப்பிரானார் தம்மை என் நெஞ்சத்தகம்படத்
தழுவிநின்று என்னைத் தகைத்துக்
கொண்டு ஊற்றவும் வல்லையே?

11. அரங்கா! அநீதி! அநீதி!

40. எழில் உடைய அம்மனைமீர் என் அரங்கத்து இன்னமுதர்
குழலழகர் வாயழகர் கண்ணழகர்—கொப்பூழில்
எழுகமலப் பூ அழகர் அம்மானார் என்னுடைய
கழல்வளையைத் தாமும் கழல்வளையே ஆக்கினாரே!

41. பொல்லாக் குறள் உருவாய்ப் பொற்கையில் நீரேற்று
எல்லா உலகும் அளந்து கொண்ட எம்பெருமான்
நல்லார்கள் வாழும் நளிர் அரங்க நாகணையான்
இல்லாதோம் கைப்பொருளும் எய்துவான் ஒத்து உளனே!

42. கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரிநீர்
செய்புரள ஓடும் திரு அரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான்மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொரும் கொண்டாரே!

12. கண்ணனிடம் உய்த்திடுமின்!

43. நாணி இனி ஓர் கருமமில்லை
நால் அயலாரும் அறிந்தொழிந்தார்
பாணியாது என்னை மருந்து செய்து
பண்டு பண்டு ஆக்க உறுதிர் ஆகில்
மாணி உருவாய் உலகளந்த மாயனைக் காணில் தலை மறியும்
ஆணையால் நீர் என்னைக் காக்க வேண்டி
ஆய்ப்பாடிக்கே உய்த்திடுமின்

Koviloor Digital Library

44. தந்தையும் தாயும் உற்றாரும் நிற்கத்
தனிவழி போயினாள் என்னும் சொல்லு
வந்த பின்னைப் பழி காப்பரிது மாயவன்
வந்து உருக்காட்டுகின்றான்
கொந்தளமாக்கிப் பரக்கழித்துக்
குறும்பு செய்வான் ஓர் மகனைப் பெற்ற
நந்தகோபாலன் கடைத்தலைக்கே
நள் இருள் கண் என்னை உய்த்திடுமின்.

45. அங்கைத் தலத்திடை ஆழிகொண்டான்
அவன் முகத்தன்றி விழியேன் என்று
செங்கச்சுக் கொண்டு கண் ஆடைஆர்த்திச்
சிறு மானிடவரைக் காணில் நாணும்
கொங்கைத் தலம் இவை நோக்கிக் காணீர்
கோவிந்தனுக்கு அல்லால் வாயில் போகா
இங்குத்தை வாழ்வை ஒழியவே போய்
யமுனைக் கரைக்கு என்னை உய்த்திடுமின்

13. வாட்டத்தைத் தணிப்பீர்

46. கண்ணன் என்னும் கருந்தெய்வம் காட்சிப் பழகிக் கிடப்பேனை
புண்ணிற் புளி பெய்தாற் போலப் புறநின்று அழகு பேசாதே
பெண்ணின் வருத்தம் அறியாப் பெருமான் அரையில் பீதக
வண்ண ஆடைகொண்டு என்னை வாட்டம் தணிய வீசீரே!

47. ஆரே உலகத்து ஆற்றுவார்? ஆயர்பாடி கவர்ந்துண்ணும்
கார் ஏறு உழக்க உழக்குண்டு
தளர்ந்தும் முறிந்தும் கிடப்பேனை
ஆரா அமுதம் அனையான் தன் அமுத வாயில் ஊறிய
நீர்தான் கொணர்ந்து புலராமே பருக்கி இளைப்பை நீக்கீரே.

Koviloor Digital Library

48. நடை ஒன்றில்லா உலகத்து நந்தகோபன் மகன் என்னும்
கொடிய கடிய திருமாலால் குளப்புக் கூறு கொளப்பட்டு
புடையும் பெயரகில்லேல நான் போட்கன் மிதித்த அடிப்பாட்டில்
பொடித்தான் கொணர்ந்து பூசீர்கள்
போகா உயிர் என்னுடம்பையே.

14. கண்டேன், களி கொண்டேன்

49. பட்டிமேய்ந்து ஓர் கார் ஏறு பலதேவர்க்கு ஓர் கீழ்க்கன்றாய்
இட்டீறிட்டு விளையாடி இங்கே போதரக் கண்டீரே
இட்டமான பசுக்களை இனிது மறித்து நீருட்டி
விட்டுக் கொண்டு விளையாட விருந்தாவனத்தே கண்டோமே!

50. கார்த்தண் கமலக்கண் என்னும் நெடுக்கயிறு படுத்து என்னை
ஈர்த்துக் கொண்டு விளையாடும் ஈசன் தன்னைக் கண்டீரே
போர்த்த முத்தின் குப்பாயப் புகர்மால் யானைக் கன்றே போல்
வேர்த்து நின்று விளையாட விருந்தாவனத்தே கண்டோமே!

51. தருமம் அறியாக் குறும்பனைத்
தன் கை சார்ங்கம் அதுவே போல்
புருவ வட்டம் அழகிய பொருத்தமிலியைக் கண்டீரே
உருவு கரிது ஆய் முகம் செய்து ஆய்
உதயம் பருப்பதத்தின் மேல்
விரியும் கதிரே போல்வானை விருந்தாவனத்தே கண்டோமே!

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்

●●●

Koviloor Digital Library

ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாணம்

மைதிலி வேணுகோபால்

நர்மதா வெளியீடு